# எபிரெயர்

## அதிகாரம் – 6, பாகம் 2

---

## HEBREWS, CHAPTER SIX #2

57-0908 E

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## எபிரெயர் அதிகாரம்-6, பாகம்- 2

இந்த செய்தியானது ஏழாம் தூதன் (வெளி. 10:7) சகோதரன். வில்லியம் மரியன் பிரான்ஹாம் அவர்களால் 1957–ம் வருடம், செப்டம்பர் மாதம், 8–ம் தேதி பிரன்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன் வில், இந்தியானா அமெரிக்காவில் அளிக்கப்பட்டது. ஒலிநாடா ஒலிப்பதிவிலிருந்து அச்சிடப்பட்ட ஆங்கில புத்தகத்திலிருந்து ஏட்டிதழின் பக்கத்திற்கு சொல் வடிவமான செய்தியாக மாற்ற ஒவ்வொரு முயற்சியும் துல்லியமாக செய்யப்பட்டு, இப்புத்தகம் முழுமையாக அச்சிடப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது.

வெளியிடப்பட்டது: அக்டோபர் 2016

# எபிரெயர்

## (HEBREWS)

## அதிகாரம் – 6, பாகம் 2

## ஞாயிறு மாலை, செப்டம்பர் 8, 1957
## பிரன்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன்வில், இன்டியானா, அமெரிக்கா

அவருடைய விலையேறப்பெற்ற வார்த்தையை ஆராயும்படிக்கு...

**218.** நான் சற்று முன்னர் உள்ளே வந்த போது, நான் இரண்டு வேதாகமங்களை எடுத்துக் கொண்டு வந்தேன். இங்கே பின்னால் அமர்ந்துள்ள ஒரு பெண்மணியோடு எனக்கு ஒரு சிறு பேட்டி இருந்தது. நான் இந்த இரண்டு வேதாகமங்களிலிருந்தும் எடுத்துப் பிரசங்கித்திருப்பதினால், இது நல்ல ஒரு பாடப்பொருளாய் இருக்கப் போகிறது என்று நான் அந்த பெண்மணியினிடத்தில் கூறியிருந்தேன். ஆனால் இது ஒரு மூல கிரேக்க வேதாகமமாக (Greek lexicon) உள்ளது. எனவே நான் இதிலிருந்து இன்றிரவு ஒரு காரியத்தை வாசிக்க விரும்புகிறேன். இது ஒரு – இது ஒரு... இது வார்த்தைக்கு வார்த்தை மூல கிரேக்க பாஷையிலிருந்து ஆங்கிலத் துக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இது எனக்கு தொடர்ந்து மிகவும் உதவியாகவே இருந்து வருகிறது. நான் இதிலிருந்து ஒரு காரியத்தை அப்படியே வாசிக்க விரும்புகிறேன், ஏனென்றால் நாம் இப்பொழுது இந்த எபிரெய புத்தகத்தை ஆய்ந்து படித்துக் கொண் டிருக்கிறோம். எனவே நாம் இப்பொழுது உண்மையாகவே ஆழமான பொருள்களுக்குள் வந்து கொண்டிருக்கிறோம்.

**219.** நான் ஒரு சில நிமிடங்களுக்கு முன்னால், சகோதரன் நெவில் அவர்களிடத்தில், "ஜனங்கள் தங்களுடைய தலையைச் சொரிந்து, 'நான் (நாங்கள்) அதை விசுவாசிக்கிறதில்லை' என்று கூறும்



அந்த பாகத்துக்குள்ளாகவே நாம் சென்று கொண்டிருக்கிறோம்" என்று கூறினேன். புரிகிறதா? அந்த விதமான பாகத்துக்குள்ளாகவே நாம் செல்கிறோம். அங்கு தான் நாம் அதை விரும்புகிறோம்.

**220.** யாரோ ஒரு ஊழியக்காரர் என்னிடத்தில் கூறினார், அவர், "நல்லது, (இப்பாடத்தில்) ஏராளமானோர் தங்களுடைய தலையை சொரிந்து கொள்வார்கள் என்று நான் ஊகிக்கிறேன்" என்று அவர் கூறினார்.

**221.** நானோ, "அந்த விதமாகத்தான் நாங்கள் அதைச் செய்ய விரும்புகிறோம்" என்று கூறினேன். புரிகிறதா?

**222.** வேதம் ஒரு பொருளை மாத்திரமே உடையதாக இருக்க முடியும். அது இரண்டு அர்த்தங்களை உடையதாக இருக்க முடியாது. வேதாகமத்தின் ஒரு பாகம் ஒரு காரியத்தைக் கூற, வேதாகமத்தின் மற்றொரு பாகமோ மற்றொன்றைக் கூறுமேயானால், அப்பொழுது ஏதோவொன்று தவறாகும். புரிகிறதா? அது எல்லா வழியினூடாகவும் ஒரே காரியத்தையே கூற வேண்டும். ஆனால் வேதாகம ஆய்வில், "இவைகளை ஞானிகளின் கண்களுக்கும் கல்விமான்களின் கண் களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினார்" என்பது நினை விருக்கட்டும், ஏனென்றால் இது ஒரு ஆவிக்குரிய புத்தகமாயுள்ளது.

**223.** இது ஒரு மேற்கத்திய புத்தகமல்ல. இது ஒரு கிழக்கத்திய புத்தகமாகும். இதை ஒரேயொருவர் மாத்திரமே வியாக்கியானிக்க முடியும். அது பரிசுத்த ஆவியானவராகும். நாம் ஒவ்வொருவரும், "நாம் அதில் என்ன விசுவாசிக்கிறோம் என்பதை பரிசுத்த ஆவியானவரே நமக்கு கூறிக்கொண்டிருக்கிறார்" என்பதையே கூற விரும்புகிறோம் என்பதை நான் அறிவேன். நல்லது, இப்பொழுது, ஒவ்வொரு வேத வாக்கியமும் முரண்பாடின்றி ஒரேவிதமாக அமைந்திருக்குமானால், அப்பொழுது அது பரிசுத்த ஆவியாயுள்ளது. அது சரிவர பொருத்தமாய் அமைந்திராமல், *இங்கே* ஒரு கருத்து வேறுபாடும், *இங்கு* (சற்று) கருத்து வேறுபாடும் இருக்குமாயின், அப்பொழுது நம்முடைய நம்பிக் கையில் ஏதோ காரியம் தவறாயுள்ளது. ஓ, அது ஒரு ஆச்சரியமான புத்தகமாயுள்ளது.

**224.** இப்பொழுது நாம் ஆய்ந்து படித்துக் கொண்டிருக்கையில், நீங்கள் இதைச் செய்யும்படி நான் விரும்புகிறேன். இப்பொழுது கர்த்தருக்குச் சித்தமானால், நாங்கள் வயோமிங் (Wyoming) என்ற

இடத்திற்கு அதிகாலையில் புறப்பட்டுச் செல்ல வேண்டியுள்ளது. எங்களுக்காக ஜெபியுங்கள்.

அடுத்த வாரம், இங்கே சகோதரன் கிரஹாம் ஸ்நெல்லிங்... அவர் இங்கு இருக்கிறார். நான் ஒரு சில நிமிடங்களுக்கு முன்னர் அவர் அறிவிப்பு செய்ததைக் கேட்டேன். இந்த சபை அவருடைய எழுப்புதல் (கூட்டத்திற்கு) முழு ஒத்துழைப்பு அளிக்க உள்ளது. தேவன் அவருக்கு அதிகமான – அளவுக்கு அதிகமான பெரிய எழுப்புதலை அளிக்கும்படி நாங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம். சகோதரன் கிரஹாம் அவர்கள் இங்கு சார்ல்ஸ்டவுனிலுள்ள சகோதரன் ஜூனியர் கேஸ் அவர்களுக்காக ஒரு எழுப்புதல் கூட்டத்தை நடத்தினார். அப்பொழுது அங்கே நூறு பேர் கிறிஸ்துவை ஏற்று, மனமாற்றம் அடைந்தனர் என்று நான் நம்புகிறேன். (யாரோ ஒருவர், "எண்பத்து நான்கு" என்று கூறுகிறார்.) 84 பேர் மனமாற்றம் அடைந்திருந்தனர். ஆகையால் அதற்காக நாம் தேவனுக்கு துதி செலுத்துகிறோம். (ஆனால்) இங்கே இந்த இடத்தில், 584 பேர் (கிறிஸ்துவை ஏற்று) மனமாற்றம் அடைவார்கள் என்று நாம் நம்புகிறோம்.

**225.** சகோதரன் கிரஹாம் என்னை இன்று காலை சந்தித்து, "இப்பொழுது, சகோதரன் பில் அவர்களே, நான் இந்த கூடாரத்திற்கு எதிராக மற்றொரு ஊழியத்தை தொடங்குவதற்கு இங்கே இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்பதைக் குறித்து நான் நிச்சயமாயிருக்கிறேன், ஏனென்றால், நான் இந்த கூடாரத்தின் ஒரு பாகமாக இருக்கிறேன்" என்று கூறினார். அவர் இங்கே ஒரு எழுப்புதல் கூட்டத்தை நடத்த விரும்புவதாக அவர் தன்னுடைய இருதயத்தில் உணருகிறார், அதைச் செய்யும்படி கர்த்தர் அவரை வழிநடத்துகிறார். அவர் கிறிஸ்துவை ஏற்று மனமாற்றம் அடைந்தவர்களை அழைக்கிறார், மேலும் ஒரு சபையும் உண்டு, "எனவே மனமாறிய நீங்கள் இந்த சபைக்கு செல்ல விரும்பினால், இங்கே ஒரு சபை உள்ளது" என்று அங்கு திரளாக அனுப்புகிறார்.

**226.** கிறிஸ்தவர்களாய் இருக்கின்றபடியால், நம்மால் முடிந்த ஒவ்வொரு காரியத்தோடும் அவருக்கு ஆதரவளிப்பது நம்முடைய கடமையாயுள்ளது. சகோதரன் கிரஹாம் அவர்களை கர்த்தர் ஆசீர் வதிப்பாராக. தேவனுடைய இராஜ்யத்திற்கான இழக்கப்பட்ட ஆத்துமாக் களுக்காக நம்மால் எந்த வழியிலாவது முழு ஒத்துழைப்போடு



அவருக்கு உதவும்படிக்கு, இந்த சபையிலிருந்து, முழு அனுமதியோடு இங்கே சகோதரன் கிரஹாம் அவர்களுடைய கூட்டத்திற்கு வரும்படி, நீங்கள் ஒவ்வொருவரும் உள்ளன்போடு அழைக்கப்படுகிறீர்கள்.

**227.** சகோதரன் கிரஹாம், கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து, உங்களுக்குப் பெரிய கூட்டங்களை அளிப்பாராக. அவர் எப்பொழுது முடிக்கப் போகிறார் என்று அவருக்குத் தெரியாது. அவர் ஆரம்பித்துக் கொண்டிருக்கிறார். ஆகையால், சகோதரன் கிரஹாம் என்னைப் போன்று, அதில் அநேக இன்பங்களையும் இடர்பாடுகளையும் (ups and downs) உடையவராயிருக்கிறார். அந்த விதமாகவே வாழ்க்கை ஓடுகிறது. நீங்கள் இடர்பாடுகளினூடாகச் சென்ற பிறகு, அது உங்களுக்கு ஏற்படுகின்ற இன்பங்களினால் உங்களை உற்சாகப் படுத்துகிறது. ஒரு மனிதன் வீழ்ச்சியடைந்து அங்கே கீழே விழுந்து கிடப்பானேயானால், அவன் ஒரு கோழையாயிருக்கிறான். (ஆனால்) ஒரு மனிதன் மீண்டும் எழுந்திருக்க முயற்சிக்கும் போதே எனக்கு நம்பிக்கை உண்டாகிறது. அது சரியே. நான் என்ன பொருட்படுத்திக் கூறுகிறேன் என்பதை உங்களால் விளங்கிக் கொள்ள முடியும் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். இப்பொழுது வருகின்றதான இந்த வாரக் (கூட்டத்தை) மறந்து விடாதீர்கள்.

**228.** இப்பொழுது, இந்த எபிரெய புத்தகத்தில் இன்றிரவு நாம் பின்னணியை எடுத்துக் கூறப் போவதில்லை.

**229.** இப்பொழுது, கர்த்தருக்குச் சித்தமானால், அடுத்த ஞாயிறு சகோதரன் நெவில் அறிவிப்பார். எனவே நாம் அடுத்த ஞாயிற்றுக் கிழமை கூட்டத்துக்காக நாம் நேரத்தோடு வருவோமானால், இங்குள்ள சகோதரன் காக்ஸ் அல்லது வேறு யாராவது சிலர் அவர் அதை அறிந்து கொள்ளும்படி செய்வார்கள். அவர் அதை வானொலியில் அறிவிப்பார். மேலும் நாம்... நீங்கள் எல்லோரும் மற்றும் உங்கள் அண்டை வீட்டார் யாவரும் இப்பொழுது அவருடைய வானொலி நிகழ்ச்சியைக் கேட்கும்படி, அழைப்பு விடுக்கிறோம். நான் உண்மை யாகவே நெவில் அவர்களையும் நால்வர் குழு பாடுவதையும், அவர் களுடைய பிரசங்கத்தையும் கேட்பதற்கு மகிழ்ச்சியடைகிறேன். அவர் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறார் என்ற காரணத்தினால், நான் அதைக் கூறவில்லை. நான் அதை அவ்வாறு கூறுவேனேயானால், அப்பொழுது நான் அதை இருதயத்திலிருந்து பொருட்படுத்திக்

கூறவில்லை என்று அர்த்தமாகும், அப்பொழுது நான் ஒரு மாய்மாலக் காரனாயிருப்பேன். அது சரியே. அப்படியானால் நான் மனந்திரும்ப வேண்டும். ஆனால் நான் அதை பொருளுணர்ந்து கூறுகிறேன். சரியாகச் சொன்னால், அவர் மரித்த பின்பு நான் அவருக்கு ஒரு பெரிய மலர் வளையம் சூட்டுவதை விட இப்பொழுது அவருக்கு ஒரு சிறு ரோஜா மலர் தரவே (விரும்புகிறேன்).

**230.** ஒரு சமயம் நான் அங்கேயிருந்த வாசலிலிருந்து வெளியே நடந்து சென்று கொண்டிருந்த போது, ஒரு பெண்மணி அருகில் நடந்து வந்து, "ஓ, சகோதரன் பிரன்ஹாம், நான் எப்படியாக அந்த செய்தியைக் கேட்டு மகிழ்ந்தேன்!" என்று கூறினாள்.

**231.** அதற்கு நானோ, "உங்களுக்கு நன்றி" என்றேன். அது என்னை நல்லவிதமாக உணரச் செய்தது.

**232.** வேறு யாரோ ஒருவர் என்னருகில் வந்து, "சகோதரன் பிரன்ஹாம், நான் அந்த செய்தியைக் கேட்டு மகிழ்ந்தேன்" என்றார்.

**233.** அதற்கும் நான், "உங்களுக்கு நன்றி" என்றேன்.

**234.** தேசத்தின் வடபாகத்திலிருக்கிற ஒரு மாநிலத்திலிருந்து இங்கு வந்திருக்கிற ஒரு சிறு பிரசங்கியார் அங்கிருந்தார், அவர், "தேவனுக்கு ஸ்தோத்திரம், ஜனங்கள் அதைப் போன்று என் பேரில் புகழ்ச்சியாய் பேசுவதை நான் விரும்புகிறதில்லை" என்று கூறினார்.

**235.** அப்பொழுது நானோ, "நான் அதைக் கேட்க விரும்புகிறேன்" என்று கூறினேன். மேலும் நான், "உங்களுக்கும் எனக்கும் இடையே ஒரு வித்தியாசம் தான் உண்டு. நான் அதைக் குறித்து நேர்மையுள்ளவனாக இருக்கிறேன்" என்று கூறினேன். அது சரியே. நாம் எல்லோருமே நம்மைக் குறித்துக் கூறப்படுகின்ற அருமை யான வார்த்தைகளைக் கேட்க விரும்புகிறோம். அதைக் குறித்து அருமையான வார்த்தைகளைக் கூறுவது அருமையாய் உள்ளது என்றே நான் – நான் எண்ணுகிறேன். உங்களைக் குறித்து அருமையான வார்த்தைகளை யாராவது கூற வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நீங்கள் யாரோ ஒருவரைக் குறித்து கொஞ்சம் அருமையான வார்த்தை களைக் கூறுங்கள். அந்த விதமாகவே அதைச் செய்ய வேண்டும், அப்பொழுதே நீங்கள் உங்களால் ஒவ்வொருவரைப் பற்றியும் கூற



முடிந்த அருமையான காரியங்களை எப்பொழுதும் கூறுவீர்கள். அதுவே சக்கரத்தை நல்ல முறையில் சுழலச் செய்கிறது.

**236.** இப்பொழுது, கர்த்தருக்குச் சித்தமானால், அடுத்த ஞாயிற்றுக்கிழமை நாம் தேவனுடைய இந்த மகத்தான இரகசியங் களுக்குள் மிக மிக ஆழமாகச் சென்று பார்க்கப் போகிறோம் என்பதே இதைக் குறித்து என்னுடைய கருத்தாய் உள்ளது. நாம் மெல்கி சேதேக்கு என்ற (பாடத்துக்குள்ளாகச்) சென்று, அவர் யாராயிருந்தார் என்றும், அவர் எங்கிருந்து வந்தார் என்றும், அவர் எங்கே சென்றார் என்றும், அவருக்கு என்ன சம்பவித்தது என்றும், மற்றும் மெல்கி சேதேக்கைக் குறித்த எல்லாவற்றையுமே பார்க்கப் போகிறோம்.

**237.** இப்பொழுதோ, கடந்த புதன் கிழமை இரவு, சகோதரன் நெவில் அவர்கள் அதிகாரத்தின் முடிவில் நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் ஒப்புயர்வற்ற தெய்வீகத் தன்மை மற்றும் ஆசாரியத்துவத் தின் பேரில் பேசினார். (எபிரெய நிருபத்தின்) துவக்கத்திலோ, "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன் இந்தக் கடைசி நாட்களில் அவருடைய குமாரன் கிறிஸ்து இயேசு மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்" என்றே ஆரம்பிக்கிறது.

**238.** அதன் பின்னர் அவர் தொடர்ந்து, எழுதிக் கொண்டே வந்து, அவர் யாராய் இருந்தார் என்ற மாதிரியைக் கூறத் தொடங்கி, பின்னர் 5–ம் அதிகாரத்திற்கு, 5–ம் அதிகாரத்தின் முடிவிலே அவர் அவரைக் கொண்டு வருகிறார்.

**239.** அதன் பின்னர் 6–ம் அதிகாரத்தின் துவக்கத்திலோ, இதை இந்த காலையில் நாம் நம்முடைய பாடத்தில் கற்றறிந்தோம்.

***ஆகையால், கிறிஸ்துவைப்பற்றி சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு,... பூரணராகும்படி கடந்து போவோமாக.***

**240.** எத்தனை பேர் பூரணமாகுதல் என்பதன் பேரிலான செய்தியை கேட்டு மகிழ்ந்தீர்கள்? (சபையார், "ஆமென்" என்று கூறுகின்றனர் – ஆசிரியர்.) "பூரணராகும்படி கடந்து போவோமாக." அதுவே இந்தக் காலையில் எபிரெயர் 6–ம் அதிகாரத்தில் உள்ள நம்முடைய செய்தியாக இருந்தது.

**241.** இப்பொழுது, நாம் அந்த உண்மையான பாகத்துக்குச் சென்று துவங்கும்படியாக, அந்த இடத்திற்குள்ளாகச் செல்ல அணுகிக் கொண்டிருக்கிறோம். ஓ, நாம் யாவரும் இந்த காரியங்களின் பேரில் அதாவது, கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையின் பேரிலும், அவர் தேவ குமாரனாய் இருப்பதின் பேரிலும், அவர் எப்படி தேவனோடு இருந்தார் என்பதின் பேலும், தேவன் எப்படி அவரோடு இருந்தார் என்பதின் பேரிலும், எப்படி அவர் தேவனுக்குள் இருந்தார் என்றும், எப்படி தேவன் அவருக்குள் இருந்தார் என்பன போன்றவைகளின் பேரில் ஒத்துப் போக முடியும். நாம் யாவரும் அதன் பேரில் ஒத்துப் போகிறோம். ஆனால், இப்போது, இங்கிருந்து நாம், எப்படி ஒத்துப் போகப்போகிறோம் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகையால் அது என்னவாக இருந்தாலும், ஒவ்வொரு சில இரவுகளிலும் நீங்கள் அதைக் குறித்து என்ன கருதுகிறீர்கள் என்பதைக் குறித்து, எனக்கு ஒரு சிறு குறிப்பு எழுதி, என்னிடத்தில் கூறும்படியான ஒரு வாய்ப்பினை நாங்கள் உங்களுக்கு அளிக்கப் போகிறோம்.

**242.** அப்பொழுது நான் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய தாய் இருக்கும். என்னால் அவைகளுக்கு பதிலளிக்க முடியவில்லை என்றால், அப்பொழுது, "நான் சகோதரன் நெவில், நீர் அதைக் குறித்து, என்ன நினைக்கிறீர்" என்று கேட்பேன். பின்னர் நான், "அதோ அவர் இருக்கிறார். அவரே அதற்கு பதிலளிக்கட்டும்" என்பேன். (சகோதரன் நெவில், "அப்பொழுது நான் கிரேக்க வேதாகத்திலிருந்து வாசிப்பேன்" என்று கூறுகிறார்.) அப்பொழுது அவர், மூல கிரேக்க வேதாகமத்தி லிருந்து வாசித்து, காண்பிக்கப் போகிறார். நானும் கூட அதை வாசிக்கும்படியான நேரமாக உள்ளது என்று நான் நினைக்கிறேன்.

**243.** ஆனால் இப்பொழுது, நாம் அமர்ந்து, உண்மையான உத்தமத்தோடு இருப்போம். நாம் உண்மையாகவே, ஒரு நோக்கத் திற்காகவே வருகிறோம். அது கற்றுக் கொள்வதற்காகவே ஆகும். நானும் கூட கற்றுக்கொள்ள விரும்புகிறேன். வேதத்திலோ, "அது... வேதவாக்கியங்கள் சுயதோற்றமான பொருளை உடையதாயிராது" என்று எழுதப்பட்டுள்ளது. அது, வேதவாக்கியத்தை வேதவாக்கியமே வியாக்கியானிக்க வேண்டுமென்று, பொருள்படுத்துகிறது. புரிகிறதா? ஒவ்வொரு வேதவாக்கியமும் மற்ற வேதவாக்கியத்தை வியாக்கியா னிக்க வேண்டும். அது முழு வேதாகமத்தினூடாகவும், ஒரு மகத்தான காரியத்தை உண்டு பண்ணும்படியாய் இருக்க வேண்டும். காரணம்



தேவனால் மாற முடியாது, ஏனென்றால், அவர் மாற முடியாத தேவனாய் இருக்கிறார்.

**244.** இப்பொழுது, "விட்டு..."

**ஆகையால், கிறிஸ்துவைப் பற்றி சொல்லிய மூல உபதேசங்களை நாம் விட்டு... பூரணராகும்படி கடந்து போவோமாக.**

**245.** பவுல் கூறுகிற அந்த காரியங்கள் எனக்குப் பிடிக்கும். பவுல் ஒரே இடத்தில் நீண்ட நேரம் தரித்திருக்க விரும்பின நபராக ஒருபோதும் இருக்கவேயில்லை. அவன் ஆழமாய் செல்லவே விரும்பினான். ஒருமுறை, வேதத்தில் அவன், "நான் பின்னானவை களை மறந்து, பரம அழைப்பின் பந்தைய பொருளுக்கான இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்றான். பார்த்தீர்களா? இவன் இலக்கை நோக்கி தொடருகிறான்.

**246.** இங்கே அவன் கூறினதோ:

இப்பொழுது ***கிறிஸ்துவைப் பற்றி சொல்லிய மூல உபதேச வசனங்களை*** மறந்து, (அவர் யாராயிருந்தார்? அவர் என்னவாயிருந்தார்?), **...பூரணராகும்படி கடந்து போவோமாக.**

**247.** இப்பொழுது நாம், முதலில், "நாம் பூரண சற்குணரா யிருக்க முடியுமா?" என்று நாம் கண்டறிய விரும்பினோம். இயேசு, "தேவன் பூரண சற்குணராயிருந்தது போல, நாமும் இருக்க வேண்டும்" என்று மத்தேயு 5–ம் அதிகாரம் 28–ம் வசனத்தில் கூறினதை இந்த காலையில் வேதவாக்கியங்களில் நாம் கண்டறிந்தோம். அவ்வாறு பூரண சற்குணராய் இருக்கவில்லையென்றால், நாம் செல்லவே மாட்டோம்.

**248.** ஆகையால் நாம் ஒவ்வொருவரும், "பாவத்தில் பிறந்து, அக்கிரமத்தில் உருவாகி, பொய் பேசுகிறவர்களாய் உலகத்தில் வந்தோம்" என்று நாம் கண்டறிந்தோம். நம்மைக் குறித்து ஆரோக்கிய மான ஒரு நல்ல காரியமும் இல்லாதிருக்கும் போது, நாம் எப்படி பூரண சற்குணராயிருக்க முடியும்?

**249.** இப்பொழுது, நாம் இங்கே கண்டறிவது என்னவென்றால், வேதவாக்கியத்தை வேதவாக்கியத்தைக் கொண்டே எடுத்துப் படிக்கும்

போது, "இயேசு ஒரே பலியினாலே, தம்முடைய சபையை என்றென் றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்பதைக் கண்டறிகிறோம். அவர்... அப்படியானால், நாம் கிறிஸ்துவின் மூலமாக பரிபூரணமா யிருக்கிறோம். நாம் கிறிஸ்துவின் மூலமாக நியாயத்தீர்ப்பிலிருந்து விடுதலையாகி இருக்கிறோம். நாம் கிறிஸ்துவின் மூலமாக ஒருபோதும் மரிக்கவே மாட்டோம். நாம் கிறிஸ்துவின் மூலமாக மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனைக் கண்டடைந்தோம்; எந்த சபையினூடாகவும் அல்ல, எந்த ஸ்தாபனத்தினூடாகவும் அல்ல, எந்த அற்புதமான காரியத்தினாலும் அல்ல, அந்நிய பாஷைகள் பேசுவதின் மூலமாய் அல்ல, சத்தமிடுவதின் மூலமாய் அல்ல, குலுக்குவதின் மூலமாய் அல்ல, ஆவியில் நடனமாடுவதின் மூலமாய் அல்ல, ஆனால் கிருபையினாலே ஜீவனைக் கண்டடைந்தோம்.

**250.** தேவன் தமக்கு சித்தமானவர்களை அழைக்கிறார். அவையாவும் தெரிந்து கொள்ளுதலின் மூலமாகவே என்பதை நாம் கண்டறிகிறோம். அது, "இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறவ னாலும் அல்ல, விரும்புகிறவானாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல; இரங்குகிற தேவனாலேயாம்" என்பதை நாம் கண்டறிகிறோம். "தேவன் ஒருவனை முதலில் இழுத்துக் கொள்ளாவிட்டால், அவன் இயேசு வினிடத்தில் வர மாட்டான்." ஆகையால் எப்படியாயினும், அதனோடு உங்களுக்கு என்ன சம்பந்தம் உள்ளது? உங்களுக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது. நீங்கள் மொத்தத்தில் காட்சிக்கு வெளியே இருக்கிறீர்கள்.

**251.** மனிதன் ஒருபோதும் தேவனைத் தேடவில்லை என்பதை நாம் கண்டறிந்தோம். அது தேவன் மனிதனைத் தேடுகிறதாய் உள்ளது. அப்படியானால் தேவன் மாத்திரமே நித்திய ஜீவனின் ஆதாரமாய் இருக்கிறார் என்பதை நாம் கண்டறிந்தோம். நித்தியமாய் இருக்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் துவக்கமும் கிடையாது முடிவும் கிடையாது என்பதை நாம் கண்டறிந்தோம். ஆகையால், நரகத்திற்கு ஒரு துவக்கம் உண்டு என்றும் அதற்கு ஒரு முடிவு உண்டு என்றும் நாம் கண்டறிகிறோம். அங்கு... எவருமே அதாவது நரகம் என்றென் றைக்குமாய், என்றென்றைக்குமாய், ஆம், என்றென்றைக்குமாய் இருக்கிறது என்று கூறவே முடியாது. ஆனால் அது நித்தியமானதல்ல.



**252.** *சதாகாலம்* என்று குறிப்பிடப்பட்டுள்ளது "ஒரு குறிப்பிட்ட காலம்" என்பதாகும். வேதம், "சதாகாலம்" என்று கூறுகிறது. நீங்கள் அந்த வார்த்தையை எடுத்துப் பார்த்தால், *சதாகாலம்* என்பது "ஒரு குறிப்பிட்ட காலம்" என்று பொருள்படுகிறதல்லவா? என்பதைக் கண்டறியலாம். யோனா மீனின் வயிற்றில் "என்றென்றும்" இருந்ததாக அவன் கூறினான். மற்ற அநேக வேதவாக்கியங்களும் *என்றென்றும்* என்பதை "ஒரு குறிப்பிட்ட கால அளவு" என்று மாத்திரமே பொருட் படுத்திக் கூறுகின்றன.

**253.** ஆனால், நித்தியம் என்பது என்றென்றுமானது. அதாவது, என்றென்றுமாய் என்றென்றுமாய் என்றென்றுமாய் என்றென்றுமாய் என்றென்றுமாய் என்பதாகும். அது நித்தியமானதாய் உள்ளது. நரகம் நித்தியமானதல்ல என்பதை நாம் கண்டறிகிறோம். ஆனால் அது குறிப்பிட்ட கால வரையறையைக் கொண்டதாக (forever) உள்ளது. அந்த காரணத்தினால் தான் இப்பொழுது நீங்கள் அந்த வார்த்தை களைக் கவனிக்க வேண்டும். நீங்கள் கவனிக்கவில்லை என்றால், நீங்கள் குழப்பமடைவீர்கள். இப்பொழுது, அந்தக் காரியங்களுக்கு துவக்கமில்லாதிருந்தது என்பதும், முடிவும் இல்லாதிருக்கிறது என்பதும் நினைவிருக்கட்டும். ஆகையால், இயேசு, "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு ஜீவன் உண்டு" என்று கூறினார், என்றென்றைக்குமா? அது சரியாக தொனிக்கிறதா? இல்லையே. "நித்திய ஜீவன் உண்டு." *நித்தியம்* என்ற வார்த்தை "தேவனாய்" உள்ளது. அந்த வார்த்தை மூல கிரேக்க வேதாகமத்தில், சரியாக இங்கே சோயி (Zoe) உங்களுக்குள் இருக்கிற தேவனுடைய ஜீவன் என்றுள்ளது. தேவன் நித்தியமானவராய் இருக்கிறது போலவே நீங்களும் நித்தியமானவர்களாய் இருக்கிறீர்கள், ஏனென்றால், நீங்கள் தேவனையே உங்களுக்குள்ளாகப் பெற்றிருக்கிறீர்கள்.

**254.** உங்களுடைய பழைய சுபாவம், உலகத்தின் சுபாவம் மரித்துப் போய்விட்டது. நீங்கள் ஒரு புது சிருஷ்டியாகி விட்டீர்கள். உங்களுடைய வாஞ்சைகள் தேவன் உங்கள் நாசியிலே சுவாசத்தை ஊதின போது, நீங்கள் பிறந்த போது துவக்கத்தில் கொண்டிருந்த அந்த பழைய ஜீவியத்தின் அந்த மாம்ச பிரகாரமான சுபாவம் மரித்து விட்டது. அதற்கு ஒரு துவக்கம் இருந்தது. அதற்கு ஒரு முடிவும் இருந்தது. அது மரித்துப்போய் என்றென்றைக்குமாய் அந்த பழைய சுபாவத்தோடு ஒழிந்து போய் விட்டது. தேவன் புதிய சுபாவத்தோடு

உள்ளே வந்தார். அப்பொழுது அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, சமாதானம், பொறுமை, சாந்தம், தயவு, முதலியன உட்பிரவேசித்தன; அது மனக்காழ்ப்பு, கோபம், பகைகள், வைராக்கியம், சண்டை மற்றுமுள்ள எல்லா காரியங்களின் ஸ்தானத்தையும் எடுத்துக் கொண்டது. நீங்கள் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்படும் போது, அது அதனுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டது. உங்களுக்கு இது புரிகிறதா? உண்மையாகவே இப்பொழுது கூர்ந்து கவனிக்கிறீர் களா? (சபையார், "ஆமென்" என்று கூறுகின்றனர் – ஆசிரியர்.)

**255.** ஆகையால் கவனியுங்கள். ஒரேயொரு நித்திய ஜீவனின் ரூபம் மாத்திரமே உண்டு. அதைக் கண்டறியுங்கள். அது, தேவன் மாத்திரமே நித்திய ஜீவனை உடையவராய் இருக்கிறார் என்பதே ஆகும். வேதம் அவ்வண்ணமாகவே கூறியுள்ளது. தேவன் மாத்திரமே நித்திய ஜீவனை உடையவராயிருக்கிறார். ஒரு மனிதன் நரகத்தில் என்றென்றுமாய் வேதனைப்படப்போவதாய் இருந்தால், அப்பொழுது அவன் நித்தியமான தேவனை உடையவனாய் இருக்க வேண்டும். ஆனால் நான் கூறுவது அங்கே...

**256.** இப்பொழுது எரிகின்ற ஒரு நரகம் ஒன்று இல்லையென்று நான் கூறிக் கொண்டிருக்கவில்லை என்பது நினைவிருக்கட்டும். அக்கினியும் கந்தகமும் கொண்டு எரிகிற ஒரு நரகம் உண்டு. "அங்கே புழு சாகாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும்," அக்கினியினாலும் கந்தகத்தினாலும் ஒரு ஆக்கினை. அது ஒருக்கால் கோடிக்கணக்கான ஆண்டுகள் நீடித்திருக்கலாம். ஆனால் அதற்கு ஒரு முடிவு இருக்க வேண்டும். நரகம் பிசாசுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டது. ஒவ்வொரு காரியமும் அதே தேவனிடத்தில் தான் ஆதியில் இருந்தது, ஒவ்வொரு காரியமும் தேவனிடத்திலிருந்து தான் வந்தது. அதே ஆவி...

**257.** அன்பின் *ஆவியை* எடுத்துக் கொண்டால், அது சுத்த மான கலப்படமற்ற தேவனுடைய மகத்தான ஊற்றாயிருந்தது. அதிலி ருந்து ஒரு *தாறுமாறாக்கப்பட்ட* அன்பு உண்டானது. அதன் பின்னர் அது *மானிட* அன்பிற்குள்ளாக வருகிறது. அதன் பின்னர் அது *பாலியல்* அன்பிற்குள்ளாக வருகிறது. அதன் பின்னர் அது மற்ற அன்புகளுக்குள்ளாக அன்புகளுக்குள்ளாக, அன்புகளுக்குள்ளாக வந்து, அப்படியே தொடர்ந்து, அது *அசுத்தத்திற்குள்ளாக* மாறுகிற வரையில்



தாறுமாறாகிக் கொண்டே போகிறது. ஆனால் அந்த எல்லா காரியங் களுக்கும் ஒரு துவக்கம் இருந்தது. என்றோ ஒரு நாள் அது நேராகத் திரும்பவும் மூல அன்பிற்குள்ளாகத் திரும்பும்; அது நித்தியமானது; அங்கு இச்சை, மானிட அன்பு, உணர்ச்சிகரமான அன்பு, அந்த எல்லா அன்புகளுமே ஓய்ந்து போய் விடும்.

**258.** இந்த எல்லா பாவனை விசுவாச நம்பிக்கைகளும் ஓய்ந்து போய் விடும். ஒரேயொரு உண்மையான விசுவாசம் தான் உண்டு. மற்ற யாவும் ஓய்ந்து போய் விடும். அவைகள் அந்த உண்மையான ஊற்றிலிருந்து தாறுமாறாக்கப்பட்டவைகளாய் இருந்தன.

**259.** ஆகையால், நரகம், வேதனை, வேதனையோ நித்தியமான தல்ல. பாவத்தின் காரணமாகவே வேதனை கொண்டு வரப்பட்டது. பாவமே வேதனையை அறிமுகப்படுத்தியது. பாவமானது முடிவுறுகின்ற போது, வேதனையும் கூட முடிவுற்று விடும். கிறிஸ்துவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத பாவிகளுக்கு அங்கே (நரகத்தில்) ஒரு நேரம் உண்டாயிருக்கும். அவர்கள் ஒருகால் கோடான கோடி ஆண்டுகள் (100 பில்லியன் ஆண்டுகள் – 100 பில்லியன் என்பது 100000000000 ஆண்டுகள் – மொழிபெயர்ப்பாளர்.) தண்டிக்கப்படலாம்... ஒருகால் அது கோடா கோடி ஆண்டுகளாய் (1000 மில்லியன் பில்லியன் ஆண்டுகள் – 1 மில்லியன் என்பது 10 இலட்சம், 1 பில்லியன் என்பது 100 கோடி – மொழிபெயர்ப்பாளர்.) இருக்கலாம், எனக்குத் தெரியாது. என்னால் அதைக் கூற முடியாது. ஆனால் ஏதோவொரு நேரத்தில் அதற்கு ஒரு முடிவு உண்டாகும், ஏனென்றால் அது நித்தியமானது அல்ல.

**260.** இப்பொழுது நாம் பூரணமாகுதலை நோக்கி தொடர்ந்து செல்லப் போகிறோம். இப்பொழுது நாம் செய்திக்குள்ளாகச் செல்லும் போது கவனியுங்கள்.

***...செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழு தல், நித்திய நியாயத்தீர்ப்பு...***

**261.** இப்பொழுது கவனியுங்கள். நாம் இரண்டு காரியங்களைப் பெற்றுள்ளோம். இப்பொழுது நாம் இங்கு ஒரு காட்சியைப் பெற்றுள் ளோம். இப்பொழுது, நாம் இங்கே தான் சரியாக சில பெரிய கருத்து

வேறுபாடுகளைப் பெற்றுக் கொள்ளப் போகிறோம். இப்பொழுது காட்சியானது எங்கேயுள்ளது என்பதை நீங்கள் காண வேண்டும். பவுல் இங்கு *கிருபையிலிருந்து நியாயப்பிரமாணத்தைப்* பிரிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறான். நாம் இரண்டு காட்சிகளைப் பெற்றுள்ளோம்: ஒன்று மாம்ச பிரகாரமானது; மற்றொன்றோ ஆவிக்குரிய பிரகாரமானது. பவுல் இரண்டிற்கும் இடையேயுள்ள மாறுபாட்டை யூதர்களுக்குக் காண்பிக்கும்படியாக முயற்சித்துக் கொண்டிருக்கிறான். இந்த நிருபம் எபிரேயர்களுக்கானதாய் உள்ளது. எல்லா எபிரேயர்களுக்கும் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டிற்கு மாதிரியாய் உள்ளது என்பதைக் காண் பிக்கவே முயற்சித்துக் கொண்டிருக்கிறான். ஆகையால் நீங்கள் இங்கே இந்த ஆய்வின்கீழ் இரண்டு காட்சிகளைப் பெற்றுள்ளீர்கள்.

**262.** இப்பொழுது நாம் வாசிக்கையில் கூர்ந்து கவனியுங்கள். இப்பொழுது பவுல் கூறினான்:

***...ஆகையால் கிறிஸ்துவைப்பற்றி சொல்லிய மூல உபதேசங்களை நாம் விட்டு,... பூரணராகும்படி கடந்து போவோமாக.***

**263.** இப்பொழுது நாம் எப்படி பரிபூரணமாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை இந்தக் காலையில் நாம் புரிந்து கொண்டோம். பரிபூரண மாக்கப்பட்டு, முற்றிலுமாக கறையற்றவர்களும் பிழையற்றவர்களுமாய் இருக்கிறோம், நம்மில் ஒரு பாவமும் இல்லை. நீங்கள் சோதனைக்கு அப்பாற்பட்டிருக்கிறீர்களா? இல்லையே. நீங்கள் ஒவ்வொரு நாளும் பாவம் செய்கிறீர்களா? ஆம், ஐயா. ஆனால் அதே சமயத்தில் நாம் அவருக்குள் இருக்கின்றபடியால், நாம் பரிபூரணமாக்கப்பட்டிருக்கிறோம். தேவனால் இனி ஒருபோதும் நம்மை நியாயந்தீர்க்க முடியாது, (அவ்வாறு நியாயந்தீர்த்தால், நீதியாய் இருக்க முடியாது), அவர் நம்மை அவருக்குள் ஏற்கனவே நியாயந்தீர்த்து விட்டார். அவர் கிறிஸ்துவை நியாயந்தீர்த்த போது, அவர் என்னை நியாயந்தீர்த்தார். அவர் உங்களை நியாயந்தீர்த்தார். அவரால் என்னை மீண்டும் நியாயந்தீர்க்க முடியாது, ஏனென்றால் அவர் என்னுடைய நியாயத்தீர்ப்பை ஏற்றுக் கொண்டார், நான் மீட்கப்பட்டிருக்கிறேன்.

**264.** நான் என்னுடைய கைக்கடிகாரத்தை அடகு கடையி லிருந்து மீட்டு விட்டதைக் காண்பிக்கும்படியாக ஒரு ரசீதை வைத்துள்ளேன், எனவே நான் ஒரு ரசீதை வைத்திருக்கும் போது,



அதை மீண்டும் ஒருமுறை யாரேனும் அடகுக்கடையிலிருந்து மீட்க முயற்சிக்க வேண்டுமா? நான் அதை மீட்டிருக்கிறேனே.

பிசாசு என்மேல் தண்டனையைப் போடும்படி முயற்சித்தால், அப்பொழுது நான் மீட்கப்பட்டுள்ளதைக் காண்பிக்கும்படியான ரசீதை வைத்துள்ளேன். ஆம், ஐயா. இனிமேல் நியாயத்தீர்ப்பே இல்லை! “என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்.” அதுவே என்னுடைய ரசீது. அவர் வாக்குத்தத்தத்தை அளித்தார்.

**265.** இப்பொழுது, இப்பொழுதோ இந்த காட்சியானது இங்கே உள்ளது.

***...செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழு தல், நித்திய நியாயத்தீர்ப்பு...***

**266.** இப்பொழுது, நினைவிருக்கட்டும், அந்த வார்த்தை மீண்டும் பயன்படுத்தப்பட்டதை நீங்கள் கவனித்தீர்களா? நாம் அதை இந்த காலையில் “நித்திய நியாயத்தீர்ப்பு” என்று உபயோகித்தோம். தேவன் ஒருமுறை பேசுகிற போது, அது நித்தியமாய் இருக்கிறது. அது துணுக்களவும் மாற்றப்பட முடியாது. ஆகையால், நியாயத்தீர்ப்பு நித்தியமானதாய் இருக்கிறது. அது எப்பொழுதுமே நியாயத்தீர்ப்பாய் இருக்கிறது. நாம் எந்த தலைமுறையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல, ஒரு சந்ததி ஜீவிக்கும், ஒரு பிரமாணம் ஜீவிக்கும். அது என்றென்றுமாய்... அது எந்த காலமாய், *இது* மற்றும் *அதுவாய்* இருந்தாலும் சரி. ஆனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு இன்னமும் நித்தியமானதாய் இருக்கிறது, அவர் அவ்வாறு கூற வேண்டியதாய் உள்ளது, ஏனென்றால் அவர் வார்த்தையை உரைத்தார். தேவன் ஒரு வார்த்தையை உரைக்கிற போது, அது நித்தியமானதாய் இருக்க வேண்டியதாய் உள்ளது. அது சரியே.

**267.** இப்பொழுது நான், உங்களுக்காக அதை மூல கிரேக்க வேதாகமத்திலிருந்து வாசிக்கட்டும். அது எப்படி வாசிக்கப்படுகிறது என்பதைக் கவனியுங்கள்.

**ஆகையால் கிறிஸ்துவின் மூல உபதேச வசனங்களை விட்டு – விட்டு, பாவ நிவிர்த்தியானவர், நாம் நோக்கிச் செல்ல வேண்டிய...**

இப்பொழுது என்னால் அதை வாசிக்க முடியவில்லை. அது தெளிவற்றதாய் உள்ளது. “முறைமையை மீண்டும் போடாமல்...” இங்கு தான் நாம் இருக்கிறோம்.

***மரணத்துக்குக் காரணமாயிருக்கிற கிரியைகளான சீர்திருத்த முறையை மீண்டும் போடாமல்...***

268. இப்பொழுது, இந்த மூல (கிரேக்க) வேதத்திலோ எந்த வியாக்கியானமும் இல்லாமல் முற்றிலும் சரியாக உள்ளது. இது ஆங்கில மொழி வேதம் என்ன கூறுகிறதோ அப்படியே அதற்கான கிரேக்க வார்த்தை. “இப்பொழுது, அது நமக்குத் தேவையில்லை...” என்று கூறியுள்ளது. இங்கே கவனியுங்கள், பாருங்கள்.

***மரணத்துக்குக் காரணமாயிருக்கிற கிரியைகளான சீர்திருத்த அஸ்திபாரங்களை மீண்டும் போடாமல்...***

269. இப்பொழுது நீங்கள் உங்களுடைய சிந்தையில் புரிந்து கொள்வீர்களானால், (நலமாயிருக்கும்). “மரணத்திற்குக் காரணமாயிருக்கிற சீர்திருத்த முறைமைகளை” அவன் இங்கு பேசிக் கொண்டிருக்கிறான். பவுல், “மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல் பூரணராகும்படி கடந்து போவோமாக. சீர்திருத்த முறைமைகள் மரணத்தை விளைவிக்கின்றன” என்பது சரியான வார்த்தைகளாய் இருக்கின்றன. அதைத்தான் உண்மையாகவே பவுல் எழுதினான். அவன் என்ன செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறான் என்பதை பார்த்தீர்களா?

270. இப்பொழுது, இந்த எல்லா காரியங்களும், ஞானஸ்நானம் போன்றவை: ஒருவர் பின்னோக்கியவாறும், ஒருவர் முன்னோக்கியவாறும், ஒருவர் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலும், ஒருவர் இயேசுவின் நாமத்திலும், ஒருவர் *இந்த* விதமாகவும், *அந்த* விதமாகவும் ஞானஸ்நானம் பண்ணப்படுகின்றனர். இவையாவுமே ஞானஸ்நானத்தைக் குறித்த வித்தியாசமான சிறிய காரியங்களாக இருக்கின்றன.



271. கைகளை வைக்குதலைக் குறித்துப் பார்த்தால்: “தேவனுக்கு ஸ்தோத்திரம், நான் கைகளை வைக்குதலின் பேரிலான வரத்தைப் பெற்றுக் கொண்டேன். அல்லேலூயா! நீங்களும், நீங்கள் அதை இந்த விதமாகப் பெற்றுக் கொள்ள முடியும். அல்லேலூயா!” என்று கூறுகிறார்கள்.

272. அவை யாவற்றையும் தள்ளிவிட வேண்டும், ஏனென்றால் அது மரித்த கிரியைகள், இந்த சீர்திருத்தங்கள். சீர்திருத்தம் போன்றவை. புரிகிறதா? அவன் மற்றொரு வகுப்பினரைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறான். இப்பொழுது அவன், “அதிலிருந்து விலகிச் சென்று, பூரணராகும்படி கடந்து போவோமாக” என்றான். உங்களுக்கு அது புரிகிறதா? (சபையார், “ஆமென்” என்கின்றனர் – ஆசிரியர்.)

273. சபையானது இன்னும் அந்த காரியங்களில் தாமதமாகவே பின்னாகவே இருந்து கொண்டிருக்கிறது. அதைத்தான் அவர்கள் செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். ஆதிகால எபிரேய சபை, “நல்லது, நான் முழுக்கு ஞானஸ்நானம் பண்ணப்பட்டேன். நான் *இதைப்* பெற்று விட்டேன். *இதை,* மற்ற *இதை, இந்த* எல்லா காரியங்களையும் பெற்று விட்டேன் என்று கூறவே முயற்சித்துக் கொண்டிருந்தது.

274. அவனோ, “இப்பொழுது, அவை யாவற்றையும் ஒருபுறம் தள்ளி விடுவோம், அதை பின்னால் விட்டு விடுவோம்” என்றான். ஆனால் இப்பொழுது, நாம் அதைச் செய்யக் கூடாது என்று அவன் கூறினானா? இப்பொழுது அதைக் குறித்து அவன் என்ன கூறினான் என்பதை கவனியுங்கள்.

**தேவனுக்குச் சித்தமானால், இப்படியே செய்வோம்.**

275. மூல கிரேக்க வேதமும் அதே காரியத்தையே கூறியுள்ளது.

**தேவனுக்குச் சித்தமானால், இப்படியே செய்வோம்,** பாருங்கள்.

**தேவனுக்குச் சித்தமானால், இப்படியே செய்வோம்.**

**276.** ஸ்நானங்கள், கைகளை வைக்குதல், மற்ற காரியங்கள், ஆனால் அது பரிபூரணமாய் இருக்கவில்லை. அது மாம்ச பிரகாரமான சீர்திருத்தமாய் மாத்திரமே உள்ளது. அங்கே தான் சபைகள் இன்றைக்கு அந்த மாம்ச பிரகாரமான சீர்திருத்தத்தின்பேரில் நிறுத்திக் கொள்கின்றன. அவைகளில் ஒன்று, "ஓ, நல்லது, தண்ணீர் *ஞானஸ் நானம்* என்ற வார்த்தை *இதைப்* பொருட்படுத்துகிறது, இது *அதைப்* பொருட்படுத்துகிறது" என்று கூறுகிறது.

**277.** அவர்கள் ஸ்தாபனங்களை அமைத்துக் கொண்டனர்: ஒரு சாரார் தெளிக்கிறார்கள். மற்றொரு சாரார் ஊற்றுகிறார்கள். மற்றொரு வர் முகத்தை முன்பக்கமாக முழுக்கி ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள், மற்றொருவர் பின்பக்கமாக முழுக்கி ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள், ஆக இந்த எல்லா காரியங்களுமே இருக்கின்றன; அவர்களில் சிலர் வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைக்கிறார்கள். சிலர் கைகளை வைக்குதலின் மூலம் சிலரை அப்போஸ்தலர் ஆக்குகிறார்கள், சிலரை தீர்க்கதரிசிகள் ஆக்குகிறார்கள்; மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து பிரசங்கித்தல் சரிதான். கிறிஸ்துவின் ஒப்புயர்வற்ற தெய்வீகத் தன்மையைக் குறித்து பிரசங்கித்தல், அது சரிதான். "ஆனால்," அவன், "இவையாவும் சடங்காசாரமாக சீர்திருத்தங்களாக இருக்கின்றன. நாம் வெறுமனே சீர்திருத்தலையே செய்து கொண்டு வருகிறோம். இப்பொழுது நாம் பூரணராகும்படி கடந்து போவோமாக" என்றான். உங்களுக்கு அந்த காட்சி புரிகிறதா? (சபையார், "ஆமென்" என்கின்றனர் – ஆசிரியர்.)

**278.** இப்பொழுது கவனியுங்கள். இப்பொழுது இங்கு தான் ஆழமான பாகமே வருகிறது.

***ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும்,***

***தேவனுடைய நல் வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும்,***

***மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.***



**279.** இப்பொழுது, பிரமாணக்காரராய் இருக்கிற நீங்கள், உங்களுடைய சிந்தையில் இப்போது, என்ன நினைத்துள்ளீர்கள் என்பதை நான் அறிவேன், ஆனாலும் நீங்கள் தவறாய் இருக்கிறீர்கள். புரிகிறதா? சரி. நான் இதன் பேரில் நிற்கிறேன், வேதம் அதை உறுதிப்படுத்துகிறது, அதாவது, "தேவன் ஒரு மனிதனை எப்போதாவது இரட்சித்திருப்பாரானால், அவன் நித்திய காலமாய் இரட்சிக்கப் பட்டிருக்கிறான்" என்பதாகும். எனவே நீங்கள் அதற்கு வேறெந்த காரியத்தையும் கூறச்செய்ய முடியாது.

**280.** அண்மையில், சில அடிப்படைவாதக்காரர்கள் என்னிடத் தில் வந்து, "பிரன்ஹாம் பிரசங்கியாரே, நான் உங்களுடைய (தவறு) ஒன்றைப் பிடித்து விட்டேன். நான் உங்களுடைய (தவறு) ஒன்றினை பிடித்து விட்டேன். நீரோ, 'ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டிருந்தால், அப்பொழுது அவன் ஒருபோதும் இழக்கப்படவே முடியாது' என்றீரல்லவா" என்றான்.

**281.** அதற்கு நானோ, "அப்படித்தான் தேவன் கூறினார்" என்றேன்.

**282.** அப்பொழுது அவன், "நான் உங்களிடத்தில் ஒரு காரியம் கேட்க விரும்புகிறேன். சவுல் ஒரு தீர்க்கதரிசியாய் இருந்தான், அவன் தீர்க்கதரிசனம் உரைத்தான். அவன் தேவனால் அபிஷேகிக்கப்பட்டவ னாய் இருந்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவன் அபிஷேகிக் கப்பட்டவனாய் இருந்தான் என்றே வேதம் கூறியுள்ளது. அவன் தற்கொலை செய்து கொண்டான். எனவே அவன் இழக்கப்பட்டுப் போய்விட்டான்" என்று கூறினார்.

**283.** அதற்கு நானோ, "அவன் இழக்கப்பட்டுப் போய்விட் டானா?" என்று கேட்டேன். மேலும் நான், "அவன் 'இரட்சிக்கப் பட்டான்' என்று தானே வேதம் உறுதியாக கூறுகிறது. அவன் தேவ னுக்கு சத்துருவான பின்பும், அவன் அப்பொழுதும் இரட்சிக்கப்பட்டிருந் தான். அவன் இரட்சிக்கப்பட்டிருந்தான் என்றே வேதம் உரைத்துள்ளது. மொத்தத்தில், அவன் தற்கொலை செய்து கொள்ளவில்லை. ஒரு பெலிஸ்தியன் அவனைக் கொன்றான், அந்த பெலிஸ்தியன் சவுலைக்

கொன்றதற்காக தாவீது அவனைக் கொன்று போட்டான். அவன் தன்னுடைய பட்டையத்தை – பட்டையத்தை (நட்டு), அதின் மேல் விழுந்து தன்னுடைய ஈட்டி முனையில் சாய்ந்து கொண்டிருந்தான். ஆனால் அவன் தானே அவ்வாறு செய்தும், அதனால் அவன் மரித்துப்போகவில்லை. எனவே ஒரு பெலிஸ்தியன் அவனைக் கொன்றான். சவுல், அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயிடம் சென்ற போது, அவள் சாமுவேலின் ஆவியைக் கூப்பிட்டாள், ஏனென்றால், சாமுவேல் அப்பொழுது மகிமைக்குள் பிரவேசிக்காமல் இருந்தான், அவன் பாவத்தை போக்க முடியாத சிந்தப்பட்ட காளை வெள்ளாட்டுக்கடா இரத்தத்தின் கீழ் பரதீசிலிருந்தான். ஆனால் அவன் மகிமைக்குள் பிரவேசிக்கும் வரையில், பரதீசு என்று அழைக்கப்படும் ஒரு காத்திருக்கும் இடத்தைக் கொண்டிருக்க வேண்டியதாய் இருந்தது" என்றேன்.

**284.** அங்கு தான் கத்தோலிக்க ஜனங்களாகிய நீங்கள் குழப்ப மடைந்துள்ளீர்கள். புரிகிறதா? இப்பொழுது, பரதீசு என்பதே கிடையாது. நாம் இப்பொழுது நேராக தேவனுடைய பிரசன்னத்திற்குள் செல்கிறோம்.

**285.** எந்தோவில் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ சாமுவேலின் ஆவியைக் கூப்பிட்ட போது, அங்கே அவன் வந்து நின்றான். அப்பொழுது அவள் முகங்குப்புற விழுந்து, "நீர் ஏன் என்னை மோசம் போக்கினீர்" என்று அவள் கேட்டாள்.

**286.** சவுல் மாத்திரமே நின்று கொண்டிருக்கவில்லை... நான் சாமுவேலையே பொருட்படுத்திக் கூறுகிறேன், சாமுவேல் தன்னுடைய தீர்க்கதரிசன வஸ்திரத்தோடு நின்றான். அவன் அப்பொழுதும் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தான். அப்பொழுது சாமுவேல், "நீ என்னுடைய இளைப்பாறுதலிலிருந்து என்னை அழைத்தது என்ன" என்றும், "நீ தேவனுக்கு சத்துருவாய் ஆனாய் என்பதை காண்கிறேனே" என்றும் கூறினான்.

**287.** அப்பொழுது சவுல், "நல்லது, ஊரீம் என்னிடத்தில் இனிமேல் பேசாது. தீர்க்கதரிசியும் இனிமேல் என்னிடத்தில் தீர்க்கதரிசனம் உரைக்க முடியாது. நான் ஒரு சொப்பனத்தையும் காண முடியவில்லையே" என்றான்.



**288.** "நல்லது," அதற்கு சாமுவேல், "நீ தேவனுக்கு சத்துருவாக மாறி விட்டாய். ஆனால் மற்றபடி நாளை நடக்கிற யுத்தத்தில் நீ மரித்துப் போவாய். நாளை இரவு, இந்த நேரத்தில், நீ என்னோடு இருப்பாய்" என்றான். எனவே சவுல் இழக்கப்பட்டிருந்தால், அப்பொழுது சாமுவேலும் இழக்கப்பட்டவனாய் இருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் இருவரும் ஒரே இடத்தில் ஒன்றாய் இருந்தனர். நிச்சயமாக. வேதம் அவ்வண்ணமே கூறியுள்ளது.

**289.** இப்பொழுதோ, நீங்கள் உணர்ச்சிவசப்படலாம், அந்நிய பாஷையில் பேசலாம், சத்தமிடலாம், உடலைக் குலுக்கலாம், அசைக்கலாம், சபையின் நடைபிரகாரங்களில் மேலும் கீழும் ஓடலாம். அதற்கு விரோதமாக ஒரு காரியமும் இல்லை. ஆனால் நீங்கள் இரட்சிக்கப்படாமல் இருக்கும் போது, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர் கள் என்று நீங்கள் விசுவாசிப்பதாக உங்களையே பாவனை செய்து கொள்ள முடியும். ஆனால் நீங்கள் இரட்சிக்கப்படவில்லை. நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள் என்பதை உங்களுடைய ஜீவியமே நிரூபிக்கும். இயேசு, "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்றார். நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா அல்லது இல்லையா என்பதை நீங்கள் ஒருபோதும் உங்களுடைய வாயைத் திறந்து, கூறாமலே இருந்தாலும், உங்களுடைய ஜீவியம் அதை நிரூபிக்கும். நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள் என்பதை அது நிரூபித்து விடும்.

**290.** ஆனால் இந்த எல்லா செயல்களும் உணர்ச்சிவசப்படுத லும், சபையை சேர்ந்து கொள்ளுதலும், "நான் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறேன், அல்லேலூயா, நான் அதைப் பெற்றுக் கொண்டேன் என்பதை நான் அறிவேன்" என்பதெல்லாம் எந்தவொரு காரியத்தையும் பொருட்படுத்துகிறதில்லை.

**291.** "நான் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் மூன்று முறை முன்பக்கமாக மூழ்கி ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கி றேன். நான் அவ்வாறு எடுத்துள்ளேன்" என்று கூறலாம். அது ஒன்றையுமே பொருட்படுத்துகிறதில்லை.

**292.** பவுல், "நாம் இப்பொழுது பூரணராகும்படி கடந்து போவோமாக" என்றான். நாம் பரிபூரணமாக்கப்படுவதைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். நாம் இதை ஆராய்ந்து பார்ப்போமே

யானால், பரிபூரணமாக்கப்படுதல் தெரிந்து கொள்ளப்படுதலாய் உள்ளது என்பதை நீங்கள் கண்டறியலாம். நான் இன்னும் ஒரு சில நிமிடங்களில் வேதாகமத்தைக் கொண்டு அதை உங்களுக்கு நிரூபித்துக் காண்பிப்பேன். அது தேவன் உலகத் தோற்றத்துக்கு முன்னர் அவர்கள் ஒவ்வொருவரையும் கண்டு, தெரிந்தெடுத்தலாய் உள்ளது. எனவே அவர் முழு உலகத்தையும் மீட்பதற்கு அல்ல, அந்த ஜனங்களை மீட்கவே இயேசுவை அனுப்பினார். அவர் அதைச் செய்ய விரும்பினார், ஆனால் அவர் அவர்களுக்காக ஒரு வழியை உண்டுபண்ண வேண்டியதாய் இருந்தது. அவர் நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக வந்து, அந்த தெரிந்து கொள்ளப்பட்டவர்களை மகிமையில் அவரண்டை அவர் கொண்டு வரும்படியாக, அவரால் செய்ய முடிந்த ஒரே வழி கிறிஸ்துவை அனுப்ப வேண்டியதாய் இருந்தது.

**293.** நீங்கள், "நல்லது, ஒருகால் யாரோ ஒருவர் என்னைக் குறித்து மிக மோசமாக எண்ணலாம். ஒருகால் அவர்கள் வந்து, இரட்சிக்கப்படலாம்" என்று கூறும்படியாக தேவன் தம்முடைய உத்தியோகத்தை மிகவும் உறுதியற்ற முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் என்று கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? நீங்கள் எந்தவொரு காரியத்தையும் செய்யும்படி தேவன் உங்களை கெஞ்சி மன்றாட வேண்டியதில்லை. எந்த கெஞ்சி மன்றாடுதலையுமே, நீங்கள் தான் கெஞ்சி மன்றாடுதலைச் செய்ய வேண்டும், தேவனல்ல.

**294.** ஆகையால், தேவன் முன்னறிவின் மூலமாக தெரிந்து கொள்ளப்பட்டவர்களை அப்பாலே கறைதிரையற்றவர்களாய் சந்திக்கும்படி, அவர்களை இரட்சிக்கவே கிறிஸ்து மரித்தார். உலக தோற்றத்துக்கு முன்னே, அவர் உங்களை மகிமையில் கண்டார். அதைத்தான் வேதம் எபேசியர் முதலாவது அதிகாரத்தில் கூறியுள்ளது. 5–ம் அதிகாரம் முதலாம் வசனம். தேவன் முன்னறிவினால் முன்குறித்தார்.

**295.** இப்பொழுது, தேவன் அதைச் செய்திருப்பாரானால், உலகத்தோற்றத்துக்கு முன்னே நம்மை முன்குறித்திருப்பாரானால், உலகத் தோற்றத்துக்கு முன்பே நம் ஒவ்வொருவரையும் பெயர் மூலம் அறிந்திருப்பார். அவர் நம்மை நித்திய ஜீவனுக்கென்று தெரிந்து கொண்டு, நம்மை மீட்க இயேசு கிறிஸ்துவை அனுப்பினார். அதாவது 6000 ஆண்டுகளுக்கு முன்னர் நாம் மகிமையில் அவருக்குப்



புகழ்ச்சியாய் பிரசன்னமாகும்படிக்கு அவர் நம்மைக் கண்டாரே! அப்படியிருக்க நீங்கள் எப்படி இழக்கப்பட முடியும்?

**296.** இப்பொழுது, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால், நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள். தேவன் இன்றிரவு உங்களை இரட்சித்து, இன்றிலிருந்து 10 ஆண்டுகளில் உங்களை இழக்கப் போகிறார் என்பதை அறிந்திருந்தால், அப்பொழுது அவர் தம்முடைய சொந்த தீர்மானத்தையே தோற்கடித்துக் கொண்டிருக்கிறார்; முடிவற்ற சர்வ வல்லமையுள்ள நித்திய நித்திய ஞானமுள்ளவரான தேவன் அப்பொழுது நீங்கள் நிலைத்திருப்பீர்களா அல்லது நீங்கள் நிலைத்திருக்க மாட்டீர்களா என்பதை அறிந்திருக்கவில்லை என்பதாகும். அப்பொழுது, அவர் உங்களை இரட்சிக்கிற போது, "நல்லது, நான் அவனுக்கு ஒரு சோதனையைக் கொடுப்பேன்; அப்பொழுது அவன் என்ன செய்கிறான் என்று பார்ப்பேன்" என்று கூறினால், அவர் துவக்கமுதல் முடிவு வரை அறிந்திருக்கவில்லை என்பதாய் உள்ளது. தேவன் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை அவர் அறிந்திருக்கிறார், நீங்கள் அதைக் குறித்து ஒருபோதும் கவலைப்பட வேண்டாம். அது நீங்களும் நானுமே இடறுகிறதாய் உள்ளது. தேவன் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை அவர் அறிந்திருக்கிறார். நாம்... நாம் (முடிவுபரியந்தம்) நிலைத்திருப்போமா அல்லது நாம் என்ன செய்வோம் என்பதை அவர் அறிந்திருக்கிறார்.

**297.** இப்பொழுது வேதம், ஏசா யாக்கோபைக் குறித்துக் கூறுகையில், பிள்ளைகள் இன்னும் பிறவாததற்கு முன்னே, அவர்கள் தங்களுடைய முதல் சுவாசத்தைக் கூட சுவாசிப்பதற்கு முன்னமே அவருடைய தெரிந்து கொள்ளுதல் நிலைநிற்கும்படிக்கு தேவன், "நான் ஒருவனை சிநேகித்து, மற்றொருவனை வெறுத்தேன்" என்று கூறினார் என்றே உரைத்துள்ளது.

**298.** ஆபிரகாம் யாராயிருந்தான்? நாம் இன்னும் ஒருசில நிமிடங்களில் இங்கே கீழே அவனண்டை செல்லப் போகிறோம். தேவன் அழைக்கும்படிக்கு அவன் யாராயிருந்தான்? எந்த ஒரு காரியமும் இல்லாமல் அவனை இரட்சிக்கிறார். தேவன் மனிதனோடு ஒரு உடன்படிக்கையைச் செய்கிறார்; மனிதன் அவருடைய உடன்படிக்கையை முறிக்கிறான். ஆனால் தேவனோ இந்த உடன்படிக்கையை தம்மோடு செய்து கொண்டு, தம்மில் தாமே ஆணையிட்டுக்

கொண்டார். மனிதனுக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது. அது தேவனுடைய சொந்த முன்னறிவாய் உள்ளது. எப்படியோ அவரே அதைச் செய்துள்ளார்.

**299.** இப்பொழுது, நீங்களோ, "நல்லது, சகோதரன் பிரன்ஹாம் அவர்களே, நான் ஒரு கிறிஸ்தவனாக மாறினால், நான் விரும்புகிற எந்த காரியத்தையும் என்னால் செய்ய முடியுமா?" என்று கேட்கலாம். முற்றிலுமாக. நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருந்தால், நீங்கள் விரும்புகிற எதையும் செய்யலாம், ஆனால் உங்களுக்குத் தவறு செய்யும்படியான எந்த ஒரு வாஞ்சையும் உண்டாகாது என்று நான் உத்தரவாதம் அளிப்பேன். நீங்கள் எந்த காரியத்தையும் செய்யுங்கள். நான் என்ன செய்ய வேண்டுமென்று விரும்பினேனோ நான் அதை எப்பொழுதுமே செய்துள்ளேன். நான் நரகத்துக்குச் செல்லப்போகிறேன் என்று பயப்படுகிற காரணத்தால், நான் கர்த்தருக்கு ஊழியம் செய்தால், அப்பொழுது நான் அவருக்குச் சரியாக ஊழியம் செய்து கொண்டிருக்க வில்லை. என் மனைவி என்னை விவாகரத்து செய்து விடுவாள் என்று நான் பயப்படுகிறதினால் நான் அவளுக்கு உண்மையாக ஜீவித்தால், அப்பொழுது நான் ஒரு நல்ல கணவனாக இருக்கவில்லை. ஆனால் நான் அவளை நேசிக்கின்றபடியால், நான் எந்த காரியத்திற்காகவும் அவளைப் புண்படுத்த மாட்டேன்.

**300.** ஒரு மனிதன் தேவனுடைய ஆவியினால் பிறந்திருக்கும் போது, அந்தவிதமாகத்தான் கிறிஸ்துவோடு இருக்கிறான். அவன் சத்தமிட்ட காரணத்தினால் அல்ல, அந்நிய பாஷையில் பேசினதினால் அல்ல, அல்லது ஏதோ உணர்ச்சிவசப்படுதலினால் அல்ல; ஆனால் அவனுடைய இருதயத்தில் அன்பு உள்ளே வந்து, உலகத்தின் காரியத்தை எடுத்துப் போட்டு விடுகிறது. அப்பொழுது அவன் அவரை நேசிக்கிறான். அவன் ஒவ்வொரு நாளும் அவரண்டை நடக்கிறான் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். எனவே நீங்கள் அவனிடத்தில், "இதைச் செய்வது அல்லது *அதை* அல்லது *மற்றதைச்* செய்வது தவறு" என்று கூறவேண்டியதில்லை. அது தவறாய் இருக்கிறது என்பதை அவன் அறிந்திருக்கிறான். அவன் தேவனோடு சஞ்சரிக்கிறான், ஏனென்றால் அவன் தேவனுடைய இராஜாதிபத்திய கிருபையின் ஒரு உற்பத்தியாய் நியமிக்கப்பட்டிருக்கிறான். சரியாக.



***ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும்,... பரம அழைப்பை... பெற்றும்... கூடாத காரியம்.***

இப்பொழுது, ஒரு மனிதன் ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டு, மீண்டும் விழுந்து போய் விட்டான் என்று நாம் சில சமயங்களில் நம்பியிருக்கிறோம், ஆனால் நாம் வேதத்தில் அதை அந்த விதமாக வாசிக்கிறதில்லை. பவுல், இங்கே, "பரிசுத்த ஆவியைப் பெற்று, விழுந்து போனவனைப் புதுப்பிக்கிறது முற்றிலும் கூடாத காரியம்" என்றே கூறுகிறான். இப்பொழுது அது சரியில்லையா என்று அதை வாசித்துக் கண்டறியுங்கள். இங்கே அந்த பாடப்பகுதியை எடுத்து, முழு பாடப்பகுதியையும், பொருளடக்கத்தையும், சரியாகச் கூறினால், அந்த கட்டத்தைக் கவனியுங்கள்.

**301.** இப்பொழுது அவன் அதைக் குறித்துப் பேசத் துவங்கு கிறான், அது என்ன? "நாம் பூரணராகும்படி கடந்து போவோமாக." இப்பொழுது, அவன், "மாம்ச பிரகாரமான ஞானஸ்நானம், சீர்திருத்தல் கள் போன்ற அஸ்திபார உபதேசங்களை இங்கே போடாமல், நாம் அதைப் போடாதிருப்போமாக. நாம் பூரணராகும்படி கடந்து போவோ மாக" என்றான். இங்கே பாடப்பொருளோ *பரிபூரணம்* என்பதாய் உள்ளது, பரிபூரணம் கிறிஸ்துவினால் வருகிறது. நாம் எப்படி கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கிறோம்? சபையில் சேர்ந்து கொள்வதி னாலா? "நாம் எல்லோரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம்." ஒருவர் அந்நிய பாஷையில் பேசுவதால் உள்ளே பிரவேசிப்பது என்பதும், ஒருவர் கரத்தைக் குலுக்குவதனால் உள்ளே பிரவேசிப்பது என்பதும், ஒருவர் தண்ணீர் ஞானஸ்நானம் பண்ணப்படுவதினால் உள்ளே பிரவேசிப்பது என்பதும் கிடையவே கிடையாது. "நாம் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற் குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம்." உங்களுக்கு அது புரிகிறதா? அது தான் பரிபூரணமாய் இருக்கிறது.

**302.** நீங்கள் அதற்குள்ளாக வரும்போது, நீங்கள் கிறிஸ்துவுக் குள் இருக்கிறீர்கள், உலகமோ உங்களுக்கு மரித்ததாய் உள்ளது. நீங்கள் ஒவ்வொரு நாளும் ஆட்டுக்குட்டியானவரோடு நடக்கிறீர்கள், என்ன செய்ய வேண்டுமென்று உங்களுடைய நடைகள் தேவனால் உறுதிப்படுத்தப்படுகிறது. ஓ, நாம் சோதனைகள் மற்றும் பரிசோதனை கள் ஊடாகச் செல்கிறோம்! நீங்களோ, "உங்களுக்கு சோதனைகள்

உண்டாகின்றனவா?" என்று கேட்கலாம். ஆம், ஐயா. என்ன வென்றால்...

**303.** தேவன் எனக்காக என்ன செய்தார் என்பது கிருபையாய் உள்ளது. தேவனுக்காக நான் என்ன செய்கிறேன் என்பது கிரியை களாய் இருக்கின்றன. இப்பொழுது, அவர்களோ, அதிலிருந்து ஒரு உபதேசத்தை உருவாக்குவார்கள், கிரியைகள் என்பது உங்களுடைய சிறப்பு தகுதிகள் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அப்படியிருந்தால், அது ஒரு இலவச வரமல்ல. தேவன் உங்களுக்காக என்ன செய்தார் என்பது கிருபையாய் உள்ளது, "கிருபையினால் நீங்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறீர்கள்." அவர் உங்களுக்காக காண்பித்த கிருபையை உயர்வாக மதித்து நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது கிரியைகளாய் இருக்கின்றன. நீங்கள் அவரை நேசித்தால், அப்பொழுது நீங்கள் கர்த்தரின் கிரியைகளை செய்ய விரும்புவீர்கள். நிச்சயமாகவே, ஏனென்றால், அப்பொழுது நீங்கள் – நீங்கள் அவரை நேசிக்கிறீர்கள்.

**304.** மேடா பிராயை என்னுடைய மனைவியாக ஏற்றுக் கொண் டது அவளுக்காக பொழியப்பட்ட அன்பாக இருந்தது. அதை உயர்வாக மதித்து, அவள் செய்கிறது என்னவென்றால், அவள் ஒரு அருமையான ஸ்திரீயாக இருக்கிறாள், வீட்டில் தரித்திருந்து, பிள்ளைகளைப் பொறுப் பாக கவனித்துக் கொண்டு, ஒரு நல்ல உண்மையான வாழ்க்கை வாழுகிறாள். அது நாங்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை என்ற காரணத்தினால் அல்ல; நாங்கள் திருமணம் செய்து கொண்ட காரணத்தினாலே ஆகும். ஆனால் அவள் அதை உயர்வாக மதித்து செய்கிறாள். (அதே சமயத்தில்), அவள் ஒவ்வொரு நாளும் பட்டணத் திற்குள் ஓடி, ஒவ்வொரு பத்து சென்டு கடைகளுக்கும் ஓடிச் சென்று, வீதிகளில் மேலும் கீழுமாக ஓடி, ஒருபோதும் பாத்திரங்களைக் கழுவா மலும், அல்லது வேறெந்த காரியமும் செய்யாமலும் இருந்தாலும், அப்பொழுதும் நாங்கள் திருமணம் செய்து கொண்டவர்களாக இருக்கி றோம். முற்றிலுமாக. நான் என்னுடைய விவாக உறுதியை எடுத்த போதே, அது அதனைத் தீர்த்து வைத்து விடுகிறது. அவள் என்னு டைய மனைவியாக இருக்கிறாள். எங்களுக்குள்ளாக ஜீவன் இருக்கும் வரை, அவள் என்னுடைய மனைவியாக இருக்கிறாள். அது அவளு டைய வாக்குறுதியாய் உள்ளது. ஆனால் அவள் அதற்காக செய்கிற பாராட்டாய் அது உள்ளது: அவள் வீட்டில் தரித்திருந்து, பிள்ளைகளை



கவனமாகப் பராமரித்து, ஒரு உண்மையான மனைவியாய் இருக்க முயற்சிக்கிறாள்.

**305.** நான் எல்லா நேரத்திலும் வெளியே ஓடிப் போய் எந்த வொரு குறிப்பிட்ட நோக்கமும் இல்லாமல், தேசத்தைச் சுற்றி திரிந்து கொண்டிருந்தாலும், அவளை அரைகுறை பட்டினியாய் விட்டுச் சென்றா லும், அல்லது வேறெந்த காரியமானாலும், பிள்ளைகளுக்குப் புசிக்க ஒன்றுமில்லாமல் விட்டு விட்டாலும், நாங்கள் இன்னமும் திருமணம் செய்து கொண்டவர்களாக இருக்கிறோம். அவள் என்னை விவாகரத்து பண்ணினாலும் கூட, என் சரீரத்தில் ஜீவனுள்ள வரை நான் இன்னும் திருமணம் செய்து கொண்டவனாக இருக்கிறேன். (ஏனென்றால்) நான் அந்த வாக்குறுதியை, "மரணம் நம்மைப் பிரிக்கும் வரை" என்று எடுத்துள்ளேன். அது சரியே. நாங்கள் இன்னமும் திருமணமானவர் களாகவே இருக்கிறோம். ஆனால், நான் ஒரு நல்ல கணவனாக இல்லாமல் இருந்தாலும், அவளும் ஒரு நல்ல மனைவியாய் இல்லாமல் இருந்தாலும், அதே சமயத்தில் நாங்கள் ஒருவரையொருவர் நேசிப்போ மேயானால், நாங்கள் ஒன்று சேர்ந்து பாரத்தை ஒன்றாய் இழுப்போம்.

**306.** அந்தவிதமாகவே தேவனும் அவருடைய சபையும் உள்ளது. நீங்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிறக்கும் போது, உண்மையாகவே உங்களுக்கு ஏற்றத்தாழ்வுகள் உண்டாகும். ஆனால் நீங்கள் அப்பொழுதும் ஒரு கிறிஸ்தவனாகவே இருக்கின்றீர்கள், நீங்கள் அப்பொழுதும் தேவனுடைய ஆவியினால் பிறந்திருக்கிறீர்கள். ஒருக் கால் தேவன் உங்களை குறித்த காலத்துக்கு முன்பே பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

***...ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த் தும்... மறுதலித்துப் போனவர்கள்... மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.***

**307.** இப்பொழுது, சபையே, நீங்கள் அதைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். பிரமாணத் தைக் கடைபிடிப்பவர்களின் பாகத்தை உண்மையாகவே அடைத்துப் போடும்படியாக நான் இன்னும் சற்று பலமான ஒன்றை நான் எடுத்துக் காண்பிக்கட்டும். நாம் எபிரெயர் 10–ம் அதிகாரத்திற்குச் சென்று, அப்படியே இதை சற்று நோக்கிப் பார்ப்போமாக.

**308.** (எபிரெயர்) **10–**ம் அதிகாரம் **26–**ம் வசனம்.

***சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களி னிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்,***

***நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.***

***மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே;***

***தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்.***

**309.** இப்பொழுது நீங்களோ, "சகோதரன் பிரன்ஹாம் அவர் களே, அதைக் குறித்து என்ன? அது எப்படி தோன்றுகிறது?" என்று கேட்கலாம்.

இப்பொழுது, அப்படியே வாசிப்பதற்கு – "வேதவாக்கியம் அதைக் கூறுவதில்லை" என்று நான் எண்ணுகிறேன். அது ஒரு கிறிஸ்தவனைக் குறித்துப் பேசுவதல்ல. அது தேவனுடைய வார்த் தையைக் கேட்டு, அதிலிருந்து விலகிப் போய் விட்ட ஒரு மனிதனைக் குறித்துப் பேசுவதாய் உள்ளது. புரிகிறதா?

சுவிசேஷம் நமக்குப் பிரசங்கிக்கப்பட்ட பின்பு, ***நாம் பாவம் செய்கிறவர்களாக இருந்தால்,*** (பாவம் என்றால் என்ன? அவிசுவாசம்.) ***நாம் மனப்பூர்வமாய்*** அவிசுவாசித்தால், ***பாவங்களி னிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல்,***

**310.** பாவம் என்றால் என்ன? அவிசுவாசம். பரிசுத்த யோவான் **4–**வது அதிகாரத்தை வாசியுங்கள். இயேசு, "விசுவாசியாதவனோ ஏற்கனவே ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று" என்றார். பாவம் என்பது



புகைபிடித்தல், மது அருந்துதல், விபச்சாரம் செய்தல் என்பதல்ல. நீங்கள் ஒரு அவிசுவாசியாய் இருக்கின்றபடியால், நீங்கள் அதைச் செய்கிறீர்கள். அவை வெறுமனே தன்மைகளாய் இருக்கின்றன. நீங்கள் ஒரு அவிசுவாசியாய் இருக்கின்றபடியால் நீங்கள் அதைச் செய்கிறீர் கள். வெறுமனே புகைபிடிப்பதை விட்டு விடுவது, மது அருந்துவதை விட்டு விடுவது, அது போன்ற காரியங்கள், அது நீங்கள் ஒரு கிறிஸ்தவராய் இருக்கிறீர்கள் என்பதைப் அர்த்தப்படுத்துகிறதில்லை. அவை வெறுமனே உங்களுடைய மனமாற்றத்தின் தன்மைகளாய் உள்ளன. ஆனால், உங்களால் அவைகளைச் செய்ய முடியும். நீங்கள் இவைகளை விட்டு விடக்கூடியவர்களாய் இருந்தும், அப்போதும் விசுவாசியாமல் இருப்பீர்கள்.

**311.** இப்பொழுது கவனியுங்கள்.

...அவன் அடைந்த பின்பு, ***மனப்பூர்வமாய்*** அவிசுவாசித்தால்,...

**312.** இல்லை – இல்லை, "அவன் கிறிஸ்துவைத் தன்னுடைய இருதயத்தில் ஏற்றுக் கொண்ட பிறகு." வேதம் அதைக் கூறுகிறதில்லை. "அவன்..." என்று கூறப்பட்டுள்ளது.

***சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு, நாம் மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால்,*** மனப்பூர்வமாய் அவிசுவாசிப்பவர்களாய் இருந்தால்,...

இது புரிகிறதா? இது ஒரு கிறிஸ்தவனிடத்தில் பேசிக் கொண்டதே அல்ல.

**313.** அண்மையில் யாரோ ஒரு ஸ்திரீ என்னிடத்தில் வந்து, "சகோதரன் பிரன்ஹாம், நான் ஒரு கிறிஸ்தவள், ஆனால் நான் பரிசுத்த ஆவியை தூஷித்து விட்டேன்" என்று கூறினாள்.

**314.** அதற்கு நானோ, "அது கூடாத காரியம்" என்றேன். ஒரு கிறிஸ்தவன் பரிசுத்த ஆவியை தூஷிக்கவே முடியாது. நீங்கள் அதைச் செய்யவே முடியாது. ஒரு கிறிஸ்தவனின் ஆவி கிறிஸ்துவினுடைய ஆவியோடு சாட்சி பகருகிறது. புரிகிறதா? தேவனைக் குறித்த ஒவ்வொரு காரியத்தையும் நீங்கள், "தேவனுடையது" என்றே அழைப்பீர்கள்.

**315.** ஆனால் நீங்கள் மாம்ச சிந்தையுடையவர்களாய் இருந்தால், நீங்கள் பரிசுத்த ஆவியைப் பரியாசம் பண்ணி, நகைப்பீர்கள்; நீங்கள் எவ்வளவு தான் சபைக்குச் சென்றாலும் கவலையில்லை, நீங்கள் இன்னமும் ஒரு பாவியாகத்தான் இருக்கிறீர்கள், நீங்கள் பரிசுத்த ஆவியை தூஷித்துக் கொண்டிருக்கிறீர்கள். இயேசு வானவர் அவர்களுடைய சிந்தனைகளைப் பகுத்தறிந்ததை அவர்கள் கண்ட போது, அவர் ஒரு "குறி சொல்பவராக" இருந்தார் என்று அவர்கள் கூறினார்கள்.

**316.** இயேசுவோ, "நீங்கள்... நான் அதற்காக உங்களை மன்னிப்பேன், ஆனால் பரிசுத்த ஆவி வரும் போது, நீங்கள் அதற்கு விரோதமாக ஒரு வார்த்தை பேசினாலும், அது உங்களுக்கு ஒருபோதும் மன்னிக்கப்பட மாட்டாது" என்றார்.

ஏனென்றால், அவர்கள், "அவர் அசுத்த ஆவியை உடையவராய் இருக்கிறார்" என்று கூறி, தேவனுடைய ஆவியை, "ஒரு அசுத்தமான காரியம்" என்று அழைத்தனர்.

ஒரு கிறிஸ்தவனால் அதைச் செய்ய முடியாது. ஒரு கிறிஸ்தவன் எப்பொழுதுமே தேவனுடைய ஆவியை, "நீதியென்றே" அழைப்பான். புரிகிறதா? ஒரு கிறிஸ்தவனால் பரிசுத்த ஆவியை தூஷிக்க முடியாது. அது வெளியே இருக்கிறவர்கள் தூஷிக்கிறதாய் உள்ளது.

**317.** அங்கு நின்று கொண்டிருந்தது கிறிஸ்தவர்களாய் இருக்கவில்லை. அது பக்தியுள்ள மதசம்பந்தமான ஜனங்களாக இருந்தது, அது வைதீக யூதர்கள், இறையியலில் பாண்டித்தியம் பெற்றவர்கள் (doctors of divinity) போன்றவர்கள். அவர்கள் தான் அவரைக் குறித்தும், அவருடைய கிரியைகளைக் குறித்தும் பரிகாசம் பண்ணிக் கொண்டு, தேவனுடைய கிரியைகளை, "அதைச் செய்கிறதோ ஒரு அசுத்த ஆவி"யென்றும் அழைத்தனர்.

**318.** இன்றைக்கு எத்தனை பேர் டி.டி.டி (D.D.D), பிஎச். டி (Ph.D) போன்றவைகளைத் தங்களுடைய பெயருக்குப் பக்கத்தில் போட்டுக் கொண்டு, பரிசுத்த ஆவியை தூஷிக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? எத்தனை மகத்தான விறைப்பான வைதீகர்கள், கத்தோலிக்கர்கள், புராட்டஸ்டண்டுகள், வீதியில் நடந்து செல்லும்



போது, மெருகேற்றப்பட்ட மேதைகளாய், மிகுந்த திறமைசாலியாய் இருக்கின்றபடியால், பரிசுத்த ஆவியின் கிரியையைக் குறித்து பரியாசம் பண்ணுகிறார்கள்? அது சரியே. ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியைக் குறித்து பரியாசம் பண்ணுகிறார்கள். ஆகையால் அவர்கள் அதைத் தூஷிக்கிறார்கள்.

ஆனால் மீண்டும் பிறந்த ஒரு கிறிஸ்தவனால் அதைச் செய்ய முடியாது. அவன், "அது என்னுடைய சகோதரன். அது ஜீவனுள்ள தேவனுடைய ஆவியாய் இருக்கிறது" என்று கூறுவான். அது உண்மை. ஒரு கிறிஸ்தவனால் பரிசுத்த ஆவியை தூஷிக்க முடியாது.

**319.** அது பரிசுத்த ஆவியைத் தூஷிக்கிற பாவியாய் உள்ளது; அவிசுவாசி, *பாவி*, ஒரு "அவிசுவாசி". இரண்டு காரியம் மாத்திரமே உண்டு: நீங்கள் ஒரு விசுவாசியாய் இருக்கிறீர்கள் அல்லது ஒரு அவிசுவாசியாய் இருக்கிறீர்கள்.

**320.** இப்பொழுது, இது உண்மையாகவே புண்படுத்தும்படியாய் உள்ளதால், இங்கே கவனியுங்கள். என்னை எப்பொழுதுமே தொல்லைப்படுத்திக் கொண்டு வந்திருந்த ஒரு காரியத்தைக் குறித்து ஒரு தரிசனம் கண்டிருந்தேன். அநேக வருடங்களுக்கு முன்னர், வழக்கமாக நான் அதைக் காண்பேன். நான், "ஓ, ஒரு மனிதன் ஒருமுறை பரிசுத்த ஆவியைப் பெற்று, அதன் பின்னர் பின்வாங்கிப் போவானேயானால், அப்பொழுது அவன் என்றென்றுமாய் இழக்கப்பட்டவனாய் இருப்பான்" என்றேன். என்னால் அதை மற்றவர் புரிந்து கொள்ளும்படி எடுத்துக் கூற முடியவில்லை.

**321.** நான், "'என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய, நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான். பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும், அவர்களில் ஒருவரும் கெட்டுப்போவதில்லை, நான் அவர்களைக் கடைசி நாளில் எழுப்புவேன். ஒருவனும் அவர்களை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதில்லை' என்று ஏன் இந்தவிதமாய் அது வேதத்தில் கூறப்பட்டுள்ளது. அது இதனோடு எப்படி வேறுபடுகிறது? என்னால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே. 'ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டு, (மறுதலித்துப் போனவர்களை புதுப்பிக்கிறது) கூடாத காரியம்' என்றுள்ளதே" என்றேன். நான், "ஏதோ

காரியம் தவறாய் உள்ளது. என்னால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே" என்று எண்ணினேன்.

நான் அநேக வருடங்களுக்கு முன்பு, ஒரு சிறு பெந்தெகோஸ்தே கூட்டத்துக்குச் சென்றிருந்தேன்.

**322.** இன்றிரவு அதை நினைவில் வைத்திருப்பவர் யாருமே சபையில் இல்லையென்று நான் யூகிக்கிறேன். அநேக ஆண்டுகளுக்கு முன்னர், இது கிட்டத்தட்ட கூடாரம் கட்டப்பட்ட சமயத்தில் நிகழ்ந்ததாய் உள்ளது. அநேகமாக அங்கே பின்னால் அமர்ந்துள்ள சகோதரன் கிரகாம் அல்லது யாராவது ஒருவர் நினைவில் வைத்திருக்கலாம். சகோதரர்களே, நீங்கள் முதலில் இங்கு இருந்தீர்களா இல்லையா என்றே எனக்குத் தெரியாது. சகோதரன் மகோனி இருந்தார் என்று நான் நினைக்கிறேன். ஆம், எனக்குத் திருமணம் ஆவதற்கு சற்று முன்னர் இது நிகழ்ந்தது.

**323.** அந்த வரம் கிரியை செய்த போது, நான் அதைக் குறித்து பயமடைந்திருந்தேன். அவர்கள் அது பிசாசுடையதாய் இருந்தது என்று என்னிடத்தில் கூறியிருந்தனர். கர்த்தருடைய தூதன் அதை என்னிடத்தில் கூறும் வரையில் நான் அதை அறிந்து கொள்ளவே யில்லை.

**324.** நான் மிஷவாக்கா என்ற இடத்திற்குச் சென்றேன். அங்கு நான் அந்த கூட்டத்தில் அமர்ந்திருந்தேன். நான் அதுவரையில் அது போன்று அதிகமாக சத்தமிடுதலையும் அழுவதையும் தேவனைத் துதித்தலையும் ஒருபோதும் கேட்டதேயில்லை. அப்பொழுது நான், "சகோதரனே, இது பரலோகம்" என்றே எண்ணிக் கொண்டேன். ஓ, எப்படியாய் அவர்கள் மேலும் கீழுமாய் ஓடுவார்கள்.

**325.** அவர்கள் அந்த கூட்டத்தை நிறவேற்றுமை நிமித்தமாக வடக்கில் நடத்த வேண்டியதாய் இருந்தது. அங்கே கறுப்பு நிறத்தவரும் வெள்ளைக்காரரும் ஒன்று சேர்ந்திருந்தனர். அந்த PAW மற்றும் அந்த PAJC என்ற இருபிரிவினரும் கலந்து ஒன்றாய் ஐக்கிய பெந்தெகோஸ் தேவாக (United Pentecostal) அது இருந்தது. ஆனால் அவர்களோ மிஷவாக்கா என்ற இடத்தில் அங்கிருந்த சகோதரன் ரோயி அவர் களுடைய கூடாரத்தில் என்னே ஒரு எழுப்புதல் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். நான் ஆர்வமுள்ள ஒரு நபராய் அங்கே பின்னா



லுள்ள இருக்கையில் அமர்ந்து இவை எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது நான் அந்தக் காரியங்களை அதற்கு முன் ஒருபோதும் கண்டிராதவனாய் இருந்தேன்.

**326.** அங்கே ஒரு மனிதன் உட்கார்ந்து கொண்டிருந்தார்... நான் அதை இதற்கு முன்பு ஒருபோதும் பகிரங்கமாகக் கூறினதே யில்லை. அங்கே ஒரு பக்கத்தில் ஒரு மனிதன் உட்கார்ந்து கொண் டிருந்தார். மற்றொரு பக்கத்திலோ இன்னொரு மனிதன் உட்கார்ந்து கொண்டிருந்தார். ஒருவர் அந்நிய பாஷையில் பேச மற்றொருவர் அதை வியாக்கியானித்தார். வித்தியாசமான காரியங்கள் சம்பவிக்கப்போவதாய் இருந்ததை அவர்கள் கூறினர். அப்பொழுது, *இந்த* ஒருவர் அந்நிய பாஷையில் பேச *அந்த* ஒருவர் வியாக்கியானித்தார். நானோ, "என்னே அது அற்புதமாய் உள்ளதல்லவா!" என்று எண்ணினேன். மேலும் நான், "எவ்வளவு மகிமையாய் உள்ளது! அவர்கள் மனுஷ ரூபத்தில் இறங்கி வந்த தூதர்களாய் இருக்க வேண்டும்" என்று எண்ணிக் கொண்டேன்.

**327.** நல்லது, நான் வீட்டிலிருந்து 1 டாலர் 75 சென்ட்டுகள் மாத்திரமே எடுத்துக் கொண்டு வந்திருந்தேன். எனவே என்னால் என்னுடைய வண்டிக்கு எரிவாயுவை நிறைத்துக் கொள்ள முடிந்தது. நான் அந்த இரவு ஒரு சோள வயலில் உறங்கினேன். நான் அதைக் குறித்து ஒரு பாகத்தை ஒரு புத்தகத்தில் எழுதியுள்ளேன், ஆனால் அதைக் குறித்த எல்லாவற்றையும் எழுதவில்லை, ஏனென்றால் நான் அவர்களுடைய உணர்வுகளைப் புண்படுத்த விரும்பவில்லை. எனவே, அந்த இரவு, அவர்களோ, "எல்லா பிரசங்கிமார்களும் மேடைக்கு வாருங்கள்" என்றார்கள். அப்பொழுது நான் மேடைக்குச் சென்றேன். அப்பொழுது அங்கிருந்தவர்களிலேயே நான் தான் மிகவும் வாலிபமான பிரசங்கியாயிருந்தேன்.

**328.** ஆகையால், அடுத்த நாள் காலையில், அவர்கள் என்னை பிரசங்கிக்க வரும்படி கேட்டுக்கொண்டனர். நானோ மறைந்து கொண்டேன். உங்களுக்குத் தெரியும், ஒரு கறுப்பு நிற மனிதர், "இதோ அவர் இருக்கிறார்" என்று கூறி விட்டார். நான் அங்கு உட்கார்ந் திருப்பதை அவர் அம்பலப்படுத்திய போது, அதைக் குறித்த சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கும்.

**329.** ஆகையால் அந்த நாளன்று நான் பிரசங்கித்த பிறகு, சுற்றி நடந்து கொண்டே, "என்னால் அந்த இரண்டு மனிதர்களை

மாத்திரம் சந்திக்க முடிந்தால் நலமாயிருக்குமே” என்று எண்ணினேன். அப்பொழுது அவர்கள் கூட்டம் நடத்தினர். அப்பொழுது ஒருவர் எழுந்து தன் முகம் வெளுத்துப்போகும் அளவுக்கு, அந்நிய பாஷையில் பேசினார். மற்றொருவர் அந்த வார்த்தைகளுக்கு வியாக்கியானம் அளித்து, “**கர்த்தர் உரைக்கிறதாவது**, ஒரு குறிப்பிட்ட நபர் இன்னார் இன்னார் இன்ன இன்ன பெயரைக் கொண்டவர் இங்கே இருக்கிறார். அவர் இதை இன்னின்ன காரியத்தை செய்ய வேண்டும்” என்று கூறினார். சகோதரனே, அது உண்மையாய் இருந்தது. பின்னர் மற்றொருவர் எழும்பி, அந்நிய பாஷையில் பேச இவர் வியாக்கியா னித்தார்.

**330.** நான், “ஓ, என்னே, இது அற்புதமாய் இல்லையா!” என்று எண்ணினேன். ஆகையால், அந்த நாளில், நான் இவ்வாறு எண்ணிப் பார்த்த பிறகு, வெளியே போய் ஜெபித்தேன். நான், “கர்த்தாவே, நீர் அதை எனக்காக மீண்டும் செய்வீரோ” என்று எண்ணினேன். அப்பொழுது தரிசனங்களை என்னவென்று அழைப்பது என்று எனக்குத் தெரியாதிருந்தது.

**331.** நான் வெளியே போய் ஜெபித்தேன். மேலும் எனக்கு உதவி செய்யும்படியாய் கர்த்தரை வேண்டிக் கொண்டேன். நான் கட்டிடத்தைச் சுற்றி நடந்து சென்று, நான் அவர்களில் ஒருவரை சந்திக்க நேர்ந்தது. இப்பொழுது, கர்த்தரோ காரியங்களை அறிந்து கொள்ளும்படியாக ஒரு வழியை எனக்குக் கொடுக்கிறார். அப்பொழுது நான் அவருடைய கரத்தைக் குலுக்கினேன். மேலும் நான், “நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

அதற்கு அவர், “நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? உங்களுடைய பெயரென்ன?” என்று கேட்டார்.

அப்பொழுது நான், “பிரன்ஹாம்” என்றேன்.

அதற்கு அவரோ, “ஓ, நீங்கள் தானே இக்காலையில் பிரசங் கித்த அந்த வாலிப நபர்” என்றார்.

அப்பொழுது நான், “ஆம், ஐயா” என்றேன்.

**332.** நான் அவரோடு உரையாடலை நிகழ்த்துகையில், நான் அவருடைய ஆவியைப் பற்றிப்பிடித்தேன். அவர் ஒரு அசலான கிறிஸ்த வராக இருந்தார், ஒரு சுத்தமான கிறிஸ்தவ சரோதரனாக இருந்தார்.



அவர் ஒரு விசுவாசியாக இருந்தார் என்றே நான் பொருட்படுத்திக் கூறுகிறேன். நான், “ஓ, அது அற்புதமாய் இருக்கிறதல்லவா!” என்று எண்ணினேன்.

**333.** அப்பொழுதிலிருந்து ஏறுக்குறைய ஒரு மணி நேரத்தில், அங்கே ஒரு காரின் அருகே காண்பதற்கு ஒரு பெரிய மகத்தான பெரிய காராய் இருந்தது, அதன் பின்புறத்திலோ, “இயேசு மாத்திரமே” என்று எழுதப்பட்டிருந்தது. அங்கே மற்றொரு மனிதன் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது நான் புறப்பட்டு போய், “ஐயா, நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

**334.** அதற்கு அவர், “நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?” என்றார். மேலும் அவர், “நீங்கள் இக்காலையில் பேசின சகோதரன் பிரன்ஹாம் தானே” என்றார்.

**335.** அப்பொழுது நான், “ஆம், ஐயா. நான் தான்” என்றேன். மேலும் நான், “மகத்தான தேவனுடைய வரம் இரண்டு சகோதரர் களாகிய உங்களில் கிரியை செய்கிறதைக் கண்டு, களிகூருகிறேன்” என்றேன்.

**336.** அதற்கு அவரோ, “திரு. பிரன்ஹாம் அவர்களே, உங்களுக்கு நன்றி” என்றார். அப்பொழுது நான் அவருடைய ஆவியை உணரத்துவங்கினேன். ஒரு தரிசனம் உண்டானது. நான் எப்போதாவது ஒரு மாய்மாலக்காரனிடத்தில் பேசியிருந்தேனேயானால், அது அங்கி ருந்த அவர்களில் ஒருவராகத்தான் இருந்தது. அவருடைய மனைவி கறுப்பு தலைமுடியினையுடைய ஒரு ஸ்திரீயாக இருந்தாள். அவரோ இரண்டு பிள்ளைகள் இருந்த ஒரு இளம்பொன் நிறமான தலைமுடி யினையுடைய ஒரு ஸ்திரீயோடு வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் இவ்வுலகில் ஒரு உண்மையான கிறிஸ்தவராய் இல்லாமல் இருந்தார்.

**337.** அப்பொழுது நான், “என்னத்திற்குள்ளாக நான் வந்துள் ளேன்? நான் தூதர்களுக்கு மத்தியில் இருந்ததாகத்தானே எண்ணி யிருந்தேன். இப்பொழுதோ நான் பிசாசுகளின் மத்தியில் இருப்பதாய் உள்ளது. ஏதோ காரியம் சம்பவித்துள்ளது. இங்கே ஒரு அசலான கிறிஸ்தவர் ஒருவர் இருந்தார். *இந்த* மனிதனின் மேல் விழுந்த அதே ஆவி *இந்த* மற்றொரு மனிதனின் மேலும் விழுந்து கொண்டிருந்ததே” என்று கூறினேன். மேலும் நான், “இப்பொழுது நான் முற்றிலும் குழப்பமடைந்துள்ளேன்” என்றேன். என்ன செய்வதென்றே எனக்குத்

தெரியவில்லை. நான் கதறி தேவனிடத்தில் கெஞ்சினேன். எதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது எனக்குத் தெரியாமல் இருந்தது.

**338.** அவர்களோ என்னைப் பற்றி அறிந்து கொள்ள முற்பட்டு, "நான் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தேனா?" என்று கேட்டனர். இந்த நபர் பெற்றுக் கொண்டார். அதற்கு நான், "இல்லை, ஐயா, நீங்கள் அதைப் பெற்றுக் கொண்ட விதமாக அல்ல" என்றேன்.

மேலும், "நீர் அந்நிய பாஷையில் எப்பொழுதாவது பேசின துண்டா?" என்று கேட்டனர்.

அதற்கு நான், "இல்லை, ஐயா" என்றேன்.

அப்பொழுது, "நீர் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை" என்று கூறி விட்டனர்.

**339.** ஆகையால் நான், "என் சகோதரனே, நீங்கள் அநேகமாக சரியாக இருக்கலாம். நான் அதைப் பெற்றுக் கொள்ளாமல் இருக்க லாம். ஏனென்றால் நீங்கள் பெற்றுள்ளதை நான் பெற்றுக்கொள்ள வில்லை" என்றேன். சற்று கழித்து, நான் அதைப் பெற்றுக் கொள்ளா ததைக் குறித்து மகிழ்ச்சி அடைந்தேன்.

**340.** ஆகையால் அதன் பின்னர் நான் அதைக் கவனித்தேன், அது செயல்பட்டுக் கொண்டிருந்த விதத்தையும் நான் கண்டேன்.

**341.** ஆகையால், ஒரு நாள், நீண்ட காலத்திற்கு முன் நான் இங்கே ஜெபித்துக் கொண்டிருந்தேன். நான் ஏன் ஜெபித்துக் கொண்டிருந்தேன் என்றும், யாருக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன் என்றும் உங்களுக்குக் கூறவுள்ளேன், அது ராய் டேவிஸ் அவர்களுக் காக. நான் வெளியே அங்கே ஜெபித்துக் கொண்டிருந்தேன், ஏனென் றால் அவர் என்னை, "ஒரு கூத்தாடி பொம்மை" என்று அழைத்திருந் தார். எனவே அதற்காக தேவன் அவரை மன்னிக்கும்படி நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். அவர் அங்கே காகிதத்தில் அச்சடிக்கும் ஒரு அச்சகத்தை பின்னால் வைத்திருந்தார். அவ்வாறு கூறின இரண்டு இரவுகளுக்குப் பிறகு, அவர்கள் அச்சடித்துக் கொண்டிருக்கையிலேயே அந்த அச்சகம் தீப்பற்றி எரிந்து போய் விட்டது.

**342.** எனவே நான் கிரீன்மில்லுக்குப் பின்னாலிருந்த ஒரு பழைய குகையில் அங்கே நின்று கொண்டிருந்தேன். பின்னர் நான்



அங்கிருந்து வெளியே நடந்தேன். நான் இரண்டு நாட்களாக அங்கே பின்னால் ஜெபித்துக் கொண்டிருந்தேன். அண்மையில் நான் சகோ. உட் அவர்களுக்குக் காண்பித்த பழைய மரத்துண்டின் மேல் என்னு டைய வேதாகமத்தை வைத்திருந்தேன். என்னுடைய வேதாகமத்தை அங்கு வைத்தேன். பின்னர் கால்களை அகற்றினவாறு அந்தக் கட்டையின் மீது அமர்ந்தேன். அப்பொழுது காற்று வீசினது. நான், "நீண்ட நேரமாக அந்தக் குகையின் பின்னே இருப்பதால், நான் ஒரு சிறு பகுதியை வாசிக்கலாம்" என்று எண்ணினேன். ஆகையால் நான் வேதாகமத்தை எடுத்து, வாசிக்கத் துவங்கினேன், அது இந்த அதிகாரமாக இருந்தது. நல்லது, நான் வாசிக்கத் துவங்கினேன். அப்பொழுது நான் வியப்புறத் துவங்கினேன். புரிகிறதா?

***ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும்... பரிசுத்த ஆவியைப் பெற்றும்,***

***தேவனுடைய நல்வார்த்தையையும், இனிவரும் உலகத் தின் (பெலன்களையும்) ருசிபார்த்தும்,***

***மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து, அவமானப் படுத்துகிற படியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.***

**343.** நான், "அங்கே அந்த வேதவாக்கியம் உள்ளதே" என்று எண்ணினேன். ஆனால் ஏதோவொன்று என்னோடு அழுத்தமாய் இருந்தது. அப்பொழுது நான், "துவக்கத்தில் அவர் திரும்பி பேசினது இதோ உள்ளது, 'செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல் போன்றவற்றைப் போடாமல் என்று துவக்கத்தில் கூறியிருந்தார். மனந் திரும்புதலின் அஸ்திபாரத்தைப் போடாமல்' இங்கே அவர், 'புதியதாய் மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது. ஆனால் இந்த காரியங்களை மீண்டும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக' என்று கூறுகிறார்" என்று எண்ணத் துவங்கினேன். அதன் பின்னர் நான் வாசிக்கத் துவங்கினேன். அதன் பின்னர் நான் அடுத்த வசனத்தை வாசித்தேன்.

**எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும்.**

**முள் செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதன் முடிவு.**

**344.** நான் அதை வாசிக்கும் போது, ஏதோவொன்று என்னைக் குலுக்கிறது. அப்பொழுது நான், “கர்த்தாவே, அது ராய் டேவிஸை சார்ந்ததாய் இருக்கவில்லையே. நீர் ஏன் அதைச் செய்தீர்?” என்று எண்ணினேன்.

**345.** நான் மற்றொரு பக்கத்தைத் திருப்பத் துவங்கினேன். நான் அதற்கு மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டியதாய் இருந்தது, “ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டு, (மறுதலித்துப்போனவர்களை புதுப்பிக்கிறது) கூடாத காரியம்” என்று அந்த வசனத்தினூடாக மீண்டும் படிக்க வேண்டியதாய் இருந்தது.

**346.** அப்பொழுது நான், “கர்த்தாவே, இது என்னவாய் இருக்கிறது? கர்த்தாவே, நீர் என்ன பொருட்படுத்திக்கூறுகிறீர்?” என்று எண்ணிப் பார்த்தேன்.

**347.** அதன்பின்னர் நான் திரும்பி, அதன் பேரில் ஜெபிக்கும் படிக்கு, என்னுடைய குகைக்குள்ளாகச் சென்றேன். நான் ஜெபித்த போதோ, நான் ஒரு உலகம் சுழலுவதைக் கண்டேன். அந்த முழு உலகமும் மிக அருமையாக முழுமையாக உழப்பட்டிருந்தது. ஒரு மனிதன் வெள்ளை வஸ்திரம் தரித்தவனாய் அதைச் சுற்றிச் செல்வதையும், அவன் தன் கரத்தினுள் ஒரு பையினை வைத்திருந்ததையும் கண்டேன். அவன் அதைச் சுற்றி நடந்து செல்லுகையில் விதைகளை விதைத்துக் கொண்டிருந்தான். அவன் பூமியின் வளைவைச் சுற்றி நடந்து சென்றான். அவன் சுற்றிலும் விதைத்த உடனே, இதோ ஒரு நபர் உண்மையாகவே கறுப்பு நிற ஆடைகளை அணிந்தவனாய் வந்தான், காண்பதற்கோ திறமைசாலியான ஒரு நபரைப் போன்றிருந்து, இந்த விதமாய் மெல்ல நழுவி வந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனும் விதைகளை வைத்திருந்தான். அவன் பூமியின் வளைவைச் சுற்றிச் சென்ற போது, முந்தினவன் விதைத்ததற்கு பின்னாலேயே



இவன் ஏதோவொன்றை தூவிக் கொண்டேயிருந்தான்; ஒவ்வொருவரும் (தனித்தனியே) விதைத்ததைக் கவனியுங்கள். அப்பொழுது நான் நின்று அத்தரிசனத்தைக் கவனித்தேன்.

**348.** அவன் உலகத்தைச் சுற்றிலும் (விதைத்து விட்டுச்) சென்ற போது, ஒரு மகத்தான பெரிய பயிர் விளைச்சல் உண்டானது, அது கோதுமையாயிருந்தது. அதன் பின்னர் கோதுமைகளுக்கிடையே களைகளும், களை போன்ற மற்ற செடிகளும் முளைத்திருந்தன.

**349.** அப்பொழுது ஒரு வறட்சி உண்டானது. ஓ, எப்படியாய் அந்த சிறு கோதுமை மணிகள் தங்களுடைய சிறிய தலைகளை கீழே தொங்க விட்டுக் கொண்டு, தண்ணீருக்காக தாகமாக இருந்து கொண்டிருந்தன. இந்த களைகளும் தங்களுடைய தலைகளைத் தொங்க விட்டு கொண்டு, அவைகளும் தண்ணீருக்காக தாகமாக இருந்து கொண்டிருந்தன. ஒவ்வொருவரும் மழைக்காக ஜெபித்துக் கொண்டிருந்தனர். சற்று கழித்து ஒரு பெரிய மேகம் உண்டாகி, பூமி முழுவதற்கும் தண்ணீரைப் பொழிந்தது. அப்பொழுது அந்த களைகள் குதித்தெழும்பி, “தேவனுக்கு மகிமை! அல்லேலூயா! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!” என்று ஆரவாரமிடத் தொடங்கின.

**350.** இந்தக் கோதுமை மணிகளும் குதித்தெழும்பி, “தேவனுக்கு மகிமை! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!” என்று ஆரவாரமிடத் தொடங்கின.

**351.** அப்பொழுது வேதவாக்கியம் எனக்குத் தோன்றிற்று, அது மத்தேயு புத்தகம் 5–ம் அதிகாரம் 45–ம் வசனத்தில் காணப்படுகிறது. இயேசு மத்தேயு 5:45–ல் என்ன கூறினார் என்பதைக் கவனியுங்கள். இப்பொழுது நாம் வாசிக்கையில் கூர்ந்து கவனியுங்கள். மத்தேயு 5–ம் அதிகாரம் 45, 46–ம் வசனம்; 44–வது வசனத்திலிருந்து துவங்குவோம்.

**நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்.**

**இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்.**

**352.** ஆகையால், நீங்கள் பாருங்கள், கோதுமையை வளரச் செய்கின்ற அதே மழையானது களையையும் வளரச் செய்கிறது. ஆகையால் நான் அந்தக் காட்சியைப் புரிந்து கொண்டேன். அங்கே தான் உங்களுடைய மாம்ச பிரகாரமாக அறிக்கை செய்பவன் சபையில் இருக்கிறான். ஆனால் அவனுடைய கனிகளோ... அவன் சத்தமிடலாம், குதிக்கலாம், நடனமாடலாம், அந்நிய பாஷையில் பேசலாம்; ஆனால் அவனுடைய கனிகள்: அவன் ஒரு களையாய் இருக்கிறான். அங்கே மற்றொருவன் இருக்கிறான், அவனும் அதே ஆவியைப் பெற்றுள்ளான். பரிசுத்த ஆவியானது ஒரு கூட்ட ஜனங்களுக்குள் விழும் போது, ஒரு மாய்மாலக்காரனாலும் பரிசுத்த ஆவியினால் சத்தமிட முடியும். (கோதுமைக்கென்று) அனுப்பப்பட்ட அதே மழையினால், களையும் உயிர்வாழ முடியும். அதைத்தான் பவுல் இங்கே பேசிக் கொண்டிருக்கிறான். ஆனால் ஒரு களையை கோதுமையாக மாற்றுவது என்பதோ அல்லது ஒரு கோதுமையை ஒரு களையாக மாற்றுவது என்பதோ கூடாத காரியம். நீங்கள் அதைப் புரிந்து கொண்டீர்களா? (சபையார், "ஆமென்" என்கின்றனர் – ஆசிரியர்.)

**ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும்... பரிசுத்த ஆவியைப் பெற்றும்,**

**தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும்,**

**மறுதலித்துப் போனவர்கள் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.**

அவன் என்ன கூறினான் என்பதைக் கவனியுங்கள்.



**எப்படியெனில், தன் மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது...**

**முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும்;...**

**ஆகையால், கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேசங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம்,**

**ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல்... என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக.**

**353.** பாருங்கள், அந்த நாட்களில் மாம்ச பிரகாரமான விசுவாசி இருந்தது போன்றே இது இன்றைக்கும் உள்ளது, அவர்கள், "நல்லது, நான் சபையைச் சார்ந்திருக்கிறேன். நான் மனந்திரும்பியிருக்கிறேன். நான்—நான் மேலே வந்தேன். நான் ஒரு அறிக்கை செய்தேன். நான் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறேன்" என்றே கூற விரும்புகிறார்கள். பாருங்கள், அவர்கள் அந்த மாம்சபிரகாரமான சீர்திருத்தங்களையே போடுகிறார்கள். அது என்ன செய்கிறது? அது களைகளை உண்டுபண்ணுகிறது.

**354.** பூரணமாகுதல் என்ன செய்கிறது? அது கோதுமையாய் இருக்கிறது. கோதுமை தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. அவர் அதைத் தம்முடைய வார்த்தையாக உபயோகப்படுத்துகிறார். அது ஒரு வித்தாய் இருக்கிறது. எனவே அது வித்தைப் பிறப்பிக்கிறது.

**355.** அது உங்களுடைய இருதயத்தில் என்ன வித்து விதைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பொருத்ததாய் இருக்கிறது. நீ நரகத்தைக் குறித்து பயப்படுகின்ற காரணத்தால், சபைக்கு வருவாயானால், நீ நரகத்திற்கு செல்ல விரும்பாத – நீ விரும்பாத காரணத்தால், சபையை சேர்ந்து கொள்வாயானால், நீ இன்னமும் ஒரு களையாய் இருக்கிறாய். நீங்கள் – நீங்கள் புகழ்பெற்றவராக இருக்க வேண்டும் என்ற காரணத்தால் சபையை சேர்ந்து கொள்வீர்களானால், நீங்கள் இன்னமும் ஒரு களையாக இருக்கிறீர்கள். செய்யப்பட வேண்டிய இந்த சம்பிரதாய

காரியங்கள் எல்லாவற்றையும் நீங்கள் செய்து, நீங்கள் பெற்றிருப்பது எல்லாம் அவ்வளவு தான் என்றால், நீங்கள் இன்னமும் ஒரு களையாய் இருக்கிறீர்கள்.

**356.** ஆனால் ஒரு உண்மையான அசலான கிறிஸ்தவன் உலகம் மரித்ததாகி, கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரு புதிய சிருஷ்டியாகும் வரை, பூரணமாகுதலை நோக்கித் தொடருகிறான். அப்படியானால், அந்த மனிதன் எப்பொழுதுமே விழுந்து போவது கூடாத காரியமாய் உள்ளது. வேதம் என்ன கூறியுள்ளது! அது எப்படி மற்ற வேதவாக் கியங்களோடு ஒப்பிடப்படுகிறது என்பதைப் பார்த்தீர்களா? அது எப்படி அங்கே சரியாக அதனுடைய ஸ்தானத்தில் போடப்படுகிறது என்பதைப் பார்த்தீர்களா?

**357.** அது இங்கே, "ஒரு மனிதன் ஒருமுறை இரட்சிக்கப்பட்டு விட்டால், அவன் ஒரு போதும் இழக்கப்பட முடியாது" என்றும், மேலும் இங்கு வந்து, "ஆனால், நீங்கள் இழக்கப்பட்டிருந்தால், அல்லது தூஷிக் கிறவர்களாக இருந்தால், புதுப்பிக்கிறது கூடாத காரியம் என்றும் கூற முடியும்?" நிச்சயமாகவே, நீங்கள் தூஷிக்கிற ஒருவராய் இருந்தால், அப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவராய் இருக்கவில்லை.

**358.** "ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவை சபிக்கப்பட்டவர் என்று சொல்ல மாட்டான்." பரிசுத்த யோவான் 4... அல்லது 1 யோவான் 4-ம் அதிகாரம். கிறிஸ்துவின் ஆவியாலே பேசுகிற எவனும் இயேசுவை "சபிக்கப்பட்டவர்" என்று சொல்ல மாட்டான். கிறிஸ்தவ சபையிலுள்ள ஒவ்வொரு தேவனுடைய ஆவியும் தேவன் கூறின ஒவ்வொரு காரியத்தோடும் இணங்குகிறது.

**359.** நாம், "அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்பட் டார். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" என்று கூறுகிற வசனத்தை இங்கே வாசிக்கிறோம்.

**360.** பண்டைய மாம்ச சிந்தையோ, "அற்புதங்களின் நாட்கள் கடந்து விட்டன. நான் வேதபண்டிதர் ஜோன்ஸ்" என்று கூறுகிறது. புரிகிறதா? "தெய்வீக சுகமளித்தல் அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது. இதயப்பூர்வமான மாற்றம் என்ற அப்படிப்பட்ட காரியமே கிடையாது. நீங்கள் உணர்ச்சிவசப்படுகிற ஒரு கூட்டமாக இருக்கி றீர்கள். நீங்கள் உணர்ச்சிவசப்பட்டவர்களாக இருக்கிறீர்கள். பாருங்கள், அங்கே கூறினதெல்லாம் அவ்வளவு தான். அதற்கு வேறெந்த காரியமும் கிடையாது. நாங்கள் பிரஸ்பிடேரியன்களாக இருக்கிறோம். நாங்கள் லூத்தரன்களாக இருக்கிறோம்" அல்லது அது என்னவாக இருந்தாலும் சரி. "நாம் எங்கே நின்று கொண்டிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம்."



**361.** ஆனால் தேவனுடைய ஆவி என்ன கூறுகிறது? இயேசு கிறிஸ்து மாறாதவராக இங்கே இருக்கிறாரே! "ஆமென்," என்றே தேவனுடைய ஆவி கூறுகிறது. அது உடனடியாக தேவனுடைய வார்த்தையோடு இணங்கிப் போகிறது. ஆம், ஐயா. அது சரியாக அங்கே உள்ளது. இப்பொழுது நான் என்ன பொருட்படுத்திக் கூறுகிறேன் என்பது புரிகிறதா?

**362.** பவுல், "இந்த மாம்ச பிரகாரமான சீர்திருத்தங்கள் செத்த கிரியைகள்" என்றான்.

**363.** ஆனால் ஜீவன் எங்கே உண்டாகிறது என்றால், இது தான் பரிபூரணமாகும், "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பின வரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, அவன் ஆக்கி னைத்தீர்ப்புக்கு உட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட் பட்டிருக்கிறான். நான் அவனுக்கு நித்திய ஜீவனை அளித்து, அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன். பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும், அவர்களில் ஒருவரும் கெட்டுப் போவதில்லை." அவ்வாறு கெட்டுப் போக முடியாது.

**364.** ஆகையால், இங்கே அது என்ன செய்கிறது என்றால் – அது என்ன செய்கிறது? அது ஜனங்களை கட்டுப்பாடற்ற முறையில் இருக்கச் செய்கிறது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். சகோதரனே, வெறுப்பு காட்டும் முகச்சுளிப்பு கொண்ட ஒரு சர்ப்பத்தின் (கட்டுப் பாட்டின்) கீழே நீங்கள் தேவனுக்கு ஊழியம் செய்கிறதில்லை. ஒரு கறுப்பு பாம்பு போன்ற சாட்டையைக் கொண்டு, உங்களைச் சுற்றித் துரத்துகிற நபர்களில் ஒருவராய் தேவன் இருக்கவில்லை. அவர் ஒரு பிதாவாய் இருக்கிறார். அவர் அன்பாய் இருக்கிறார். தேவன் அன்பாய் இருக்கிறார். வேதம், பரிசுத்த யோவானில், "அன்புள்ளவன் தேவனு டையவனாயிருக்கிறான்" என்று உரைத்துள்ளது.

**365.** நீங்கள் தேவனை நேசிக்கிறீர்கள். நான் வெளியே சென்று இன்றிரவு மது அருந்தி விட்டிருந்தால், நான் தேவனை நேசிக்க

மாட்டேன். நான் என்னுடைய ஜீவியத்தில் ஒருபோதும் மது அருந்தியதே இல்லை. ஆனால் நான் வெளியே சென்று, மது அருந்தி விட்டிருந்தால், அப்பொழுது நான் ஒரு சவுக்கடியைப் பெற்றுக்கொள்ள பயப்பட மாட்டேன். நான் போய் அதைச் செய்யப் போவதில்லை, நான் போக வில்லை என்பதற்கு அதுவல்ல காரணம். நான் அதைச் செய்யா ததற்குக் காரணம், நான் அவரை நேசிக்கிறேன் என்பதே காரணமாய் உள்ளது. அவர் என்னை நேசிக்கிறார். அது நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் அல்ல. அது நான் செய்ய வேண்டிய ஏதோவொரு காரியமாய் இருக்கவில்லை. அது அவர் எனக்காக ஏதோவொன்றை ஏற்கனவே செய்துள்ளார் என்ற காரணமாய் உள்ளது, நான் அதற்காக அவரை நேசிக்கிறேன். அங்கே தான் உங்கள் காரியமே உள்ளது.

366. ஆகையால், "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை" என்று ஆவியினாலே வாக்களிக்கப்பட்டுள்ளது. அவர் பொய்யுரைத்தாரா அல்லது அவர் உண்மையைச் சொன்னாரா? அவர் உண்மையைக் கூறினார். ஆகையால், இது எப்படி வியாக்கியானிக்கப்படுகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்களா? ஒரு மனிதன் ஒருமுறை கிருபையில் (இரட்சிக்கப்பட்ட) பின்னர் அவன் விழுந்து போவதென்பது கூடாத காரியமாய் உள்ளது. அவனால் விழுந்து போக முடியாது. அவனால் விழுந்து போக முடியும், நிச்சயமாக, ஆனால் அவன் மீண்டும் மனந்திரும்பி, மீண்டும் பழைய கிரியைகளைச் செய்ய அந்த ஸ்தானத்திற்குத் திரும்பிச் செல்லாமல் இருக்க மாட்டான்.

367. ஆகையால், நீங்கள் எல்லோரும் ஒரு எழுப்புதலிலிருந்து மற்றொரு எழுப்புதலுக்கு, ஒரு இடத்திலிருந்து பின்னர் மற்றொரு இடத்திற்கு அவசர அவசரமாய் செல்கிறீர்கள், நீங்கள் ஸ்திரப்பட வில்லை என்பதை நீங்கள் காண்கிறதில்லையா? நீங்கள் நிலைநிறுத்தப் பட்டிருக்கவில்லை. இப்பொழுது, நிச்சயமாக... நீங்களோ, "சகோதரன் பிரன்ஹாம், எனக்குத் தெரியாது..." என்று கூறலாம். நிச்சயமாகவே. தேவன் கொண்டுள்ள ஊழியத்தை அவர் எனக்கு அளிக்காவிட்டால், நான் தவறாய் இருப்பேன். அது வேதவாக்கியத்தால் நிரூபிக்கப்படா விட்டால், அப்பொழுது அது தவறாகும். ஆனால் இங்கே அதை ஆதரிக்கும்படியான வேதவாக்கியம் உள்ளதே.



368. சபையானது ஒருபோதும் ஒரு இடத்தைத் தவற விட்டதே இல்லை... ஜனங்களோ போய், சபையில் சேர்ந்து கொண்டு, வம்பு பண்ணி, சண்டை போட்டு, குழப்பம் விளைவித்து, மற்றும் ஒவ்வொரு காரியத்தையும் செய்து, மாம்ச பிரகாரமாக, எந்தவிதமாக வேண்டு மானாலும் ஒரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, "ஓ, ஆம், நான் ஒரு கிறிஸ்தவன்" என்று கூறுகிறார்கள்.

369. ஒரு பெண்மணி, தன்னுடைய கணவன் ஒரு மனிதனோடு ஓடிக்கொண்டிருந்தான் என்று என்னிடத்தில் கூறின அதைக் குறித்த ஒரு அறிக்கையை நான் இன்றைக்குக் கேட்டேன். அவள் ஒவ்வொரு இடமாகச் சென்று அவர்களை பிடித்து விட்டாளாம். அந்த ஸ்திரீ, "'நான் ஒரு கிறிஸ்தவள்' என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்படி செய்யப் போகிறேன்" என்றாள்.

370. ஞாயிறு காலை இங்கே பிரசங்கிக்கிற ஜிம்மி ஆஸ்பார்ன் அவர்களை நோக்கிப் பாருங்கள்; வாரமுழுவதும் பூகி ஊகி என்ற ஆரவார இசையை இசைத்துக் கொண்டும், ராக் அன்ட் ரோல் என்ற நடனத்தை ஆடிக் கொண்டும், மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டுமிருக்கிறார்.

371. எல்விஸ் பிரஸ்லியை நோக்கிப் பாருங்கள், அவன் 1947–ம் ஆண்டின் புதிய யூதாஸ்காரியோத்தாயிருக்கிறான், அவன் அசெம் பிளிஸ் ஆஃப் காட் என்ற பெந்தெகோஸ்தே சபையில் பரிசுத்த ஆவிக்காக அந்நிய பாஷை பேசி கடந்த 50 வருடங்களில் எல்லா மதுபானக்கடைகளாலும் (நரகத்தில்) வாதிக்கப்படுகிற ஆத்துமாக் களைக்காட்டிலும் அதிகமான ஆத்துமாக்களை வாதிக்கப்படுவதற்கு (நரகத்துக்கு) அனுப்பிவிட்டான். உலக முழுவதிலும் உள்ள 19 வயதுக்குட்பட்ட சிறு பிள்ளைகள் சிறு பெண் பிள்ளைகள் தங்க ளுடைய உள்ளாடைகளைக் கழற்றி, அவனுடைய கையெழுத்தைப் பெற அதை மேடையின் மேல் எறிகிறார்கள். அந்தவிதமாக அவனுடைய சரீரத்தில் அவனுடைய இடுப்புக்கு கீழான மிக இழிவான அங்க அசைவுகளை அவர்கள் தொலைக்காட்சியில் காட்டமாட்டார்கள். அந்நிய பாஷையில் பேசுவது பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கான அத்தாட்சியா? ஓ, சகோதரனே, பரிசுத்த ஆவி அங்கே இருந்தால், அது அந்தவிதமாக செயல்படாது. நீங்கள் அதைப் பார்க்கிலும் மேலானதை

அறிந்து கொள்வீர்கள். நிச்சயமாக அவை போன்று செயல்படாது. தேவன் தூய்மையையும், துப்புரவையும், பரிசுத்தத்தையும் நேசிக்கிறார்.

**372.** நான் என்னை ஒரு கிறிஸ்தவனாக்கிக் கொள்ள சுத்தமாக தூய்மையாக பரிசுத்தமாக நடந்து கொள்ளுகிறதில்லை. ஆனால் கிறிஸ்து எனக்குள் இருந்து, எனக்குள்ளாக ஜீவிக்கிறார். நான் அவரை நேசிக்கிறேன். நான் எந்த காரியத்தையாவது தவறாகச் செய்தால், அது என்னைச் சரியாக அங்கேயே கண்டிக்கிறது. நான், "தேவனே என்னை மன்னியும்" என்று கூறுகிறேன். நான் ஒவ்வொரு நாளும் அனுதினமும் மன்னிப்புக் கேட்க வேண்டும். நீங்களும் கூட தவறு செய்கிறீர்கள். நிச்சயமாக நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

**373.** ஆனால் இப்பொழுது நீங்கள் – நீங்கள் மாம்ச பிரகார மானவர்களாக இருந்தால், நீங்கள் அப்படியே பின்னால் காத்திருந்து, "ஆ, நல்லது, அதெல்லாம் பரவாயில்லை. நான் சபையைச் சார்ந்தவன்" என்று கூறுவீர்கள். புரிகிறதா? பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தை நீங்கள் பெற்றுக்கொள்ளாம லிருக்கும் போது, அப்பொழுது நீங்கள் தூஷிக்கிறீர்கள். அப்பொழுது நீங்கள் அதைக் குறித்து பரிகசித்து, அதை, "பொல்லாத ஆவி" என்று அழைக்கிறீர்கள். "அது ஒருகூட்ட பரிசுத்த உருளைகள்" என்றும் கூறுகிறீர்கள். அப்பொழுது நீங்கள் உங்களை கிருபைக்கும் நியாயத் தீர்ப்புக்கும் இடையே வேறுபிரித்துக் கொள்கிறீர்கள். அப்பொழுது நீங்கள் என்றென்றைக்குமாய் முடிவு பெற்று விடுகின்றீர்கள்.

**374.** இயேசு, "அதற்கு விரோதமாக ஒரு வார்த்தை கூறினால், அது இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படாது" என்றார். ஆவியி னால் பிறந்த ஒரு கிறிஸ்தவன், அதைக் குறித்து பொல்லாங்காய் கூற முடியாது, ஏனென்றால், அந்த தேவ ஆவியால் பொல்லாங்கு கூற முடியாது. அது வார்த்தையோடு ஒவ்விப் போகிறது. அது உண்மை.

**375.** அந்தக் காரணத்தினால் தான் ஜனங்கள் என்னிடத்தில் கூற முயற்சிக்கிறார்கள், அங்குள்ள அந்த அக்கினிஸ்தம்பத்தை இங்கே நம்மோடு பிரசன்னமாயிருக்கிறதை, அதை அவர்கள், "அது பிசாசாய் இருந்தது" என்றும், அதை, "அது வெறுமனே கட்டுக்கதையாய் இருந் தது" என்று இந்த எல்லாவற்றையும் கூற முயற்சிக்கிறார்கள். ஆனால் அது கட்டுக்கதை அல்லவென்பதை புகைப்படக்கருவியானது நிரூபித்து விட்டது. அந்த செயல்கள் சரியாக வேதாகமத்தில் காணப்படுகின்றன,



பவுலை தமஸ்குவிற்குப் போகும் வழியில் சந்தித்தது, அதே அக்கினிஸ்தம்பமே ஆகும். முன்காலத்தில் அவர் அங்கு செய்த இந்த எல்லா காரியங்களையும் சரியாக அதேவிதமாக வேதாகமத்தின் மூலம் மீண்டும் செய்து கொண்டிருக்கிறார். அவர் கிறிஸ்துவாக தேவகுமார னாய் இருக்கிறார்.

**376.** நாம் மீண்டும் பிறந்திருக்கும் போது, நாம் நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கிறபடியால், கெட்டுப்போக முடியாது. எனவே ஒரு மனிதன் விழுந்து போவது கூடாத காரியமாகும். அதைத்தான் வேதம் கூறியுள்ளது.

**377.** பவுல் என்ன கூறுகிறான் என்பதை இப்பொழுது கவனியுங்கள். நான் அதில் மீதமுள்ள பாகத்தை வாசிப்பேன், அது இப்போது சரியாக பொருள்பட தோன்றுகிறதா என்று பாருங்கள். நாம் அப்படியே ஒரு நிமிடம் தொடர்ந்து செல்வோம். 8–வது வசனம்.

***முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு.*** (அது அவிசுவாசியாய் உள்ளது.)

**378.** இப்பொழுது பவுலைக் கவனியுங்கள். "ஆனால், பிரியமா னவர்களே,..." இப்பொழுது, அவன் நியாயப்பிரமாணத்தின் கீழ் கொண்டு வர முயற்சிப்பவர்களைக் குறித்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் யாவற்றையும் செய்ய முயற்சிக்கிறவர்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறான் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதே சமயத்தில் அவர்கள் தங்களால் இருக்க முடிந்த அளவு சபையில் சடங்காசாரங்களைக் கொண்டிருந்தனர். அவர்கள் ஞானஸ்நானம், கைகளை வைக்குதல், மற்றும் இந்த எல்லா காரியங்களையும் உடையவர்களாய் இருந்தனர்.

***பிரியமானவர்களே,... நன்மையானவைகளும்,... உங்களிடத்தில் உண்டாயிருக்கிறதென்று நம்பியிருக்கிறோம்.***

அங்கு தான் உங்கள் காரியமே உள்ளது. இப்பொழுது அவன் கூறுவதற்குச் செவி கொடுங்கள்.

**...நாங்கள் இப்படி சொன்னாலும், நன்மையானவைகளும், இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிறதென்று நம்பியிருக்கிறோம்.**

**ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும், செய்து வருகிறதினாலும், தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தை மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே.**

**379.** அவர் என்னத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறார் என்று புரிகிறதா? அவர் கிறிஸ்தவர்கள் விழுந்து போவதைக் குறித்தும் அவர்கள் திரும்பி வருவது கூடாத காரியம் என்பதைக் குறித்தும் பேசிக் கொண்டிருக்கவில்லை. அவர் சீர்திருத்த முறைமையினூடாகச் செல்லும் மாம்ச பிரகாரமான விசுவாசிகளைக் குறித்தே பேசிக் கொண்டிருக்கிறார். "ஆனால்," அவன், "மீண்டும் பிறந்த உங்களிடத்தில், கிறிஸ்தவர்களாய் இருக்கிற உங்களிடத்தில், பிரியமானவர்களே, நன்மையானவைகள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிறதென்று நம்பியிருக்கிறோம். நீங்கள் அந்தக் காரியங்களைக் கூறுகிறதில்லை. நீங்கள் அந்தவிதமான ஜீவியம் ஜீவிக்கிறதில்லை. நீங்கள் கிறிஸ்துவோடு பாதுகாக்கப்பட்டிருக்கிறீர்கள்" என்றான்.

இங்கே பின்னால் அவர் என்ன கூறினார்? இப்பொழுது, இந்தக் காலையில், நாம் இருந்த எபிரெயர் 10–ம் அதிகாரத்திற்கு நாம் மீண்டும் செல்வோமாக. (ஒலிநாடாவில் காலியிடம் – ஆசிரியர்.)

**380.** இப்பொழுது நாம் மீண்டும் எபேசியர் 4:30க்கு திருப்புவோமாக. அப்படியே ஒரு நிமிடம், நாம் இதைப் புரிந்து கொள்வோமாக. வேதவாக்கியம் வேதவாக்கியத்தோடு ஒத்துப் போகும்படி இதை ஆதரிக்க இது என்ன கூறுகிறதென்பதைக் கவனியுங்கள். நாம் எபேசியர் 4–ஐப் பார்ப்போமாக. எபேசியர் 4:30. நாம் வாசித்து அது என்ன கூறுகிறது என்று பார்ப்போமாக.

**...தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.**

ஊ? நாம் எப்படி அந்த சரீரத்திற்குள்ளாய் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம். ஒரே ஆவியினால்.



**...நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.**

அது சரிதானே? (சபையார், "ஆமென்" என்கின்றனர் – ஆசிரியர்.) நீங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால், கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக முத்திரையிடப்பட்டிருக்கிறீர்கள். ஒரு எழுப்புதலிலிருந்து மற்றொன்று வரையல்ல, ஆனால் சரீர மீட்பின் நாள் வரையில். அந்தவிதமாகத்தான் நீங்கள் முத்திரையிடப்பட்டிருக்கிறீர்கள். ஆகையால், நீங்கள் இழக்கப்பட்டு போவதற்கான வழியே கிடையாது

**381.** நீங்கள் பயமடைந்துள்ளீர்கள். அந்தக் காரணத்தினால்தான் பயம், ஒரு பயம், பயம் சந்தேகத்தோடு சவகாசம் செய்கிறது.

அன்போ விசுவாசத்தோடு சவகாசம் செய்கிறது. நான் என் பிதாவை நேசிக்கிறேன். நான் அவரைக் குறித்து பயப்படுகிறதில்லை, ஏனென்றால், நான் அவரை நேசிக்கிறேன். அவர் எனக்குத் தீங்கிழைக்க மாட்டார். அவர் எனக்காக நன்மையே செய்வார். நான் அவரைக் குறித்து பயமடைந்திருந்தால், "ஓ, அவர் அதைச் செய்வாரா அல்லது இல்லையா என்று எனக்குத் தெரியாது" என்று பயமடைந்திருந்தால் எப்படி இருக்கும்? புரிகிறதா?

**382.** ஆனால், நான் அவரை நேசிப்பேனேயானால், "ஆம், பிதாவே, நான் – நான் உம்மை நேசிக்கிறேன். நீர் – நீர் என்னுடைய பிதாவாக இருக்கிறீர் என்பதை நான் அறிவேன். நீர் என்னை நேசிக்கிறீர். நீர் உம்முடைய வார்த்தையைக் காத்துக் கொள்வீரா என்று நான் பயப்படவில்லை. அது எனக்கு உம்முடைய வாக்குத்தத்தமாய் உள்ளது" என்று கூறுவேன். அந்த விதமாகத்தான் தேவனுடைய ஆவி செய்கிறது.

**383.** "ஆனால், ஓ, நான் *இதைச்* செய்திருந்தால், நான் *அதைச்* செய்திருந்தால்," என்றால். பாருங்கள், அப்பொழுது நீங்கள் பிரமாணங்களை கடைபிடிக்கும் பக்கத்திற்கு வருகின்றீர்கள். ஒரு போதும் பிரமாணங்களைக் கடைபிடிக்கும் பக்கத்திற்குச் செல்லாதீர்கள். அது எதிர்மறையான பக்கமாய் உள்ளது.

**384.** உங்களுக்குத் தேவை உறுதியான பக்கமே ஆகும். அது ஏற்கனவே முடிவுபெற்ற ஒரு கிரியையாய் உள்ளது. கிறிஸ்து மரித்தார்,

அவர் மரித்த போது, பாவம் கொல்லப்பட்டது. தேவன் உங்களை நித்திய ஜீவனுக்கென்று முன்நியமித்திருந்தால், "பிதாவானவர் எனக்கு கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்." அங்கு தான் உங்கள் காரியமே உள்ளது, நீங்கள் இழக்கப்பட முடியாது. நீங்கள் என்றென்றுமாய் பாதுகாக்கப்பட்டிருக்கிறீர்கள். "ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம், ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்." அங்கு தான் உங்கள் காரியமே உள்ளது. நாம் இழக்கப்பட வழியே கிடையாது. சரியே. இப்போது, அது உங்களை நலமாக உணரச் செய்யவில்லையா? (சபையார், "ஆமென்" என்கின்றனர் – ஆசிரியர்.)

**385.** இப்பொழுது, நீங்கள் ஒரு கிறிஸ்தவராய் இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் எப்படி அறிவீர்கள்? உங்களுடைய ஆவி அவருடைய ஆவியோடு சாட்சி பகரும் போது, தேவனுடைய அன்பு உங்கள் இருதயத்தில் இருக்கும் போது, நீங்கள் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, பொறுமை, நற்குணம், சாந்தம், இவைகளைப் பெற்றிருக்கிறீர்கள். அப்பொழுது நீங்கள்... அந்த ஆவியின் கனிகள் உங்களுடைய ஜீவியத்தைப் பின்தொடருகின்றன.

**386.** உங்களால் ஆவியில் நடனமாட முடியும் என்ற காரணத்தால் அல்ல, ஒ, இந்த நவீன காலத்திற்கு, அது ஒரு இசைப்பேழையை சத்தமிட்டு இசைக்கப்படும் போது, இங்கே அதற்கு ஏராளமானோர் ஆவியில் நடனமாடுகிறார்கள். அந்த காரியங்கள் எல்லாம் சரிதான். ஆனால் அவர்கள் அந்த முழு காரியத்தையுமே பிரமாணத்தைக் கடைபிடிக்கின்ற பக்கமாக எடுத்துக் கொள்கின்றனர், பாருங்கள், ஆகவே, அவர்கள் தேவனுடைய ஆவியையே பின்னால் விட்டு விட்டனர்.

**387.** அந்த காரணத்தினால் தான் தேவன் தம்மை வெளிப்படுத்தத் துவங்கும்போது, அவர்களோ, "அர்த்தமற்றது. நாங்கள் அதனோடு எந்த காரியத்தையும் செய்ய விரும்பவில்லை" என்று கூறி விடுகிறார்கள். அவர்கள் தேவனை அறிந்திருக்கவில்லை. அவர்கள் அதை ஒருபோதும் கண்டதேயில்லை. அவர்களால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை, ஏனென்றால் அங்கே உள்ளே ஒரு வித்தியாசமான ஜீவன் உள்ளது. அவனோ அதை அறிந்திருக்கவில்லை... கோதுமை மணியானது என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை களையானது



அறிந்து கொள்வதில்லை. கோதுமை மணியோ ஒரு வித்தியாசமான ஜீவனாய் உள்ளது.

**388.** அந்தவிதமாகத்தான் அது ஒரு கிறிஸ்தவனோடு உள்ளது, மாம்ச பிரகாரமான விசுவாசியோ, அறிக்கையிடுபவன், வெளியே போய், "ஓ, ஆம், நான் ஒரு கிறிஸ்தவன்" என்று அறிக்கையிடுகிறான். (அதே சமயத்தில்), அவன் தன்னுடைய வாயில் டெக்ஸாஸில் உள்ள ஒரு கொம்பற்ற இளங்காளையைப் போல ஒரு பெரிய சுருட்டினை வைத்திருக்கிறான்.

**389.** ஒரு ஸ்திரீ தன்னுடைய குட்டை கால்சட்டைகளோடு வந்து, "ஓ, ஆம், நான் ஒரு சபையின் அங்கத்தினள். நிச்சயமாகவே, நான் அங்கத்தினள் தான்" என்று கூறுகிறாள். நீங்கள் மாம்சபிரகாரமானவர்களேயல்லாமல், வேறொன்றுமில்லை என்பதை உங்களுடைய கனிகளே நிரூபித்து விடுகின்றன. அது உண்மையே. நிச்சயமாகவே, அது மாம்ச பிரகாரமானதாகவே உள்ளது. அதை அனுமதிக்கும்படியான காரியம் ஒன்று மாத்திரமே உள்ளது: அது ஒன்று மனநிலை குறைபாட்டுக் கோளாறு அல்லது உங்கள் மீதுள்ள ஒரு இச்சையான ஆவியாக இருக்கலாம். அது உண்மை.

**390.** நீங்கள் உலகத்தைப் போன்று செயல்பட வேண்டுமென்று விரும்பினால், வேதம், "நீங்கள் உலகத்திலும் உலகத்தின் காரியங்களிலும் அன்பு கூர்ந்தால், உங்களிடத்தில் தேவனுடைய அன்பே இல்லை" என்று உரைத்துள்ளது. ஆகையால் அங்கு தான் உங்கள் காரியமே உள்ளது.

**391.** இப்பொழுது, நீங்களோ, "ஓ, வேதம் கூறியுள்ளது. ஆகையால் நான் அதை செய்ய வேண்டும்" என்று கூறுகின்றீர்கள். இல்லை, அதுவல்ல அது. கிறிஸ்து உங்களுக்காக ஏதோவொரு காரியத்தை செய்யும் வரையில், அங்கேயே தரித்திருங்கள், அப்பொழுது உங்களிடத்திலிருந்து அதை எடுத்துப் போட்டு விடுகிறது. அப்பொழுது நீங்கள் தேவனுடைய ஆவியினால் பிறந்திருக்கிறீர்கள். நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்பதல்ல, அது அவர் உங்களுக்காக என்ன செய்துள்ளார் என்பதாய் உள்ளது. நீங்கள் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறீர்கள் என்ற ஒரு அன்பை நீங்கள் பெற்றுக்கொள்ளுகிற வரையில். அதன் பின்னர் நீங்கள் உங்களுடைய ஜீவியத்தைக் கவனித்துப் பாருங்கள், அது – அது (வார்த்தையோடு)

சரிவரப் பொருந்துகிறதா என்று பாருங்கள். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையை சரி செய்ய முயற்சிக்கின்ற காரணத்தால் அல்ல, ஆனால் தேவன் உங்களை அவருடைய ஆவியின் கீழ்படிதலுக்குள் கொண்டு வருகிற காரணத்தினாலேயாம். அது தேவனுடைய வழியில் நீங்கள் உங்களையே வழிநடத்திக் கொள்வதல்ல. அது தேவன் தம்முடைய சொந்த வழியில் உங்களை வழிநடத்துகிறதாய் உள்ளது. நீங்கள் வழிநடத்துதலைச் செய்கிறதில்லை, ஆனால் தேவன் வழிநடத்துதலைச் செய்கிறதாய் உள்ளது.

**392.** இப்பொழுது, நாம் முடிவை நோக்கிச் செல்லுகையில், அப்படியே இதைக் கவனியுங்கள். 11–வது வசனம்.

**நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து,**

**உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரிந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்.**

**393.** இப்பொழுது, இங்கே இன்னுமொரு குறிப்பு உள்ளது.

**ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம் பண்ணின போது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமது பேரிலே தானே ஆணையிட்டு:**

**நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார்.**

**394.** தேவன் ஆபிரகாமைச் சந்தித்த போது! இப்பொழுது, ஆபிரகாம் எவ்வித தகுதிகளுமே இல்லாமலேயே உடன்படிக்கையைப் பெற்றுக் கொண்டான். உடன்படிக்கையோ ஆபிரகாமோடு செய்யப்பட்டது. அது முற்றிலும் கிருபையாயிருந்தது. ஆபிரகாம் ஒரு சிறந்த மனிதனாய் இருக்கவில்லை. அவன் ஒரு பரிசுத்த மனிதனாய் இருக்கவில்லை. அவன் ஒரு சாதாரண மனிதனாய் இருந்தான். தேவன் தெரிந்து கொள்ளுதலின்மூலம், ஆபிரகாமைத் தெரிந்து கொண்டார், ஏனென்றால் தேவன் அவனைத் தெரிந்து கொண்டார்; ஆபிரகாம் அதை விரும்பினான் என்ற காரணத்தினால் அல்ல, ஆபிரகாம் *இதைச்* செய்தான் என்ற காரணத்தினால் அல்ல, ஆபிரகாம் ஒரு நல்ல மனிதனாய் இருந்தான் என்ற காரணத்தினால் அல்ல, அவனுக்கு எல்லா தகுதிகளும் இருந்தது என்ற காரணத்தினால் அல்ல. ஆனால் அது தேவனுடைய தெரிந்து கொள்ளுதலாக இருந்தது. தேவன் ஆபிகாமைத் தெரிந்து கொண்டார்.



**395.** நான் இன்று கூறினது போல, “நாம் நம்முடைய பிரசங்கிமார்களைத் தேர்ந்தெடுக்கிறோம்” என்று நான் நம்புகிறேன். நாம் வெளியே போய் சுற்றி, “நல்லது, உதவிக்காரரில் ஒருவர் விட்டுச் சென்று விட்டார். எனவே அவருடைய ஸ்தானத்தை எடுக்கும்படியான சிறந்த மனிதனை இந்தக் கட்டிடத்தில் கண்டறிவோம். நல்லது, போதகர் விட்டுச் சென்று விட்டார்; நமக்குச் சிறந்த போதகர் கிடைக்கும்படியாய் நாம் கண்டறிவோமாக” என்று கூறுகிறோம். சில நேரங்களில் அது சரியாய் இருப்பதில்லை.

**396.** யூதாஸினுடைய இடத்தை எடுத்துக்கொள்ளும்படியான ஒரு மனிதனை அவர்கள் தெரிந்தெடுத்த போது, அவர்கள் தவறான மனிதனையே தெரிந்தெடுத்தனர். அவர்கள் ஒரு பெருந்தன்மையான மனிதனை மத்தியாவை, ஒரு மகத்தான வேதபாரகனை, ஒரு வேதப் பண்டிதனை, ஒரு ஸ்தானாபதியைத் தெரிந்தெடுத்தனர். அவர்களோ, “அவர் உண்மையாகவே அந்த ஸ்தானத்தை எடுத்துக் கொள்வார். மனிதரே, அவர் ஒரு உண்மையான மனிதனைப் போன்று காணப்படுகிறார்” என்று கூறினார்கள். ஆனால் அதுவோ தேவனுடைய தெரிந்து கொள்ளுதலாக இருக்கவில்லை. அவர்கள் இந்த மனிதனைத் தெரிந்தெடுத்தனர். அவனோ தேவனுக்காக எந்த காரியத்தையுமே ஒருபோதும் செய்யவேயில்லை.

**397.** ஆனால் தேவன் ஒரு சிறு உருவம் படைத்த, மிகவும் கோபம் கொண்ட, சற்று வளைந்தது போன்றதான கூர்மூக்கினைக் கொண்ட ஒரு சிறு யூதனையே அவருடைய தெரிந்து கொள்ளுதலாகத் தெரிந்து கொண்டார். அவனுடைய முகத்திலோ எப்பொழுதும் கோபம் குடிகொள்ள, “நான் போய் அவர்களைக் கைது செய்வேன்” என்றே அவன் கூறி வந்தான்.

**398.** தேவனோ, “நான் அவனுக்குள் ஏதோவொரு காரியத்தைக் காண்கிறேன். நான் அவனை உபயோகிப்பேன்” என்றார்.

**399.** தேவன் அவனுக்கு முன்பாக அங்கே அந்த பெரிய ஒளியில் பிரசன்னமானார். அப்பொழுது அவனோ, "ஆண்டவரே, நீர் யார்?" என்று கேட்டான்.

**400.** அதற்கு அவரோ, "நான் இயேசு, ஏன், முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம். நீ ஏன் என்னைத் துன்பப் படுத்துகிறாய்?" என்று கேட்டார். அந்தவிதமாக தேவன் *அந்த* மனிதனை எடுத்து, இயேசு கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக பூமியிலே மகத்தான மனிதர்களில் ஒருவனாக அவனை ஏற்படுத்தினார். அது தேவனுடைய தெரிந்து கொள்ளுதலாக இருந்தது.

**401.** இன்றைக்கோ, நாம் ஒரு தெரிந்து கொள்ளுதலைச் செய்ய முயற்சிக்கிறோம். சபைகளே நீங்கள், நீங்கள் *இந்த* மனிதனை இங்கே அனுப்புகிறீர்கள், *அந்த* மனிதனை இங்கே அனுப்புகிறீர்கள். அது அந்த விதமாகச் செய்யப்பட வேண்டியதில்லை. தேவனே வழிநடத்துதலைச் செய்கிறார். அது எல்லாவற்றிலும் எல்லாவற்றினூடாகவும் எல்லாவற்றின் மேலுமுள்ள தேவனாக உள்ளது; அது ஏதோவொரு சபையில் உள்ள ஏதாவொரு பத்திரம் என்ன கூறுகிறது என்பதல்ல. அது தேவன் அதைக் குறித்து என்ன கூறினார் என்பதாக உள்ளது. அதுவே வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது.

**402.** கவனியுங்கள். தேவன் ஆபிரகாமுக்கு நிபந்தனையற்ற ஒரு வாக்குத்தத்தத்தை உண்டுபண்ணினார். இப்பொழுது காத்திருங் கள். ஆபிரகாம் ஒரு காரியத்தையும் செய்ய வேண்டியதாய் இருக்க வில்லை. தேவன், "நான் அதை ஏற்கனவே செய்து விட்டேன்" என்று கூறினார்.

**403.** தேவன் ஆதாமுக்கு ஒரு வாக்குத்தத்தத்தைப் பண்ணி, "ஆதாமே, நீ *இதைத்* தொடாமல் இருந்தால், நீ என்றென்றைக்கும் ஜீவிப்பாய். ஆனால் நீ அதைப் புசிக்கும் நாளிலே அந்த நாளிலே சாவாய்" என்றார்.

**404.** ஆதாம், "எப்படியும் நான் இவை எல்லாவற்றையும் குறித்து வியப்படைகிறேன்?" என்றான். அவன் சென்று அதைப் புசித்து சேதப்படுத்தினான்.

**405.** தேவனோ ஒவ்வொரு முறையும்... ஒரு மனிதன் தன்னு டைய உடன்படிக்கையை தேவனோடு செய்யும் போது, அல்லது தேவன்



ஒரு மனிதனோடு செய்யும் போது, மனிதன் தன்னுடைய பாகத்தை முறித்துக் கொள்ளுகிறான். ஆகையால், தேவன் ஏதோவொரு காரி யத்தை செய்ய வேண்டியதாய் இருந்தது, ஏனென்றால், மனிதன் என்னவாக இருந்தான் என்பதை அவர் கண்டார். அவர்கள் முன்னறி விக்கப்பட்டிருந்தனர், அவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டிருந்தனர், தேவன் ஏதோவொரு காரியத்தையே செய்ய வேண்டியதாய் இருந்தது. ஆகையால் தேவன் இறங்கி வந்து, தம்முடைய உடன்படிக்கையை ஆபிரகாமோடு நிபந்தனையற்றதாய் பண்ணினார். அது நிபந்தனை யற்றதாய் இல்லாமல் இருந்திருந்தால், ஆபிரகாமோ நீண்ட காலத்திற்கு முன்பே இழக்கப்பட்டவனாய் இருந்திருப்பான்.

**406.** அவனோ அங்கே கேராரிலே அமர்ந்து கொண்டு, பின்வாங்கிப் போனவனாய், ஒரு பொய்யுரைத்ததை சற்று நோக்கிப் பாருங்கள். அவன் தன்னுடைய மனைவியை தன்னுடைய சொந்த உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மற்றொரு மனிதனுக்கு அளித்து விட்டான். என்னே ஒரு மனிதன்! அங்கே பின்வாங்கிப் போனவனாய் அமர்ந்திருந்தான். தேவனோ அவனிடத்தில், "நீ இங்கிருந்து போகாதே. இங்கேயே தரித்திரு" என்றார். பஞ்சமோ அவனை வெளியே ஓடச் செய்தது. எனவே எங்கே எளிமையாய் இருந்து கொண்டிருந்ததோ, அங்கே போய் அவன் அலைந்து திரிந்து கொண்டிருந்தான். ஒரு நபர் எளிமையான பாதையைத் தெரிந்து கொள்ளும் போது, அவனுக்கு என்ன சம்பவிக்கிறது என்பதை நீங்கள்அறிவீர்கள்.

**407.** அவன் வெளியே போய் பசுமையாய் இருந்த புல்வெளி யண்டை அலைந்து திரிந்து கொண்டிருந்தான். அவன் அங்கு சென்ற போது, அவன் அந்த ராஜாவினிடத்தில் தன்னுடைய சொந்த ஜீவனைக் காப்பாற்றிக் கொள்ள தன்னுடைய மனைவியை தன்னுடைய "சகோதரி" என்று கூறினான். இப்பொழுது அது ஒரு பொய்யாய் இருந்தது. எந்த மனிதனாவது தன்னுடைய உயிரைக் காப்பாற்ற தன்னுடைய மனைவியை எடுத்து, மற்றொரு மனிதனுக்கு அளிப்பானா! அவன் அங்கே ஒரு சிறு கூடாரத்தில் பின்வாங்கிப் போனவனாக அமர்ந்து கொண்டு, ஒரு பொய்யைக் கூறிக் கொண்டு, தன்னுடைய வெகு மதிகளை விட்டு, வாக்குத்தத்தத்தில் இருந்தும், மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்திலிருந்தும் பிரித்துக் கொண்டிருந்தான், ஆனாலும் அவன் அப்பொழுதும் தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தான்.

**408.** அங்கே அபிமெலேக்கு என்றொருவன் இருந்தான். அவன் ஒரு நல்லவனாய் பரிசுத்த மனிதனாய் இருந்தான். நிச்சயமாகவே, அவன் ஒவ்வொரு இரவும் தனக்கு ஜெபங்களை செய்து வந்தான். (அப்பொழுது) மீண்டும் அழகாகவும் வாலிபமாகவும் மாறி, அங்கே வந்திருந்த இந்த 100 வயது நிரம்பிய பாட்டியைக் கண்டான். அவன், "நான் அந்தப் பெண்ணுக்காகத்தான் காத்திருந்தேன், ஆகையால் நான் அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்" என்றான்.

**409.** அதற்கு ஆபிரகாமோ, "நீ அவளைத் திருமணம் செய்து கொள்லாம். அவள் என்னுடைய சகோதரி" என்று கூறி விட்டான்.

அவளும், "அவன் என்னுடைய சகோதரன்" என்று கூறினாள்.

**410.** ஆகையால் அவன் அவளை அங்கே அழைத்துச் சென்று அங்கிருந்த ஸ்திரீகளைக் கொண்டு, அவளை நீராட்டி, அவளுக்கு அருமையான ஆடைகளை அணியச் செய்து, ஒரு இளவரசியைப் போல ஆயத்தம் பண்ணினான். அதன் பின்னர் அவன், தன்னுடைய ஜெபங்களைச் செய்து விட்டு, தன்னுடைய படுக்கையில் கால்களை நீட்டிப் படுத்துக் கொண்டு, "நாளை, நான் அந்த அழகான எபிரெய பெண்ணை அங்குள்ள அந்த பையனின் சகோதரியை திருமணம் செய்வேன். ஓ, அது அற்புதமாக இருக்கும். ஓ, கர்த்தாவே, நான் உம்மை எப்படியாய் நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்! ஆம், ஐயா. அற்புதமாய் உள்ளதே!" என்று கூறினான்.

**411.** தேவனோ, "நீ ஒரு செத்த மனிதனைப்போன்று இருக்கிறாய்" என்றார். உ—ஊ!

(சகோதரன் பிரன்ஹாம் இருமுகிறார் – ஆசிரியர்.) என்னை மன்னிக்கவும். ஆபிர...

**412.** ஏன், ஆபிரகாமோ அங்கே பொய் சொல்லி விட்டு, பின்வாங்கிப் போய், அமர்ந்து கொண்டிருந்தான். இந்த மனிதனோ இங்கே நேர்மையும் நீதியும் செம்மையான மனிதனுமாய் இருந்தான். அப்பொழுது அவன், "ஏன், ஆண்டவரே, நீர் என் இருதயத்தின் உத்தமத்தை அறிவீர். அவன் அது அவனுடைய 'சகோதரி' என்று என்னிடத்தில் கூறினானல்லவா?" என்று கேட்டான்.

**413.** அப்பொழுது தேவன், "நான் உன்னுடைய இருதயத்தின் உத்தமத்தை அறிவேன். அந்த காரணத்தினால் தான் நீ எனக்கு



விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு தடுத்துக் கொண்டிருக்கிறேன். அது உண்மை. நான் உன்னுடைய இருதயத்தின் உத்தமத்தை அறிவேன். ஆனால் அவளுடைய கணவன் என்னுடைய தீர்க்கதரிசி" என்று கூறினார். அல்லேலூயா! ஓ, அது கிருபையாய் இருக்கவில்லை என்றால், என்னவாக இருக்கிறது? "பின்வாங்கிப் போய், ஒரு பொய்யைக் கூறி அங்கே அமர்ந்திருந்தான், ஆனால் அது அப்போதும் என்னுடைய தீர்க்கதரிசி. நீ காணிக்கை எடுத்துக் கொண்டு, அவனிடத்திற்குப் போய், அவனுடைய மனைவியையும் திரும்ப அழைத் துக் கொண்டு போய் திரும்ப ஒப்படைத்து விடு, இல்லையென்றால் நீ ஒரு செத்த மனிதனாய் இருக்கிறாய். நான் இனிமேல் உன்னுடைய ஜெபங்களுக்கு செவி கொடுக்க மாட்டேன். அவன் உனக்காக வேண்டுதல் செய்யட்டும்" என்றார். ஆமென். அங்கு தான் உங்கள் காரியமே உள்ளது. "அது என்னுடைய தீர்க்கதரிசி."

இப்பொழுது, நீங்கள், "ஓ, நான் ஆபிரகாமாய் இருந்திருக்க விரும்புகிறேன்" என்று கூறலாம்.

**414.** "நாம் கிறிஸ்துவுக்குள் மரித்தால், நாம் ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படி, சுதந்தரராயும் இருக்கிறோம்." உண்மை. அப்படித்தான் வேதம் உரைத்துள்ளது. நீங்கள் அதை வாசிக்க விரும்புகிறீர்களா? ஏன், வேதம் அதைக் கூறியுள்ளது, அந்த வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு மாத்திரமல்லாமல் அவனுடைய சந்ததி யாருக்குமாய் இருந்தது. உங்களைப் போலவே, ஆபிரகாம் அநேக வித்துக்களை உடையவனாயிருந்தான், நிச்சயமாக, அநேக பிள்ளை களை உடையவனாய் இருந்தான். இஸ்மவேல் அவனுடைய பிள்ளை யாய் இருந்தான். சாராள் மரித்த பின்பு, அவன் கேத்தூராள் என்னும் வேறொரு ஸ்திரீயின் மூலம் 7 அல்லது 8 பிள்ளைகளைப் பெற்றெடுத்தான். ஆனால் பாருங்கள். வித்தோ வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒன்றாக இருந்தது, அது ஈசாக்காக இருந்தது, ஈசாக்கி னூடாக கிறிஸ்து வந்தார், கிறிஸ்துவினூடாக நாம் வந்தோம். வாக்குத் தத்தமோ நிபந்தனையற்றதாய் இருக்கிறது.

**415.** இப்பொழுது, ஆபிரகாமைக் குறித்து என்ன? ஏன், அவன் அதைச் செய்திருந்திருப்பான், அது அவன் எப்பொழுதுமே திரும்பி வரக்கூடாத காரியமாக இருந்திருக்கும். நிச்சயமாக. அது அப்படி இருந்திருந்தால், சவுல் மீண்டும் திரும்பி வருவது கூடாத காரியமாக

இருந்திருக்கும், நீங்கள் வேதவாக்கியத்தை அந்த விதமாக வாசித்துப் பார்த்திருக்க வேண்டும். பாருங்கள்? ஆனால் அது அப்படியிருக்க வில்லை. தேவனுடைய வாக்குத்தத்தம் என்றென்றைக்குமாய் நிலைத் திருக்கிறது.

**416.** நாம் இங்கே ஒரு நிமிடம் வாசிப்போமாக. நீங்கள் அதை வாசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் கலாத்தியர் 3:16ஐ எடுத்து, அதை வாசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், இப்பொழுது வாக்குத்தத்தம் என்ன என்பதைப் பாருங்கள், நாம் அவருடைய வாக்குத்தத்தமாக இருக்கிறோமா அல்லது இல்லையா என்பதைப் பாருங்கள், 3:16. இங்கே கவனியுங்கள். சரி. நாம் 15–வது வசனத்தையும் கூட வாசிக்கப் போகிறோம்.

**சகோதரரே, மனுஷர் முறைமையின்படி, சொல்லுகிறேன்; மனுஷர்களுக்குள்ளே உறுதிப்பண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதுமில்லை, அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை.**

**ஆபிரகாமுக்கும், அவனுடைய சந்ததிக்கும்** சந்ததி, சந்ததி, **வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன;**

“ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும்.” இப்பொழுது கவனியுங்கள்.

**சந்ததிகளுக்கு** (பன்மை) **என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவரைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே.**

**417.** அப்படியானால், கிறிஸ்து ஆபிரகாமின் சந்ததியாயிருந்தார். “நாம் கிறிஸ்துவுக்குள்ளாக மரித்து, அவருடைய சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம், நாம் ஆபிரகாமின் சந்ததி யாராயும், வாக்குத்தத்தத்தின் சுதந்தரராயும் இருக்கிறோம்.” அப்படி யானால் அது எப்படி இருக்கிறது, தேவன் உங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருப்பாரானால், நீங்கள் எப்படி விழுந்து போகப் போகிறீர்கள்? எப்படி நீங்கள் பின்வாங்கிப் போகப் போகிறீர்கள், எப்படி விலகிப் போய் அதற்காக நரகத்திற்கு செல்ல வேண்டியவர்களாய் இருப்பீர்கள்?



**418.** இப்பொழுதோ, நீங்கள், “நல்லது, நாம் பின்வாங்கிப் போக முடியாதா?” என்று கேட்கலாம். முற்றிலுமாக உண்மை தான். நீங்கள் பின்வாங்கிப் போகும் போது, நீங்கள் அதற்கு (தண்டனையைப்) பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள், நீங்கள் கவலைப்படாதீர்கள். ஆபிர காம் அதைப் பெற்றுக் கொண்டான், மற்றவர்களும் அதைப் பெற்றுக் கொண்டனர், நீங்களும் அதைப் பெற்றுக் கொள்வீர்கள். அது நீங்கள் பாவம் செய்ய உரிமை அளிக்கிறது என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். அது உரிமை அளிக்கிறதேயில்லை. நீங்கள் செய்கிற ஒவ்வொரு காரியத்திற்காகவும் நீங்கள் அபராதம் செலுத்துவீர்கள். நீங்கள் எதை விதைத்தீர்களோ அதையே அறுப்பீர்கள். நீங்கள் ஒரு சிறு பாவத்தைச் செய்யும் போது, நீங்கள் ஒரு கழுவும் தண்ணீர் தொட்டி நிறைய அறுப்பீர்கள். அது உண்மை. ஆனால் சகோதரனே, நீங்கள் இழக்கப் பட்டிருக்கிறீர்கள் என்று அது பொருள்படுத்திக் கூறுகிறதில்லை. அது முற்றிலும் சரியே. ஆபிராம் சரியாக எதை விதைத்தானோ அதையே அறுத்தான். அது உண்மை. ஆனால் அவன் அப்பொழுதும் இரட்சிக்கப் பட்டிருந்தான்.

**419.** தேவன் இஸ்ரவேலரோடு உடன்படிக்கை பண்ணினார்: அவர்கள் தங்கள் சுதந்தரத்தை இழந்து போயினர், அவர்கள் வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை இழந்து, எகிப்திற்குள்ளாகச் சென்ற னர், ஆனால் அவர்கள் தங்கள் உடன்படிக்கையை இழந்து விடாமல் இருந்தனர். தேவன், “நான் ஆபிரகாமுக்கு பண்ணின என்னுடைய உடன்படிக்கையை நினைவுகூருகிறேன். நான் அதை நினைவுகூர்ந்து, நான் என் ஜனங்களை விடுவிக்கும்படி இறங்கி வந்தேன். மோசே, அங்கே போய், ‘என் ஜனங்களைப் போக விடு’ என்று நான் கூறினதாக பார்வோனிடத்தில் சொல்லு. நான் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் பண்ணின ஒரு வாக்குத்தத்தத்தை நினைவுகூருகிறேன்” என்றார்.

**420.** அது அதே காரியமாய் நம்மோடு உள்ளது. ஆகையால் நீங்கள் மரித்திருந்தால், உங்களுடைய ஜீவனோ கிறிஸ்துவினூடாக தேவனுக்குள் மறைந்திருக்கிறது, உங்களைத் தொடக்கூடிய காரியம் உலகத்தில் ஒன்றுமே கிடையாது. இப்பொழுது, நீங்கள் போய் தவறு செய்யலாம், ஆனால் நீங்கள் உண்மையாக மெய்யாகவே தேவனுடைய ஒரு பிள்ளையாக இருந்தால், நீங்கள் ஒரு தவறு செய்திருக்கிறீர்கள்

என்று நீங்கள் கண்டால், நீங்கள் எழும்ப மீண்டும் முயற்சிப்பீர்கள். அது உண்மை. நீங்கள் அங்கேயே விழுந்து கிடக்க மாட்டீர்கள்.

**421.** ஆனால் நீங்கள் கோழைத்தனமாக இருந்தால், நீங்கள் ஒரு களையாக இருந்தால், நீங்கள் எழும்ப முயற்சிக்காமலேயே, "ஆ, நல்லது, எப்படியும் அதனால் ஒன்றுமில்லை" என்று கூறிவிடுவீர்கள்.

**422.** தேவனுடைய இராஜ்யம் ஒரு மனிதன் ஒரு வலையை எடுத்துக் கொண்டு கடலுக்குள்ளாகப் போய், அதைப் போடுகிறதற்கு ஒப்பாக இருக்கிறது. அவன் அங்கிருந்து வரும் போது, அவன் ஆமை களையும், தவளைகளையும், பாம்புகளையும், பல்லிகளையும், சிலந்தி களையும், மீன்களையும் (வலையில்) உடையவனாய் வருகிறான். அந்தவிதமாகத்தான் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.

**423.** கர்த்தர் சகோதரன் கிரகாமைப் போன்ற ஒரு ஊழியக் காரனிடத்தில், "*இங்கே* போ. சகோதரன் கிரகாம், *இந்த* மூலைக்குச் சென்று கொஞ்ச காலம் மீன்பிடி" என்று கூறுவது போல். அப்பொழுது அவர் தம்முடைய வலையை எடுத்துக் கொண்டு போய் அங்கே மீன்பிடிக்கும் வலையை வீசத் தொடங்குகிறார்.

"சகோதர் பில், நீர் எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்?"

"நான் வேறு எங்காவது வெளியே போய், *இந்த* மூலையில் வலையைப் போடுகிறேன்."

**424.** பின்னர் நான் வலையை இழுத்து, "கர்த்தாவே, அதோ அவர்கள் அங்கே இருக்கிறார்கள், அவர்கள் யாராயிருக்கிறார்கள் என்பதை நீர் அறிந்திருக்கிறீர்" என்று கூறுகிறேன். நான் மீண்டும் வலையை இழுத்து, "சரி, கர்த்தாவே, இதோ அவர்கள் இருக்கிறார்கள்" என்று கூறுகிறேன்.

**425.** இப்பொழுது, ஒரு ஆமையோ துவக்கத்தில் ஒரு ஆமையாக இருந்தது. நீங்கள் அதை வலையில் பிடித்தீர்கள். அது உண்மை. அந்தவிதமாகவே ஜனங்கள், "ஓ, அல்லேலூயா! அல்லே லூயா! கர்த்தருக்கு ஸ்தோத்திரம், தேவனுக்கு மகிமை. அல்லேலூயா!" என்று உணர்ச்சிவசப்படுதலில் பிடிக்கப்படுகின்றனர். அவர்கள் அப்படியே வலையில் பிடிக்கப்படுகின்றனர். அவ்வளவு தான்.



**426.** அந்தப் பழைய ஆமையின் ஆவி அவர்களுக்குள் இருந்தால், அது நீடித்திருக்கப் போவதில்லை, அவர்களோ, "நல்லது, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்..." என்கிறார்கள். இதோ அவன் திரும்பிப் போகிறான். திரும்பவும் ஊர்ந்து சென்று விடுகிறான்.

**427.** நன்னீர் நண்டு வகையான வயோதிப பெண்மணியோ, "ஆனால் என்னால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே" என்று கூறிவிடுவாள். புரிகிறதா?

**428.** குமாரி சிலந்தியோ கொஞ்ச நேரம் அங்கே அமர்ந்து விட்டு, "பிளாப், பிளாப், பிளாப், நல்லது, எப்படியும் அங்கே எந்த காரியமும் இல்லை" என்று கூறிவிட்டு திரும்பி விடுகிறாள்.

**429.** குமாரி சர்ப்பமோ, "ஓ, அவர்கள் ஒரு கூட்ட பரிசுத்த உருளைகள். அங்கே உள்ளதெல்லாம் அவ்வளவு தான். அவர்களை விட மேலான உணர்ச்சியுள்ள இடத்திற்கு நான் செல்லுவேன்" என்று கூறுவாள். ஏன், நீ துவக்கத்திலேயே ஒரு சர்ப்பமாக இருக்கிறாய். சுவிசேஷ வலையானது உன்னைப் பிடித்து விட்டது, அவ்வளவு தான்.

**430.** ஆனால் மீனோ, எஜமானுடைய மேஜைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அவன் துவக்கத்திலேயே ஒரு மீனாக இருந்தான். அவனுடைய வித்து ஒரு மீனாக இருந்தது. அவன் ஒரு மீனாகவே துவங்கினான். தேவன் தம்முடைய மீனை உலகத் தோற்றமுதல் அறிந்திருந்தார். அல்லேலூயா!

**431.** நினைவிருக்கட்டும், அவை யாவும் அங்கே ஒரே சேற்றுத் தண்ணீரில் சுவாசித்துக் கொண்டிருந்தன. அவை யாவும் ஒரே சிற்றோடையில் சுவாசித்துக் கொண்டிருந்தன. அது உண்மை. "நாம் எல்லோரும் ஒரே ஆவிக்குரிய கன்மலையிலிருந்து பானம் பண்ணி னோம். எல்லோரும் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தோம்." மற்றவர் கள் புசித்த அதே மன்னாவையே காலேபும் யோசுவாவும் புசித்தனர். அவர்கள் யாவரும் வனாந்தரத்தில் மடிந்து போயினர். ஆனால் இருவர் (மாத்திரமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குப்) போக தெரிந்து கொள்ளப்பட்டு, அங்கு சென்றடைந்தனர். அது உண்மையே.

**432.** "நாம் எல்லோரும் ஒரே ஊற்றிலிருந்து பருகி வந்துள் ளோம்." ஆனால் பருகின யாவரும் இரட்சிக்கப்பட்டிருக்கவில்லை. நாம் யாவரும் ஒன்று சேர்ந்து சத்தமிட்டோம். நாம் யாவரும் ஒன்று சேர்ந்து

களிகூர்ந்தோம். ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களே இரட்சிக்கப் பட்டிருக்கின்றனர். நீங்கள் கவனித்தீர்களா? அது, "கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கத்தக்கதாக கடைசி நாட்க ளில் அந்த இரண்டு ஆவிகளும் மிகவும் நெருக்கமாக இருக்கும்" என்று கூறப்பட்டுள்ளது, கூடுமானால். புரிகிறதா? அது உண்மையான தேவனுடைய ஆவியால் நித்திய ஜீவனுக்கென்று தெரிந்துகொள்ளப்பட்ட வர்களாய் உள்ளது.

433. இப்பொழுது நாம் முடித்து கொண்டிருக்கிறோம். அதன் பின்னர் சகோதரன் நெவில் அவர்கள் நான் இங்கே எங்கே விட்டுச் செல்கிறேனோ அந்த பாகத்திலிருந்து எடுத்துப் பிரசங்கிப்பார். சரி.

**ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்து வை முன்னிட்டுத் தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன் படிக்கையை நானூற்றுமுப்பது வருஷத்திற்குப் பின்பு உண் டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த் தமாக்கமாட்டாது.**

நியாயப்பிரமாணம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், அந்த வாக்குத்தத்தத்தையே தேவன் ஆபிரகாமுக்கு அளித்தார்.

**அன்றியும், சுதந்தரமானது நியாயப்பிரமாணத்தினாலே உண்டானால், அது வாக்குத்தத்தத்தினாலே உண்டாயிராது; தேவன் அதை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தினாலே அருளிச் செய்தாரே.**

நீங்கள் செய்கிற எந்த காரியத்தினாலும் அல்ல, எந்த நியாயப் பிரமாணங்களினாலும் அல்ல, உங்களுடைய சபையின் எந்த பிரமாணங் களினாலும் அல்ல, சபையை சேர்ந்து கொள்ளுவதனால் அல்ல, அல்லது மற்றெந்த பிரமாணத்தினாலும் அல்ல. அது முற்றிலும் உங்களுக்கு கிருபையாய் உள்ளது, தேவனுடைய செயலாக உள்ளது. அங்கு தான் உங்கள் காரியமே உள்ளது.

434. கவனியுங்கள்.



**அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங் களினிமித்தமாகக் கூட்டப்பட்டு,...**

அதுவோ என்னுடைய முகத்தின் மேலுள்ள மூக்கைப் போன்று அவ்வளவு தெளிவாய் இருக்கிறதல்லவா? "அது வாக்குத்தத்தத்தைப் பண்ணின கிறிஸ்துவாயிருந்த அந்த சந்ததி வருமளவும் உதவியா யிருக்கும்படி கூட்டப்பட்டது."

**தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது.**

**மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல, தேவனோ ஒருவர்.**

435. இப்பொழுது, நான் இங்கே சரியாக விட்டுச் செல்கிறேன். இந்த வருகின்ற புதன் கிழமை சகோதரன் நெவில் அவர்கள் சரியாக அங்கிருந்து தொடங்கி பிரசங்கிப்பார்.

436. இப்பொழுது நாம் என்ன கூறியிருக்கிறோம் என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்களா? (சபையார் "ஆமென்" என்கின்றனர் – ஆசிரியர்.) அது மீண்டும் பிறந்த ஒரு கிறிஸ்தவனுக்கு முற்றிலும் கூடாத காரியமாக உள்ளது... ஒருவன் தான் "மீண்டும் பிறந்தவன்" என்று அழைத்துக்கொள்ளுகிறவர்களை நான் இப்பொழுது பொருட் படுத்திக் கூறவில்லை. ஒரு உண்மையான மீண்டும் பிறந்த கிறிஸ் தவன் கிருபையிலிருந்து விழுந்து போவதென்பது அவனால் அதைச் செய்ய முடியாது என்றே நான் பொருட்படுத்திக் கூறுகிறேன். அவனால் விழ முடியும், அது உண்மை, ஆனால் அவனால் ஒருபோதும் அந்த கிருபையிலிருந்து விழுந்து போக முடியாது.

ஆபிரகாம் கிருபையிலிருந்து விழுந்து போனான். நிச்சய மாகவே, அவன் விழுந்து போனான். தேவன் "அங்கேயே தரித்திருக் கும்படி" அவனிடத்தில் கூறியிருந்தார். அவனோ அங்கிருந்து புறப்பட்டு சென்று விட்டான், ஆனால் அவன் ஒருபோதும் தன்னுடைய உடன்படிக்கையை இழந்து போய்விடவில்லை. அவன் அப்பொழுதும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவனாயிருந்தான். அவன் அங்கு ஒரு தீர்க்கதரிசியாய் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் எப்பொழுதுமே

தீர்க்கதரிசியாய் இருந்தான். அவன் எப்பொழுதுமே தேவனுடையவனாக இருப்பான்.

**437.** இப்பொழுது கவனியுங்கள். வேதம், "இஸ்ரவேலர் எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள்" என்று உரைத்துள்ளது. எத்தனை பேர் அதை அறிவீர்கள்? வேதம், "இஸ்ரவேலர் எல்லோரும் இரட்சிக் கப்படுவார்கள்." இப்பொழுது, "மாம்சத்தின்படி இஸ்ரவேலராய் இருக் கிறவர்கள் இஸ்ரவேலர்கள் அல்ல, ஆனால் ஆவியின்படி இஸ்ரவே லராய் இருக்கிறவர்களே இஸ்ரவேலர்கள், (தேவனுடைய) கிருபை வரங்களும் அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே" என்று கூறுகிறது. வேதத்தில் அதற்கு அடுத்த வசனம் என்ன கூறியுள்ளது? கலாத்தியர். சரி. "இஸ்ரவேலர் எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவார்கள்." நாம் எப்படி இஸ்ரவேலர் ஆனோம். "கிறிஸ்துவுக்குள் மரித்து ஆபிரகாமின் சந்ததியாரானோம். நாம் வாக்குத்தத்தின்படி சுதந்தரராய் இருக்கிறோம்."

**438.** பவுல், "புறம்பாக யூதனானவன் யூதனல்ல, ஆனால் உள்ளத்திலே யூதனானவனே யூதன், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் கள்" என்று கூறியுள்ளான். நாம் கிறிஸ்துவனூடாக வாக்குத்தத்தி னாலே அவரை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வதி னால் நாம் ஆபிரகாமின் சந்ததியாராய் இருக்கிறோம்.

**439.** ஓ, நீங்கள் அதைப் புரிந்து கொள்ளுகிறீர்கள் என்று நான் நம்புகிறேன். உங்களால் சற்று நேரம் அதனோடு தரித்திருக்க முடிந்தால், நீங்கள் அதைப் புரிந்து கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன். இப்பொழுது நாம் இங்கே அதை முடித்து விட்டு, அதன் பின்னர் நாம் மெல்கிசேதேக்கின் பேரில் துவங்குவோம், அது மீண்டும் அதைக் கொண்டு வருகிறது. நாம் அதன் பேரில் துவங்கி... ஓ, அப்படியே அந்த முழு காரியமும் அற்புதமாய் உள்ளது. ஆனால் நாம் அந்த பொருளின் முக்கிய சாராம்சத்திற்குள்ளாக தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறோம்.

**440.** இப்பொழுது, பாருங்கள், நீங்கள் இங்கே இதை ஏற்றுக் கொண்டிருந்தால், அவ்விதமாயிருந்தால், உங்களால் அதைக் கூர்ந்து கவனித்து வாசிக்க முடிந்தால், (நலமாயிருக்கும்.) உண்மையான தீவிரமான திரித்துவக்காரர் மூன்று தேவர்கள் இருக்கிறார்கள் என்று விசுவாசிக்கிறவர் ஒரு முறை என்னிடம், "மத்தேயு 3–ம் அதிகாரத்தில்



தேவத்துவத்தில் மூன்று தனிப்பட்ட நபர்கள், மூன்று பேர் இருக்கி றார்கள் என்று முழுமையாக அறிவிக்கிறது" என்று கூறினார்.

**441.** அப்பொழுது நானோ, "நான் அதைக் காண வேண்டும்" என்றேன்.

**442.** அதற்கு அவர், "கவனியுங்கள்" என்று கூறினார். பின்னர் இந்த பிரசங்க பீடத்தில் நின்று கொண்டு அவர், "இங்கே மத்தேயு 3–ம் அதிகாரத்தைப் பாருங்கள்" என்றார். மேலும், "இயேசு (ஞானஸ் நானம் பெற்று) ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப் போல (இறங்கி, தம்மேல் வருகிறதைக்) கண்டார். அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, 'இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்' என்று உரைத்தது. அங்கு மூன்று பேர் இருந்தனர்: கரையில் குமாரன்; இடையில் பரிசுத்த ஆவி; மேலே பிதா இருந்தார்" என்றார்.

அப்பொழுது நான், "சகோதரனே, வேதவாக்கியம் *அதை* அவ்வாறு கூறவில்லையே" என்றேன்.

"ஓ, ஆம். அது அவ்வாறே கூறுகிறது" என்றார்.

அப்பொழுது நானோ, "இப்பொழுது மீண்டும் அதை வாசித்து, அது அவ்வாறு கூறுகிறதா என்பதைக் கண்டறிவோம்" என்றேன்.

**443.** இப்பொழுது, இங்கே அவருடைய காட்சி உள்ளது. *இங்கே* தேவன், குமாரன் இருக்கிறார்; *அங்கே* தேவன், பிதா இருக்கிறார்; இங்கே தேவன் பரிசுத்த ஆவி ஒரு புறாவைப் போல இருக்கிறார். இப்பொழுது கவனியுங்கள். வேதம், இயேசு ஞானஸ்நானம் பண்ணப் பட்ட போது, "குமாரன் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. அப்பொழுது ஒரு சத்தமுண்டாகி... அவர் தேவ ஆவியை, தேவனுடைய ஆவியை ஒரு புறாவைப் போல கண்டார்" என்று உரைத்துள்ளது. *அங்கே* மேலே மற்றொரு நபரல்ல. தேவ ஆவி அவருக்கு மேல் புறாவைப் (போன்று) இருந்தது. அப்பொ ழுது ஒரு சத்தமுண்டாகி, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் வாசமாயிருக்கப் பிரியமாயிருக்கிறேன்" என்றுரைத்தது. இப்பொழுது, மத்தேயு 3–ம் அதிகாரத்தை வாசித்து, அது அதைக் கூறவில்லையா

என்று பாருங்கள். புரிகிறதா? மூன்று நபர்கள் என்பது கிடையவே கிடையாது.

**444.** அந்தவிதமாக... ஒரு மனிதன் பின்வாங்கிப் போகிற போது, அவன் திரும்பவும் வருவதென்பது கூடாத காரியமாய் உள்ளது என்று அது கூறவில்லை. அது அதைக் கூறவில்லை. அது அதைக் கூறவேயில்லை. அது, "அவன் ஒரு முறை அங்கே இருந்த பிறகு, (மறுதலித்துப் போனவனை) திரும்பவும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்" என்றே கூறுகிறது. எனவே அப்படிப்பட்டவனால் திரும்பி வர முடியாது.

**445.** வேதம், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், அவனால் பாவம் செய்ய முடியாது. ஏனெனில் தேவனுடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது, அவனால் பாவம் செய்ய முடியாது" என்று கூறியுள்ளது. என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்வதற்கு அங்கே ஒரு பலி இருக்கும் போது, நான் எப்படி ஒரு பாவியாக அழைக்கப்பட முடியும்? மரணமானது எனக்குக் கிரயமாக செலுத்தப் பட்டு விட்டபோது, நான் எப்படி மரிக்க முடியும்? நான் நித்திய ஜீவனைப் பெற்றுள்ள போது, நான் எப்படி மரிக்க முடியும்? என்னால் எப்படி அதைச் செய்ய முடியும்? உங்களால் அதைச் செய்ய முடியாது.

**446.** நான் இந்தப் பட்டணத்தில் மணிக்கு 60 மைல் வேகத்தில் வாகனம் ஓட்டிச் செல்லாம் என்று இந்த நகரத்தின் நகராண்மை கழகத் தலைவரிடத்திலிருந்து எழுத்து மூலமாக அனுமதி பெற்றிருக்கும் போது, நான் மணிக்கு 60 மைல் வேகத்தில் செல்வதற்காக எந்த அதிகாரி என்னை கைது செய்ய முடியும்? உங்களால் எப்படி அதைச் செய்ய முடியும்? நான் அவ்வாறு ஓட்டிச் செல்லலாம் என்ற ஒரு அனுமதிச் சீட்டை நகராண்மைக் கழகத் தலைவரிடத்திலிருந்து பெற்றுள்ளேன். எனவே அதிகாரியால் என்னைக் கைது செய்யவே முடியாது. அவருடைய – அவருடைய... அவர் ஊதல்களை ஊதலாம், இன்னும் மற்ற எல்லா காரியங்களையும் செய்தாலும், என்னால் அதைப் பொருட்படுத்தாமல் செல்ல முடியும். அது எந்தவொரு காரியத்தையும் பொருட்படுத்துகிறதில்லை. நான் ஒரு அனுமதி சீட்டைப் பெற்றுக் கொண்டேன்.

**447.** அவருடைய கிருபை மற்றும் அன்பின் காரணமாக கிறிஸ்து எனக்காக மரித்த பிறகு நான் அவருடைய நீதியான பிறகு, நான் எப்படி பாவியாக இருக்க முடியும்? எனக்கும் தேவனுக்குமிடையே



ஒரு பலி இருக்கும் போது, என்னால் எப்படி பாவம் செய்ய முடியும்? என்னால் பாவம் செய்ய முடியாது. அதைச் செய்ய முடியாதே. தேவன் என்னை ஒருபோதும் காண்கிறதில்லை; அவர் கிறிஸ்துவைக் காண்கி றார். அவர் என்னுடைய ஸ்தானத்தில் நிற்கிறார். நான் தவறாக எந்த காரியத்தையாவது செய்யும்போது, கிறிஸ்து என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளுகிறார். நான், "நான் தவறாய் இருக்கிறேன். அவர் உண்மையாய் இருக்கிறார். கர்த்தாவே, நீர் என்னுடைய இருதயத்தை அறிந்திருக்கிறீர். நான் அதை உண்மையாய் உணர்ந்து கூறுகிறேனா அல்லது இல்லையா என்பதை நீர் அறிந்திருக்கிறீர். நான் தவறாய் இருக்கிறேன். என்னை மன்னியும்" என்று என்னுடைய அறிக்கையைச் செய்துள்ளேன். தேவன் அதை ஒருபோதும் காண்கிறதில்லை. இயேசு வின் இரத்தமோ என்னை எல்லா நேரத்திலும் மூடியுள்ளது. அப்படி யிருக்க தேவனால் என்னை எப்படிப் பார்க்க முடியும்? அவரால் என்னைப் பார்க்க முடியாமல் இருக்கும் போது, எப்படி பாவத்தை எனக்குக் கணக்கிட முடியும்? நான் அதைச் செய்த உடனேயே அது மன்னிக்கப்படுகிறது. (சகோதரன் பிரன்ஹாம் தம்முடைய விரலை சொடுக்குகிறார் – ஆசிரியர்.) அது உண்மை.

**448.** இந்த விதமான சிறு சொட்டிக் குழாய் (dropper) என்பதை எடுத்துக் கொண்டு, ஒரு சிறு துளி சொட்டிக் குழாயில் முழுவதும் கறுப்பு நிற மையினை உறிஞ்சி எடுத்து, அதை வெண்மையாக்கும் திரவம் நிறைந்துள்ள தொட்டியில், அங்கே மையை விட்டு விட்டு, பின்னர் அதை மீண்டும் கண்டறிய முயற்சியுங்கள். அது அப்படியே வெண்மையாக்கும் திரவமாகவே மாறி விடுகிறது. அந்த மையானது வெண்மையாக்கும் திரவமாகி விடுகிறது. நீங்கள் கிறிஸ்து வுக்குள் இருந்தால், உங்களுடைய அறிக்கை செய்யப்பட்ட பாவமும் அந்தவிதமாகத்தான் ஆகி விடுகிறது. உங்களுக்கும் தேவனுக்கு மிடையே ஒரு வெண்மையாக்கும் திரவத்தொட்டி உள்ளது. உங்களு டைய பாவம் நீதியாக மாறி விடுகிறது, ஏனெனில் ஒரு நீதியான பலியானது அங்கே உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது.

*கடைசியாக துயரக்காற்று வீசுகின்ற*
*முடிவின் நாளிலே நான் ஆற்றண்டை வருகையில்,*

*அங்கே என்னை மகிழ்வித்து என்னுடைய இருதயத்தை சந்தோஷமடையச் செய்யும் ஒரு எதிர்பார்ப்பு உண்டு,*
*நான் யோர்தானை தனியே கடக்க வேண்டியிராது.*

**449.** அது ஒரு நல்ல காரியமாய் உள்ளது. அது ஒரு நன்மையான காரியமாய் உள்ளது. நான் அதைத் (தனியே) கடக்க வேண்டியிராது. இந்நாட்களில் ஒன்றில், நாம் பாதையின் முடிவிற்கு வரப்போகின்றோம். சூரியனும் பிரகாசிக்க மறுக்கும், அப்பொழுது தேவன் அழைப்பார்.

**450.** ஆதாம் அங்கு சென்று, ஏவாளைக் குலுக்கி, "தேனே, இதோ அது உள்ளது. இதுவே விழித்தெழும்பும்படியான நேரமாக உள்ளது" என்று கூறுவான்.

**451.** ஏவாளோ அங்கு சென்று, ஆபேலைப் பற்றிப்பிடித்து, "அன்பே வா, இதுவே விழித்தெழும்பும்படியான நேரமாக உள்ளது" என்று கூறுவாள். ஆபேல் சேத்தைப் பற்றிப்பிடிப்பான். சேத் நோவாவைப் பற்றிப்பிடிப்பான். நோவா இவ்வாறு பற்றிப்பிடிக்க... ஓ, தொடர்ந்து செய்வார்கள். தொடர்ந்து ஆபிரகாமிலிருந்து, அப்படியே அவர்கள் வருவார்கள். தேவ குமாரன் வரும்போது, அது ஒரு பெரிய குலுக்குதலாய் விழிப்பூட்டுதலாய் இருக்கும். நாம் அந்த நாளிலே அவருடைய சாயலில் நிற்போம்.

**452.** இப்பொழுது, நீங்கள் இங்கே பாவம் செய்வீர்களானால், நீங்கள் அதற்கான அபராதத்தைச் செலுத்தப் போகிறீர்கள். நான்...

**453.** என்னுடைய சிந்தையில் அப்படியே (ஒரு காரியம்) தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறபடியால், நான் அதைக் கூறத்தான் வேண்டும். நான் 4 அல்லது 5 முறைகள் அதைக் கூறாமல் அடக்கிப் போட முயற்சித்தேன். ஆயினும் நான் அதைக் கூறியாக வேண்டும். வழக்கமாக இங்கேயிருக்கும் சர்ச் ஆஃப்காட் என்ற சபையில் மேய்ப்பனாய் இருந்து வந்த இந்த சகோதரனை எத்தனை பேருக்கு நினைவிருக்கிறது? சகோதரனே, இங்கேயிருந்த அவருடைய பெயர் என்ன? அங்கே வார்கங் (Vorgang) என்ற இடத்தில் வேலை செய்தவர். ஓ, நீங்கள் எல்லோரும்... முதல் சர்ச் ஆஃப் காட் சபை சரியாக இங்கே அந்த மூலையில் தான் இருந்தது. அல்லது,



வழக்கமாக ராலே என்ற இடத்தில், பொருளாதார பற்றாக்குறையின் போது, வியாபாரம் செய்வார்கள். அவர் ஒரு உண்மையான தேவ பக்தியுள்ள பரிசுத்த மனிதன். சகோதரன் ஸ்மித் (அதன் பின்னர்) அந்த சபையில் அவருடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டார். நான் (இன்னும்) ஒரு சில நிமிடங்களில் அவருடைய பெயரைக் கூறவுள்ளேன். அவர் தேவனால் இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனாயிருந்தார்.

**454.** நினைவிருக்கட்டும், நீங்கள் திருத்துதலை ஏற்றுக் கொண்டு நடக்கவில்லை என்றால், ஒரு கிறிஸ்தவனாய் இருந்து நீங்கள் ஒரு தவறான காரியத்தைச் செய்தால், தேவன் உங்களை எச்சரிப்பார். அப்பொழுது நீங்கள் அந்த எச்சரிப்பை ஏற்றுக்கொள்ள வில்லையென்றால், அவர் உங்களை பூமியிலிருந்து எடுத்துப் போடுவார். அதைத் தான் அவர் செய்துள்ளார்.

**455.** வேதாகமத்தில், உங்களுக்கு நினைவிருக்கிறதா? அந்த கொரிந்தியரின் சபையைப் பாருங்கள். அவன் அவர்கள் யாராயிருந்தன ரென்றும், கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய நிலைமை என்னவென் பதையும் அவர்களுக்குக் கூறினான். ஆனால், என்ன சம்பவிக்கப் போவதாய் இருந்தது என்பதைக் குறித்து, அவன் அவர்களை எச்சரித்தான். அவர்கள் தங்களைத் திருத்திக் கொண்டு, தேவனோடு சரிப்படுத்திக் கொண்டனர்.

**456.** இந்த சகோதரன், அவர் ஒரு அற்புதமான சகோதரனாக இருந்தார். அவர் தேவனால் இரட்சிக்கப்பட்ட ஒரு நபர் என்று நான் நம்புகிறேன். அவருக்கு வார்கெங்ஸ் என்ற இடத்தில், இங்கே ஒரு வேலை கிடைத்தது. அவருடைய ஜனங்களில் சிலர் இங்கே உட்கார்ந்து கொண்டிருந்தால், (நீங்கள் இதைத் தவறாக) எடுத்துக் கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களா என்பதை நான் அறியேன். ஆனால் ராம்சே, சகோதரன் ராம்சே, இங்கே சர்ச் ஆஃப் காட் என்ற சபையிலிருந்த சகோதரன் ராம்சே அவர்களை எத்தனை பேருக்கு நினைவிருக்கிறது? நிச்சயமாக உங்களுக்கு நினைவிருக்கும். அற்புதமான எளிய மனிதன். அவர் வழக்கமாக என் வீட்டிற்கு வருவார். அப்பொழுது நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து பேசுவோம். நாங்கள் அங்கே அமர்ந்து (உரையாடி), ஒருவர் கரத்தை ஒருவர் பிடித்துக் கொண்டு அழுவோம். அவர் ஒரு உண்மையான கிறிஸ்தவர்.

**457.** ஒருநாள் நான் வெளிநாட்டிலிருந்து, ஒரு கூட்டத்தை முடித்து விட்டு வந்து கொண்டிருந்த போது, என்னுடைய காரை பரிசோதித்துப் பார்க்க நான் அங்குள்ள அவ்விடத்திற்குச் சென்றிருந் தேன். அப்பொழுது சகோதரன் ராம்சே, "பில்லி, நான் உங்களுக்காக என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

**458.** அதற்கு நானோ, "சகோதரன் ராம்சே அவர்களே, என்னு டைய காரை பரிசோதித்துப் பாருங்கள். எண்ணெயை மாற்றுங்கள்" என்றேன்.

**459.** அப்பொழுது அவர், "சரி, அற்புதம்" என்றார். மேலும் அவர், "உங்களுக்கு ஒரு அருமையான கூட்டம் இருந்ததா?" என்று கேட்டார்.

**460.** அதற்கு நானோ, "ஓ, சகோதரன் ராம்சே, அது அற்புதமாக இருந்தது" என்றேன். மேலும் நான், "நீங்களும் எப்பொழுதாவது என்னோடு கூட வர நான் விரும்புகிறேன். நீர் என்னோடு வர மாட்டீரா?" என்று கேட்டேன்.

அப்பொழுது அவரோ, "பில்லி, நான் இனிமேல் கர்த்தரைச் சேவிக்கப் போவதில்லை" என்றார்.

நான் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, "நீர் என்ன கூறுகிறீர்?" என்று கேட்டேன்.

**461.** அவர் அப்பொழுதும் அதே விதமாக, "நான் இனிமேல் அவரை சேவிக்கப்போவதில்லை" என்று கூறி நடந்து சென்று விட்டார்.

**462.** அப்பொழுது நான், "ஓ, அவர் விளையாட்டுத்தனமாகக் கூறிக் கொண்டிருக்கிறார்" என்று எண்ணினேன். நானும் அங்கு வேறெங்கோ சென்று விட்டேன்.

**463.** பின்னர் திரும்பி வந்து, என்னுடைய காரை எடுத்துக் கொண்டு வந்து விட்டேன். நான் வீட்டிற்கு வந்து, "நான் இனிமேல் கர்த்தரைச் சேவிக்கப் போவதில்லை" என்பதைக் குறித்து சிந்திக்கத் துவங்கினேன்.

**464.** கர்த்தர் அதை என்னுடைய இருதயத்தில் போட திரும்பிச் சென்று மீண்டும் அதை அவரிடத்தில் கேட்கச் சென்றேன். ஆகையால் நான், "மேடா, இங்கேயே இரு" என்றேன்.



**465.** அப்பொழுது நான் உள்ளே சென்று காரில் ஏறி, மீண்டும் வார்கேங்ஸ் என்ற இடத்திற்கு சென்று அங்கு நிறுத்தினேன். அப்பொழுது நான், "சகோதரன் ராம்சே, நான் உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்" என்று கேட்டேன்.

அதற்கு அவரோ, "சரி பில்லி, அது என்ன?" என்று கேட்டார்.

அப்பொழுது நான், "நீர் கொஞ்ச நேரத்திற்கு முன்னர் நீர் கர்த்தரை இனிமேல் சேவிக்கப்போவதில்லை என்று கூறினீர். நீர் என்னை நையாண்டி தானே செய்து கொண்டிருந்தீர். நீர் நையாண்டி செய்து கொண்டிருந்தீர் அல்லவா?" என்று கேட்டேன்.

அதற்கு அவரோ, "இல்லை" என்றார்.

அப்பாழுது நான், "சகோதரன் ராம்சே, நீர் – நீர் அந்த அர்த்தத்தில் கூறவில்லை தானே" என்றேன்.

அதற்கு அவரோ, "அந்த அர்த்தத்தில் தான் கூறினேன்" என்றார்.

அப்பொழுது நான், "நீர் அவரை நேசிக்கவில்லையா?" என்றேன்.

அதற்கு அவர், "நான் அவரை நேசித்திருந்தால், அவரைச் சேவிப்பேன், பில்லி, நான் சேவிக்க மாட்டேனா?" என்று கூறி, பின்னர் நடந்து சென்று விட்டார்.

அப்பொழுது நான் எண்ணிப்பார்த்தேன். மேலும், "சகோதரன் ராம்சே, நீர் இப்படி கூறுகிறீரே!" என்றேன்.

அதற்கு அவர், "நான் அதைக் குறித்து இனிமேல் பேசவே விரும்பவில்லை" என்று கூறி விட்டார்.

**466.** நான் வீட்டிற்குச் சென்று, பின்னர் ஒரு அறைக்குள்ளாகச் சென்று கதவை மூடிக் கொண்டேன். ஓ, நீங்கள் உண்மையாகவே, பாரமாயிருப்பதை எப்படி உணருவீர்கள் என்பதை நீங்களே அறிவீர்கள். அதாவது ஒரு குழந்தையினிடத்திலிருந்து இனிப்புத் தின்பண்டத்தை அல்லது ஏதோவொன்றைப் பிடிங்கிக் கொண்டால், அதற்கு எப்படி இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே நான் – நான், "என்ன? இது நடந்திருக்க முடியாதே, நிச்சயமாகவே சகோதரன் ராம்சேக்கு ஏதோ காரியம் சம்பவித்திருக்க வேண்டும்" என்று எண்ணினேன்.

**467.** அங்கே ஜிம்மி என்ற பெயர் கொண்ட கறுப்பு நிறத்தை சார்ந்த ஒரு சிறு வாலிபன் இருக்கிறான். அவன் இங்கே சபைக்கு வருகிறான். அவன் ஒரு காலை ஒருவிதமாக நொண்டி நொண்டி நடப்பதை நீங்கள் அறிவீர்கள். நான் அவனுடைய பெயரை மறந்து விட்டேன். அவன் அங்கே வார்கங் என்ற இடத்தில் இருந்த பழைய உபயோகமற்ற பொருட்களை அழிக்கும் தொழிற்சாலையில் பணிபுரிகி றான். அவன் என்னைச் சந்தித்து, "சங்கை பிரன்ஹாம் அவர்களே, உமக்கு ஒன்று தெரியுமா? இங்குள்ள இந்த வேதபண்டிதர் ராம்சே அவர்களுக்கு என்ன சம்பவித்தது என்பதைக் குறித்து எனக்கு தெரியாது, 'நாங்கள் இங்கே எங்களுடைய வாயைக் கூடத் திறக்க பயப்படுகிறோம்' என்று அவரிடத்தில் அன்றொரு நாள் கூறினேன். மேலும் 'நீரோ தேவபக்தியுள்ள ஒரு மனிதராய் இருக்கிறீரே' என்று கூறினேன். ஆனால் அவரோ தன்னுடைய பிரசங்கியாருக்கான உரிமை சான்றிதழை (license) எடுத்து, அதை இரண்டாகக் கிழித்து, அங்கிருந்த குப்பைத் தொட்டிக்குச் சென்று, அந்த கிழித்தத் துண்டு களை அதில் வீசி எறிந்து விட்டார். மேலும் அவர், 'நான் இதைக் கொண்டு இனிமேல் எந்த காரியத்தையும் செய்ய விரும்பவில்லை' என்று என்னிடத்தில் கூறினார்" என்றான்.

அப்பொழுது அவன், "ஹே, திருவாளரே! நீர் அதைச் செய்யக் கூடாது" என்றானாம்.

அதற்கு அவரோ, "ஓ, ஜிம், நான் கர்த்தரை சேவித்துக் கொண் டிருப்பது முடிந்து போயிற்று" என்றாராம்.

எனவே அவர் அவ்வாறு கூறிவிட்டுப் போகையில், இவரோ "நீர் அதை அந்த அர்த்தத்தில் கூறவில்லையே" என்றான்.

**468.** மேலும் அவன் "அவர் உழைப்பாளர் தினத்தன்று வந்து, தன்னுடைய காரின் அடைப்பான்களை சுத்தம் செய்யப் போவதாக என்னிடத்தில் கூறினார்" என்றான். அது அந்த நாள் தான் என்று நான் நம்புகிறேன். "மேலும் அவர், 'இப்பொழுது, ஜிம், நீ வந்து எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்' என்று கூறினார்" என்று கூறினான்.



**469.** அப்பொழுது அவன், "நான் சபைக்குச் சென்று வந்த பிறகே நான் உமக்கு உதவி செய்வேன், நான் முதலில் சபைக்குச் செல்ல வேண்டும்" என்று கூறினானாம்.

**470.** அப்பொழுது அவன் சபையிலிருந்து திரும்பிச் சென்ற போது, "திரு.ராம்சே அவர்களோ தன்னுடைய காரின் அடைப்பான் களைக் கழற்றி சுத்தப்படுத்தி, கொண்டிருந்தாராம். அப்பொழுது அவர், 'ஜிம்மி, ஆற்றுக்கு அப்புறமாகச் சென்று வர வேண்டும். (ஏனென்றால்), இங்கே மதுபானக்கடை மூடியுள்ளது. எனவே நீ ஆற்றுக்கு அப்புற மாகச் சென்று, எனக்கு ஒரு பெட்டி நிறைய மதுபானம் (beer) வாங்கிக் கொண்டு வா' என்றாராம்" என்று கூறினான்.

**471.** அதற்கு அவனோ, "திரு. ராம்சே அவர்களே, நான் அநேக காரியங்களில் குற்றவாளியாக இருந்து வருகிறேன். ஆனால் நான் ஒருபோதும் ஒரு கர்த்தருடைய ஊழியக்காரருக்கு ஒரு பெட்டி மதுபானம் வாங்கித்தரும் குற்றவாளியாக மாட்டேன்" என்று கூறிவிட்டா ராம். மேலும் அவன், "இல்லை, ஐயா, நான் அதை ஒருபோதும் செய்ய மாட்டேன்" என்று கூறினானாம்.

**472.** அதற்கு அவரோ, "இருக்கட்டும் பரவாயில்லை, ஜிம், போய் அதை வாங்கிக் கொண்டு வா" என்றாராம்.

**473.** அப்பொழுது அவன், "திரு. ராம்சே அவர்களே, நான் உம்முடைய காரின் அடைப்பான்களைச் சுத்தம் செய்கிறேன். ஆனால் உங்களுக்கு மதுபானம் வாங்க வேண்டுமானால், நீங்களே போய் அதை உங்களுக்கு வாங்கிக் கொள்ளுங்கள்" என்றானாம். மேலும் அவன், "நான் அதைப் போன்ற எந்த ஒரு காரியத்தையும் கர்த்தருடைய ஒரு ஊழியக்காரனுக்கு வாங்கித்தர ஒரு போதும் போகவே மாட்டேன்" என்றாராம்.

**474.** எனவே ராம்சே, ஜிம்மியினுடைய காரை எடுத்துக் கொண்டு அங்கே ஆற்றுக்கு அப்புறமாகச் சென்று, ஒரு பெட்டி மதுபானத்தை வாங்கிக் கொண்டு திரும்பி வந்து, half tead up அதை வைத்து குடித்துக் கொண்டிருந்தாராம்.

**475.** அவர் அவ்வாறு செய்யத் துவங்கினதும் சுகவீனமாகி விட்டாராம். பார்த்தீர்களா? தேவனால் அவரிடத்தில் பேச முடியவில்லை. நான் அவரை எச்சரித்தேன். என்னால் முடிந்த ஒவ்வொரு காரியத்

தையும் செய்தேன். சகோதரன் ஸ்மித் அவர்களும் அவரண்டை சென்று அவரை எச்சரித்தார், ஒவ்வொருவரும் அவருக்காக அவர்களால் செய்ய முடிந்த ஒவ்வொரு காரியத்தையும் செய்ய முயற்சித்தனர். அப்பொழுதும் அவர் தனது தலையை அசைத்து மறுப்பையே தெரிவித்தார். என்ன சம்பவித்தது? அவர் சுகவீனமடைந்து மரித்துப் போய் விட்டார். அவர் ஒரு இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனாய் இருந்தார் என்பதையே அது காண்பித்தது. தேவனால் அவரைக் கீழ்ப்படிதலுக்கு கொண்டு வர முடியவில்லை என்றால், அப்பொழுது அவர் அவரை பூமியிலிருந்து எடுத்து, பரலோக வீட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டியவராய் இருக்கிறார். அதைத் தான் சரியாக வேதம் உரைத்துள்ளது. அதுதான் வேதாகம வாக்குத்தத்தங்களாகும். நீங்கள் திருத்துதலை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், அப்பொழுது நீங்கள் பரலோக வீட்டிற்கு வந்தாக வேண்டும்.

**476.** ஆகையால், தேவன் உங்களை இரட்சித்த பிறகு, அவரால் உங்களை இழக்க முடியாது. ஆனால் அவரால் உங்களுடைய நாட்களை இங்கே குறைத்துப்போடமுடியும். நீங்கள் செய்துள்ள ஒவ்வொரு பாவத்துக்காகவும் அபராதத்தை செலுத்த வைக்க முடியும். ஆகையால், நீங்கள் பாவம் செய்தால், நீங்கள் என்ன செய்துள்ளீர்களோ அதற்கான அபராதத்தை செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். அதை அப்படியே நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

**477.** இப்பொழுது கர்த்தர் உங்களோடு இருப்பாராக. சகோதரர் ராம்சே இரட்சிக்கப்பட்டிருந்தார் என்று நான் இன்றிரவு நம்புகிறேன். நான் அதை முற்றிலுமாய் விசுவாசிக்கிறேன். ஆனால் அவர் அப்படியே தேவனுக்கு கீழ்ப்படியாதவராய் இருந்த போது, அவர் தேவனுக்குக் கீழ்ப்படியாதவராய் இருந்த போது, தேவன் அவரைப் (பரலோக) வீட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டியதாய் இருந்தது. அந்த ஒரு காரியம் மாத்திரமே செய்ய வேண்டியதாய் உள்ளது. ஏனென்றால் அது என்னவாக இருந்தது? "பரிசுத்தமாக்கப்பட்ட அந்த இரத்தத்திற்கு நிந்தையையும் அவமானத்தையும் அவர் கொண்டு வருவார்." அது சரி தானே? "உடன்படிக்கையின் (இரத்தத்தை) அசுத்தமென்றெண்ணி," அதைத் தான் சரியாக எபிரெயர் நிரூபம் கூறினதாய் இருக்கவில்லையா? புரிகிறதா? அவர் இழக்கப்பட்டு போவதென்பது கூடாத காரியம். ஆனால் அவர் அவமானத்தையும் வெட்கத்தையும் கொண்டு



வருவார். ஆகையால் தேவன் அவரை பூமியிலிருந்து எடுத்து, பரலோக வீட்டிற்கு அழைத்து வருவார். அதுவே சரியாக சம்பவித்திருந்தது.

நாம் அப்படியே நம்முடைய தலைகளை ஜெபத்திற்காக சற்று நேரம் வணங்கியிருக்கையில், இப்பொழுது கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

**478.** இப்பொழுது, மகா பரிசுத்தமும் கிருபையுமுள்ள பிதாவே, நீர் எங்களை விட்டு விலகுவதுமில்லை எங்களை கைவிடுகிறதுமில்லை என்று நாங்கள் பெற்றுள்ள வாக்குத்தத்தத்திற்காக நாங்கள் உமக்கு உண்மையாகவே நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். நீர் ஜீவிய காலமெல்லாம் எங்களோடு வருவதாகவும், மரணத்திலும் நீர் எங்களுக்கருகில் இருப்பதாகவும், நீர் வாக்களித்திருக்கிறீர். நாங்கள் நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கிறோம் என்று நீர் எங்களுக்கு வாக்களித்தீர். நீர் அதை எங்களுக்கு இலவசமாய் அளித்தீர். நாங்கள் அதை ஒருபோதும் இழந்து போக முடியாது. "என்னிடத்தில் வருகிற யாவருக்கும் நித்திய ஜீவன் உண்டு." அது நித்திய ஜீவனாய் இருக்குமானால், அதற்கு முடிவே கிடையாது. நீர் கடைசி நாளில் எங்களை எழுப்புவதாக வாக்களித்தீர். நாங்கள் அதற்கு மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். உம்முடைய வார்த்தையை நீர் எங்களுக்கு போதிப்பதற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். அது எங்களுக்கு ஒரு நிச்சயமான நம்பிக்கையைத் தருகிறது. அது எங்களுடைய பிதா அன்பாய் இருக்கிறார் என்பதை நாங்கள் அறிந்து கொள்ளும்படி செய்கிறது. அவர் எங்களை நேசிக்கிறார், அவர் எங்களைத் தெரிந்து கொண்டார். நீர், "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, ஆனால் நான் உங்களைத் தெரிந்து கொண்டு, உங்களை நியமனம் செய்தேன்" என்றீர். பிதாவே, நீர் அவ்வண்ணம் செய்துள்ளபடியால், நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்களாய் இன்றிரவு அநேகர் இங்கே அமர்ந்து கொண்டு, இயேசு கிறிஸ்துவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆவியின் கனிகளான தயவு, சாந்தம், தாழ்மை, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, நற்குணம் ஆகியவை அவர்களுடைய ஜீவியத்தை பின்தொடருகின்றன. நாங்கள் அதற்காக நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

**479.** பிதாவே, இன்றிரவு இங்குள்ள யாரேனும் அந்த கனிகள் அவர்களைப் பின்தொடராதவர்களாய் இருக்கிறார்கள் என்றால், அவர்

களுக்காகவும் நாங்கள் ஜெபிக்கிறோம். ஆனால் இவர்களோ ஏதோவொரு நம்ப முடியாத காரியத்தின் மேல் சார்ந்து கொண்டிருக்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் ஏதோவொரு நாள் கிளர்ச்சி அடைந்தனர், ஏனென்றால் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டனர், அவர்கள் நலமாக உணர்ந்தனர், அவர்கள் சத்தமிட்டிருக்கலாம், அவர்கள் அநேக காரியங்களைச் செய்திருக்கலாம். ஆனால், பிதாவே, அவர்கள் ஆவியின் கனியைப் பெற்றிருக்கவில்லை என்றால், நாளுக்கு நாள் அது அவர்களை நிலையான அன்பிலும், அவர்களுடைய சத்துருக்களை மன்னிப்பதிலும், அவர்களுடைய தவறுகளைச் சரி செய்து கொள்வதிலும், சமாதானமாகவும், அன்பாகவும் ஜீவிப்பதிலும், ஒருவரிடத்தில் ஒருவர் இனிமையாயும், தயவாயும் இருப்பதிலும், சபைக்கான ஒரு வைராக்கியத்திலும், கிறிஸ்துவுக்கும் அவருடைய பிள்ளைகளுக்குமான அன்பிலுமான கனிகள் அவர்களைப் பின்தொடரவில்லை என்றால், ஓ, நித்திய தேவனே, அவர்களை மன்னியும். அவர்கள் சபையின் அங்கத்தினர்களாய் இருந்தாலும், பூமிக்குரிய சரீரத்தின் அங்கத்தினர்களாய் இருந்தாலும், அவர்கள் இப்பொழுதே அந்த மாம்ச பிரகாரமான செத்த கிரியைகளை ஒருபுறம் தள்ளி வைத்து விட்டு, பூரணராகும்படிக்கு தொடர்ந்து செல்வார்களாக. கர்த்தாவே, அதை அருளும். அவர்கள் அந்த பரிபூரணமானவரிடத்திற்கு வந்து, அவர் ஒரு குற்றமுள்ள மனிதனுக்காகவும், ஒரு குற்றமுள்ள ஸ்திரீக்காகவும், ஒரு பரிபூரண பலியாக நிற்கும்படிக்கு, தங்களுடைய பாவங்களுக்கான தங்களுடைய கிருபாதார பலியை ஏற்றுக் கொள்வார்களாக. அவர்கள் என்றென்றுமாய் ஜீவிக்கும்படியான தேவனுடைய பிரசன்னத்திற்குள் வருவது வரையில் அவருடைய கிருபையையும் அன்பையும் சமாதானத்தையும் அவர்களுக்கு அளியும். பிதாவே, அதை அருளும்.

நாம் நம்முடைய தலைகளை வணங்கியிருக்கையில்:

**480.** யாரேனும் ஒரு உண்மையான அன்பின் முழுமையான இருதயத்திற்காக, அதாவது நீங்கள் எழும்பி, உங்களுடைய கசப்பான சத்துருவிடம் நடந்து சென்று, உங்களுடைய கரங்களை அவனைச் சுற்றிப் போட்டு, “சகோதரனே, நான் உங்களுக்காக ஜெபிப்பேன். நான் உங்களை நேசிக்கிறேன்” என்று கூறும்படியாக மாம்சபிரகாரமான வாழ்க்கையின் நியமங்களை, ஸ்நானங்களைக் குறித்த, உணர்ச்சிவசப்படுதல்களைக் குறித்த, அதைப் போன்ற ஒரு சிறிய மாம்ச பிரகாரமான காரியங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று விரும்பினால்,



நீங்கள் ஒரு உண்மையான அன்பின் அனுபவத்திற்காக நீங்கள் இந்த மாம்ச பிரகாரமான காரியங்களின் அனுபவங்களை மாற்றிக்கொள்ள விரும்பினால், நீங்கள் உங்களுடைய கரத்தை தேவனிடம் உயர்த்துவீர்களா? “தேவனே, இன்றிரவு என்னை ஏற்றுக் கொள்ளும். நான் இருக்க வேண்டிய விதமாக என்னை உருவாக்கும்” என்று கூறுங்கள். நான் உங்களுக்காக இங்கே பிரசங்க பீடத்திலிருந்தே ஜெபிக்கிறேன். நீங்கள் ஜெபத்தை வாஞ்சிக்கிறீர்களா? உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள்.

**481.** ஐயா, அங்கே பின்னால் உள்ள உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக. சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. வேறு யாரேனும் இருக்கிறீர்களா? ஐயா, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. “நான் அநேக வருடங்களாக சபையில் இருந்து வருகிறேன்.” ஐயா, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரனே, தேவன் இங்கே உங்களை ஆசீர்வதிப்பாராக. அங்கே பின்னாலுள்ள சிறு பெண்மணியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. “தேவன் என்னை சமாதானமுள்ளவனாயிருக்கும்படி ஆக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன்.” நீங்கள் – நீங்கள் உண்மையாகவே சீற்றம் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் என்ன செய்வதென்றே அறியாதவர்களாக இருக்கிறீர்களா? நீங்கள் சந்தேகப்படுகிறீர்களா? நீங்கள் ஏறக்குறைய முன்னும் பின்னும் அலைகழிக்கப்படுகிறீர்களா? அது உண்மையாகவே சரியா அல்லது இல்லையா என்று நீங்கள் வியப்புறுகிறீர்களா? நீங்கள் கிறிஸ்துவண்டை வரும்போது, நீங்கள் முழு உறுதியுடன் வருகின்றீர்களா? முழு அன்பின் இருதயத்தோடு வருகின்றீர்களா? நீங்கள், “அவர் என்னுடைய பிதா என்பதை நான் அறிவேன்” என்று கூறி, ஒரு பயமும் இல்லாமல், அவரண்டை நடந்து செல்வீர்களா?

**482.** ஆக்கினைத்தீர்ப்பே இல்லை, நீங்கள் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் அதை அறிவீர்கள். நீங்கள் அன்புகூர்ந்து கொண்டும், நீங்கள் மன்னித்துக் கொண்டும், நீங்கள் தயவாயும், நீங்கள் சமாதானமுள்ளவர்களாகவும், நீங்கள் சாந்தமாயும் இருக்கிற உங்களுடைய வாழ்க்கையை கவனித்துப் பாருங்கள். பரிசுத்த ஆவியின் இந்த எல்லா கனிகளும் உங்களுடைய ஜீவியத்தை நாளுக்கு நாள் பின்தொடருகின்றன. நீங்கள் எந்த காரியத்தையாவது தவறாக செய்த உடனே, “ஓ, என்னே” என்பீர்கள். “நீங்கள் தவறு

செய்திருக்கிறீர்கள்" என்று அப்படியே அது உங்களுடைய சிந்தையில் தோன்றின உடனே, நீங்கள் அப்பொழுதே அதை உடனடியாக சரி செய்து கொள்ளுகிறீர்கள். பின்னர் போய் அதை சரிசெய்து கொள்ள லாம் என்று அடுத்த நிமிடம் வரை காத்திருப்பதில்லை. நீங்கள் அவ்வாறு சரிசெய்து கொள்ளவில்லை என்றால், நல்லது, நீங்கள் கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றிருக்கவில்லை. நீங்கள் ஒரு நல்ல ஸ்திரீயாக இருக்கலாம், நீங்கள் ஒரு நல்ல மனிதனாக இருக்கலாம், நீங்கள் சபையில் நல்ல எண்ணமுடையவர்களாக இருக்கலாம், நீங்கள் அக்கம்பக்கத்திலுள்ளவர்களிடத்தில் நல்ல எண்ணமுடையவர்களாக இருக்கலாம், ஆனால் நீங்கள் அந்த பரிபூரணமாகுதல் அண்டைக்கு நீங்கள் கிறிஸ்துவில் முழுமையாக நம்பிக்கை கொண்டிருக்கிற ஸ்தா னத்திற்கு தொடர்ந்து போயிருக்கிறீர்களா? இதனைக் கொண்டு உனக்கு முத்திரையளிக்கிறார். "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது." அதன் பின்னரே தேவன் அவனுக்கு ஒரு உறுதிப்படுத்தலாக விருத்தசேதனம் என்னும் முத்தி ரையை அளித்தார்.

**483.** இப்பொழுது நீங்களோ, "நான் தேவனை விசுவாசிக்கி றேன். நான் ஒரு அறிக்கையைச் செய்து விட்டேன்" என்று கூறலாம். ஆனால் நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை நிரூபிக்கும் படியாக உங்களுடைய ஜீவியத்தை ஆதரிக்கும்படியாக அன்பையும், சந்தோஷத்தையும், ஆவியின் கனிகளையும் உடைய பரிசுத்த ஆவியின் முத்திரையை தேவன் உங்களுக்கு அளித்தாரா? அவர் அதை செய்திருக்கவில்லை என்றால், அப்பொழுது அவர் உங்களுடைய விசுவாசத்தை இன்னும் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. நீங்கள் வெறுமனே ஒரு அறிக்கையை செய்துள்ளீர்கள். அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏதோ காரியம் தவறாய் உள்ளது. அப்படியானால் நீங்கள் அவரை ஏற்றுக் கொள்ள விரும்புகிறீர்களா? நாங்கள் ஜெபிப்பதற்கு முன்பு, வேறு யாரேனும் இருந்தால், உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள்.

**484.** வாலிப பெண்மணியே, தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக. அங்கே பின்னாலுள்ள உங்களையும் கூட தேவன் ஆசீர்வதிப் பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சரி, நாங்கள் ஜெபிப் பதற்கு முன்னர் வேறு யாரேனும் இருக்கிறீர்களா? சரி. அங்கே பின்னாலுள்ள சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.



சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. என் சகோதரனே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது சரி. சுமார் பத்து அல்லது பதினைந்து கரங்கள் மேலே உயர்த்தப்பட்டுள்ளன.

இப்பொழுது நாம் ஜெபம் செய்வோமாக.

**485.** ஸ்தோத்தரிக்கப்பட்ட கர்த்தாவே, அவர்கள் தங்களுடைய இருக்கையிலே பீடத்தைக் கண்டறிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்க ளுடைய இருக்கையிலே அவர்கள் இப்பொழுது எங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களோ அங்கேயே அவர்கள் "தவறாய்" இருக்கிறார் கள் என்று அவர்களுடைய இருதயங்களில் நீர் பேசினீர். அவர்களு டைய இருக்கைகளிலேயே அவர்கள் "காலமுழுவதும் இயேசுவைப்போல் இருக்க வேண்டும்" என்ற வாஞ்சையை அவர்களுடைய இருதயத்திலே நீர் வைத்திருக்கிறீர்.

**486.** அவர்கள் தங்களுடைய ஜீவியம் மாற்றப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். அவர்கள் சாந்தமாயும் தாழ்மையாயும் இருக்க விரும்புகிறார்கள். அவர்கள் கனிவாயும் முழுமையான பொறுமையாயும் இருக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். அவர்கள் நீடிய பொறுமை யையும் சகிப்புத்தன்மையையும் உடையவர்களாய் இருக்க வேண்டு மென்று விரும்புகிறார்கள். அவர்கள் கிறிஸ்தவரைப் போன்று இருக்க வேண்டுமென்றும் அவர்கள் வீதியில் செல்லும் போது, "அந்த மனிதன் உண்மையாகவே ஒரு கிறிஸ்தவன். அந்த ஸ்திரீ உண்மையாகவே ஒரு கிறிஸ்தவள். ஓ, அவர்கள் மிகுந்த கனிவும் சாந்தமும் இனிமையுமான ஜனங்கள்!" என்று உலகம் கூறும் அளவிற்கு கிறிஸ்துவைப் போல் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

**487.** கர்த்தாவே, இன்றிரவே அவர்கள் அந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள அருள்புரியும். அவர்கள் ஒருபோதும் தங்களுடைய சபை திறமையின் பேரில் சார்ந்து கொண்டிராமல் தங்களுடைய துன்பங்களை எந்த சபையின் மேலும் எந்த ஸ்தாபனத்தின் மேலும் வைக்கும்படி சாராதிருப்பார்களாக; தங்களுடைய உணர்ச்சிவசப்படுதல் கள் மேலும் எந்த நம்ப முடியாத காரியத்தின் மேலும் எப்படிப்பட்ட உணர்ச்சிபூர்வமானதின் மேலும், ஏதோ காரியம் சம்பவித்துள்ளது என்பதன் பேரிலும் சாராதிருப்பார்களாக; அவர்கள் சத்தமிடலாம்,

அந்நிய பாஷையில் பேசலாம், அல்லது வேறெந்த காரியம் வேண்டு மானாலும் செய்யலாம்.

**488.** ஓ நித்திய தேவனே, அவர்கள் அதன் பேரில் பரலோகத் துக்கு செல்லும்படி நம்பிக்கை வைக்க முயற்சிக்காமல் இருப்பார்களாக, அது அநேக சமயங்களில் மிக மோசமாய் தவறிப் போவதை நாங்கள் கண்டுள்ளோம். நீர் அது தவறிப்போகும் என்று கூறினீர். "அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்து போகும்! தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்து போகும். அறிவானாலும் ஒழிந்து போகும். ஓ, இந்த எல்லா காரியங்களும் வரங்களும் கூட சுகமளிக்கும் அற்புதங்களும் கூட, அவைகள் ஒழிந்து போய் விடும். அந்த தெய்வீக அன்பு மாத்திரமே நீடித்திருக்கும்" என்றீரே.

**489.** தேவனே, அவர்களுடைய இருதயத்தில் அதை சிருஷ்டி யும், பரிசுத்த ஆவியே கனிகளைப் பிறப்பிக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்களாக. கர்த்தாவே, நாங்கள் உம்பேரில் காத்திருக் கையில், அதை இப்பொழுதே செய்யும், நாங்கள் அதை இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

**490.** (ஒலிநாடாவில் காலியிடம் – ஆசிரியர்.) அக்கினிப் பந்துகள் பறக்கின்றன, கட்டிடத்தினூடாக காட்டுப்புறாக்கள் முன்னும் பின்னுமாக செல்வதைக் காண்பதும், கிறிஸ்து முள்முடியோடு தம்மு டைய கரங்களில் வடுக்களோடு வருவதைக் காண்பதும் அவருடைய... ஓ, அது அந்திக்கிறிஸ்துவினுடைய அமைப்பு என்று உங்களுக்குத் தெரியுமா? அவர், "இந்தக் காரியங்கள் சம்பவிக்கத் துவங்கும் போது, அப்பொழுது மேல் நோக்கிப் பாருங்கள், உங்களுடைய மீட்பு சமீபமாய் உள்ளது" என்றார். ஆகையால் அந்த காரணத்தினால் தான் என்னால் முடிந்த ஒவ்வொரு நிமிடமும் சபையைத் தொடர்ந்து பின்தொடர்ந்து, நீங்கள் உறுதியானதைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். சகோதரன் நெவில் எப்பொழுதுமே நம்மோடு இல்லாமல் இருக்கலாம். சகோதரன் நெவில் ஒரு நல்ல ஆரோக்கியமான சுவிசேஷ போதகரென்றே நான் நம்புகிறேன். எந்தவிதமான (உபதேச) காற்று இந்த பிரசங்க பீடத்தி லிருந்து எழும்பும் என்பதை நாங்கள் அறியோம், அது இங்கிருந்து எழும்பும் போது, "என் ஆடுகளோ என் சத்தத்தை அறிந்து கொள்ளும்." அந்த வார்த்தையோடு தரித்திருங்கள். அந்த வார்த் தையை விட்டு ஒரு போதும் விலகிச் செல்லாதீர்கள். நீங்கள் சரியாக



அதனோடு தரித்திருங்கள். கிறிஸ்து உங்களை விடுதலையாக்கி இருக்கிற அந்த சுயாதீனத்தில் நீங்கள் உறுதியாக நில்லுங்கள். அந்த எல்லா அடிமைத்தனத்தின் நுகங்கள் போன்றவற்றில் சிக்கிக் கொள்ள வேண்டாம். உறுதியாக நில்லுங்கள், சுயாதீனமாக நில்லுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். நாம் இந்த உலகத்தில் எந்த காரியத்தைக் குறித்தும் பயப்பட வேண்டியதேயில்லை.

**491.** நீங்கள் எப்பொழுதுமே வியப்புற்றுக் கொண்டிருக்கிறீர்கள். ஜனங்கள் ஜெபிக்கப்படுவதற்காக வருவதை நான் கவனிக்கையில், அவர்களோ வரிசையின் ஒரு பக்கமாக அஞ்சி ஒதுங்குவார்கள். அடுத்த முறை அவர்கள் ஒரு சுகமளிக்கும் கூட்டத்தைப் பார்க்கும் போது, அவர்கள் *இந்த* வரிசைக்குள் செல்வார்கள், அவர்கள் *இந்த* வரிசைக்குள்ளாகச் செல்வார்கள். நான் அவர்களை கண்டனம் செய்கிறதில்லை. அவர்கள் நோய் நிவாரணத்தைக் கண்டறிய முயற் சித்துக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்களோ தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறார்கள். தேவன் எதைச் செய்யக்கூடாது என்று கூறினாரோ அதற்கு எதிர்மாறாக நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். புரிகிறதா? நீங்கள் கிருபையின் சிங்காசனத்தண்டை தைரியமாய் நடந்து செல்லும் போது, "நீங்கள் கேட்டுக் கொண்டதை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்" என்று விசுவாசியுங்கள். அதனோடு தரித்திருங் கள். அவ்விதமாகத்தான் அது செய்யப்படுகிறது; வெறுமனே ஒரு ஊழியத்திலிருந்து மற்றொரு ஊழியத்துக்கு, ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்கு ஒரு பிரச்சார கூட்டத்திலிருந்து மற்றொரு பிரச்சாரக் கூட்டத்திற்கு, தாவிச் செல்வதல்ல.

**492.** ஏன், அவர்கள் ஒரு கூட்ட முட்டாள்தனமானவர்களைப் போல இந்த சுகமளிக்கும் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தினர். நிச்சயமாக, அவர்கள் நடத்துகிறார்கள். அது அங்கே அறிவாற்றல் கொண்ட ஜனங்களுள்ள இடத்துக்கு மாறி, அவர்கள் சுற்றும்முற்றும் பார்த்து, அவர்கள் இவை எல்லாவற்றையும் குறித்து ஆச்சரியப்படு கிறார்கள். தேவனுக்கு அந்தக் காரியங்கள் வேண்டியதில்லை. சுகமளித் தல் பெரிய பிரச்சாரக் கூட்டங்களில் இருக்க வேண்டியதில்லை. சுகமளித்தல் ஒவ்வொரு உள்ளூர் சபையிலும் இருக்க வேண்டும், இந்த எல்லா வரங்களும் கிரியை செய்யவேண்டும். ஆனால் அந்த வரங் களை விதைக்கப் போகாதீர்கள். அந்த வரத்திற்கு எந்த கவனமும் செலுத்த வேண்டாம். தேவன் உங்களை ஏதோவொன்றிற்காக

உபயோகிக்க வேண்டுமென்று விரும்பினால், அவர் அதைச் செய்வார். ஆனால், வரங்களை அளிப்பவரையே நோக்கிப் பாருங்கள்.

**493.** மார்ட்டின் லூத்தர் ஒருமுறை அந்நிய பாஷையில் பேசிய பிறகு, அவர் ஏன் அதைப் பற்றிப் பிரசங்கிக்கவில்லை என்று அவரிடம் கேட்கப்பட்டது, அப்பொழுது அவரோ, "நான் அதைப் பிரசங்கித்திருந்தால், என்னுடைய ஜனங்கள் வரத்தை அளிப்பவரை நாடுவதற்குப் பதிலாக அந்த வரத்தையே நாடிச் செல்வார்கள்" என்று கூறினார். அது உண்மை.

**494.** மூடி அவர்கள் ஒருமுறை பேசத் துவங்கின போது, அவர் மிகுந்த ஆவியின் ஏவுதலின் கீழ் பிரசங்கித்துக் கொண்டிருந்த போது, அவர் அந்நிய பாஷையில் பேசினார். அப்பொழுது அவர், "தேவனே, முனகின முட்டாள்தனமான வார்த்தைகளுக்காக என்னை மன்னியும்" என்றார். நிச்சயமாக. பார்த்தீர்களா? அவர்கள் அந்தக் காரியங்களை உடையவர்களாய் இருந்தனர். நாம் அந்தக் காரியங்களை விசுவாசிக்கிறோம், ஆனால் அவைகள் அவைகளுடைய ஸ்தானத்தில் வைக்கப்பட வேண்டும். அவைகள் அத்தாட்சிகளாக வைக்கப்பட வேண்டியதில்லை.

**495.** "பரிசுத்த ஆவியின் அத்தாட்சியாக" வேதத்தில் எந்த ஒரு காரியமும் விடப்பட்டிருக்கவில்லை, ஆவியின் கனிகள் மாத்திரமே விடப்பட்டிருக்கின்றன. இயேசு அவ்வண்ணமாகக் கூறினாரா என்ற எந்த இடத்தையாவது கண்டறியுங்கள். ஆம், ஐயா. பரிசுத்த ஆவியின் அத்தாட்சி உங்கள் ஆவியின் கனியாய் உள்ளது. இயேசு, "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்று அவ்வண்ணமாகவே கூறினார். "ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, நற்குணம், சமாதானம், தயவு, சாந்தம் என்பதாகும். சத்துருவின் கனியோ பகைமை, வெறுப்பு, துர்குணம், சண்டை போன்றவைகளாம்; அதுவே சத்துருவின் கனியாய் உள்ளது." ஆகையால், நீங்கள் ஜீவித்துக் கொண்டிருக்கிற விதத்தைக் கொண்டும் நீங்கள் தேவனோடு எங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் கொண்டுமே உங்களை நியாயந்தீர்க்க முடியும். உங்களுடைய முழு இருதயமும் அவரோடு அன்பிலிருந்தால், நீங்கள் அவரை நேசித்துக் கனிவாய் இருந்தால், அவரோடு அனுதினமும் ஜீவித்தால், அப்பொழுது நீங்கள் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறீர்கள் என்பதை நீங்களே அறிந்து கொள்கிறீர்கள். அவ்வாறு ஜீவிக்கவில்லை என்றால்



வேறுவிதமாகக் கூறினால், நீங்கள் வெறுமனே ஒரு கிறிஸ்தவர் என்று பாவனையாக நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். அது உண்மை. எல்லா மாம்ச பிரகாரமான ஆள்மாறாட்டங்களும் நிச்சயமாகவே வெளிப்படுத்தப்படும். நாம் அதை அறிவோம்.

**496.** ஆகையால் அந்தவிதமான ஒரு ஜீவியம் ஜீவிக்க வேண்டாம், நீங்கள் அந்தவிதமாக ஜீவிக்க வேண்டியதில்லை. மேலேயுள்ள ஆகாயம் முழுவதும் நன்மையினாலும் உண்மையினாலும் நிறைந்திருக்கும்போது, நீங்கள் ஏன் ஒரு மாற்றுப் பொருளை ஏற்றுக் கொள்வீர்கள்? நிச்சயமாக. நான் தேவனையே ஏற்றுக் கொள்வேனாக. அதுதான் எனக்குத் தேவை. ஆமென்.

**497.** இப்பொழுது, யாரேனும் ஜெபிக்கப்படுவதற்காக வந்தார்களா? நீங்கள் வந்திருந்தால், உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள். நாம் இந்தக்காலையில் சுகமளிக்கும் ஆராதனையை நடத்தியிருந்தோம். நான் நினைக்கிறேன்... இந்தப் பெண்மணி இங்கிருந்தாளா? சரி, சகோதரியே, அப்படியானால், நீங்கள் முன்னோக்கி வருவீர்களா? நம்முடைய சகோதரன் மூப்பர் இங்கே இப்பொழுது எண்ணெய் பூசுவதற்காக வருவார்.

(ஒலிநாடாவில் காலியிடம் – ஆசிரியர்.)

*...என்மேல் பிரகாசியும்;*

*ஓ, என்மேல் பிரகாசியும், கர்த்தாவே, என்மேல் பிரகாசியும்,*

*கலங்கரை விளக்கத்தினின்று ஒளியானது என்மேல் பிரகாசிக்கட்டும்.*

**498.** அவர் அற்புதமானவராய் இல்லையா? நாம் இப்பொழுது நம்முடைய தலைகளை உண்மையாகவே அமைதியாக தாழ்த்துவோமாக. மீண்டும் *என்மேல் பிரகாசியும்*. இப்பொழுது, இப்பொழுது ஒவ்வொருவரும் வந்து, "பிரகாசியும்..." என்ற (அந்தப் பாடலைப் பாடுவோம்.) அப்படியே அமைதியாய் இருந்து கொண்டே, உங்களுடைய ஆத்துமாவில் இப்பொழுது ஆராதியுங்கள், பாருங்கள். சுகமளிக்கும் ஆராதனை நடைபெறவிருக்கிறது. செய்தியோ முடிவடைந்துவிட்டது. நாம் ஆராதிப்போமாக.

*கலங்கரை விளக்கத்தினின்று ஒளியானது என்மேல் பிரகாசிக்கட்டும்;*

*ஓ, என்மேல் பிராகாசியும், கர்த்தாவே, என்மேல் பிரகாசியும்.*

*கலங்கரை விளக்கத்தினின்று ஒளியானது என்மேல் பிரகாசிக்கட்டும்.*

*இயேசுவைப் போலிருக்க, இயேசுவைப் போலிருக்க,*

*ஓ, புவியில் நான் காலம் முழுவதும் அவரைப் போலிருக்க வாஞ்சிக்கிறேன்;*

*பூமியிலிருந்து மகிமை வரையுள்ள ஜீவித யாத்திரை முழுவதும்,*

*நான் அவரைப்போலிருக்க வேண்டுமென்று மாத்திரமே வேண்டுகிறேன்.*

*நாம் ஒளியில் நடப்போம், அப்பேர்ப்பட்ட ஒரு அழகான ஒளியில்,*

*இரக்கத்தின் பனித்துளிகள் பிரகாசமாயிருக்கின்ற அந்த இடத்துக்கே வாருங்கள்;*

*இரவும் பகலும் நம்மைச் சுற்றி பிரகாசிக்கிற,*

*இயேசுவே உலகத்தின் ஒளி.*

*இயேசுவே உலகத்தின் ஒளி என,*

*ஒளியின் பரிசுத்தவான்களே, நீங்கள் எல்லோரும் அறிவியுங்கள்,*

*அப்பொழுது பரலோக மணிகள் ஒலிக்கும்,*

*இயேசுவே உலகத்தின்...*

நாங்கள் உம்மை ஆராதிக்கையில், கர்த்தாவே, எங்களை ஏற்றுக் கொள்ளும்.



*நாம் ஒளியில், அழகான ஒளியில் நடப்போம்*

*இரக்கத்தின் பனித்துளிகள் பிரகாசமாயிருக்கின்ற அந்த இடத்துக்கே வாருங்கள்;*

*இரவும் பகலும் நம்மைச் சுற்றி பிரகாசிக்கும்*

*இயேசுவே உலகத்தின் ஒளி.*

**499.** அந்த உரசிப்பளபளப்பாக்குவதை நீங்கள் விரும்பவில்லையா? நீங்கள் நலமாக உணருகிறீர்களா? உங்களுடைய கரத்தை உயர்த்தி சொல்லுங்கள். அந்த பண்டைய முறையிலான பாடல்கள் பண்டைய கால கீர்த்தனைகளைக் குறித்து ஏதோவொரு காரியம் உண்டு, கிறிஸ்தவ சபைகளிலுள்ள இந்த எல்லா உலகப்பிரகாரமான புதிய பாடல்களைக் காட்டிலும் நான் அந்தப் பழைய பாடல்களையே உடையவனாய் இருக்க விரும்புகிறேன். நான் அந்தப்பண்டைய காலத்தை விரும்புகிறேன். எனக்குப்பிடிக்கும்.

*இயேசுவே, என்னைச் சிலுவையண்டை வைத்துக் கொள்ளும்,* (என்னே!)

*அங்கே விலையேறப்பெற்ற ஒரு ஊற்று உண்டு,*

*யாவருக்கும் இலவசமாய் ஒரு சுகமளிக்கும் ஓடையாய்,*

*கல்வாரி ஊற்றிலிருந்து பாய்ந்தோடுகிறது.*

*நதிக்கப்பால் ஆனந்த பரவசமடைந்த என்ஆத்துமா*

*இளைப்பாறுதலைக் காணுமட்டும்*

*ஓ, என் மகிமை என்றென்றுமாய் சிலுவையிலே சிலுவையிலே இருக்கட்டும்.*

**500.** அது பாடப்பட்டுக் கொண்டிருக்கும்போது, நான் பார்ப்பதற்கு இனிமையாக எளிமையாய் உலகத்திலிருந்து போய் விடக்கூடும். உங்களாலும் முடியுமல்லவா? (சபையார், "ஆமென்" என்று கூறுகின்றனர் – ஆசிரியர்.) எவ்வளவு அற்புதமாய் உள்ளது! அவை யாவும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறதா? அவையாவும் தீர்த்து வைப்பதற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் சந்தோஷமாய் இருக்கவில்லையா? ("ஆமென்.") நீண்ட காலத்திற்கு

முன்னமே பழைய கணக்கானது முழுமையாக தீர்த்து வைக்கப் பட்டாயிற்று. நான் அவரிடத்தில், "கர்த்தாவே, எனக்கு ஆற்றண்டை எந்த தொல்லையும் இருக்க நான் விரும்பவில்லை. நான் – நான் அதைக் குறித்து இப்பொழுதே நிச்சயமுடையவனாய் இருக்க விரும்புகிறேன்" என்று கூறினேன். நான் அவரை அறிந்து கொள்ள விரும்புகிறேன். நான் அவரை அறிந்து கொள்ளவே விரும்புகிறேன்.

**501.** ஒரு பெரிய, இருண்ட குழி நம் ஒவ்வொருவருக்கும் முன்பாகவும் வைக்கப்பட்டுள்ளது. நாம் அந்த வழியிலே நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு முறையும் நம்முடைய இருதயம் துடிக்கும் போதும், நாம் அதற்கு மிக நெருக்கமாகவே நெருங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நான் அங்கு சென்றடையும் போது, நான் ஒரு கோழையைப்போல நிம்மதியின்றி கூக்குரலிட விரும்பவில்லை, "நான் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையில் நான் அவரை அறிந்துள்ளேன்" என்று இதை அறிந்தவனாய் அவருடைய நீதியின் வஸ்திரத்தால் என்னை சுற்றிக் கொண்டு அதற்குள் பிரவேசிக்க விரும்புகிறேன். அதாவது, அவர் கூப்பிடுகிற போது, அப்பொழுது நான் மரித்தோர் மத்தியிலிருந்து வெளியே வருவேன். என்னே!

**502.** என் *விசுவாசம் உம்மையே நோக்கிப் பார்க்கிறது*, நாம் அந்தப் பாடலை இப்பொழுது பாடுவோமாக.

*என் விசுவாசம் உம்மையே நோக்கிப் பார்க்கிறது,*
*நீரே கல்வாரியின் ஆட்டுக்குட்டியே,*
*ஓ, தெய்வீக இரட்சகரே.*
*நான் ஜெபிக்கையில் இப்பொழுதே எனக்குச் செவிகொடும்,*
*என்னுடைய பாவங்கள் எல்லாவற்றையும் போக்கி விடும்,*
*உம்மை விட்டு என்றுமே விலகிப் போகாதபடி*
*என்னைக் காத்துக்கொள்ளும்.*

**503.** இப்பொழுது, மகத்தான போதகரே, நீர் உம்முடைய மகா ஆச்சரியமான வார்த்தையை போதித்திருக்கிறபடியால், நாங்கள்



மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்து கொள்கிற எங்களுடைய இருதயங்களோ எடுத்துக் கொள்ளப் படுதலுக்கான கிருபையோடு அப்படியே நடுங்குகின்றன. எங்களுடைய கர்த்தராகிய இயேசுவின் எல்லா நன்மையினூடாகவும், எங்களை அழைத்து அவருடைய இரத்தத்தில் எங்களைக் கழுவி, அவர் எங்களுடைய பாவங்களை ஏற்றுக் கொண்டபடியால், தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக எங்களை மாசற்றவர்களும் குற்றமற்றவர்களுமாய் நிறுத்தியுள்ளார். எங்களிடத்திலோ பாவமேயில்லை. "தேவனோ நம்மெல்லோருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார், நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார்." ஓ, நாங்கள் எப்படியாய் அவரை, அந்த மகத்தான தேவனுடைய ஆட்டுக்குட்டியை நேசிக்கிறோம்!

**504.** பிதாவே, மற்றவர்களும் கூட, அவரை அறிந்து நேசிக்கும் படியாக நாங்கள் அவர்களுக்குக் கூறும்படியான தைரியமான வார்த்தைகளை எங்களுக்கு நீர் தர வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறோம். (ஏனென்றால்) அவர் அவர்களையும் நேசிக்கிறார். இந்தக் கிருபையை எங்களுக்குத் தாரும்.

பிதாவே, தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள்ளாக வந்துள்ள அந்தப் புதிதாய் பிறந்துள்ள குழந்தைகளுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவர்கள் எங்காவது ஒரு நல்ல சபையை தங்களுக்கு கண்டறிந்து, இந்த பழைய சரீரத்தின் தொடர் வேதனைகள் வலிகளிலிருந்து மரணம் அவர்களை விடுதலையாக்கி, அவருக்கு முன்பாக மாசற்றவர்களும், குற்றமற்றவர்களுமாய் மறுமையில் நித்திய ஜீவனோடு இருக்கும் வரையில் உம்மை சேவிப்பார்களாக. நாங்கள் அதை அவருடைய நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

பத்தி எண் 1 முதல் 216 வரை சகோதரன் பிரன்ஹாம் பேசிய, *எபிரெயர், அதிகாரம் 5 மற்றும் 6, பாகம் 1* என்ற மற்றொரு செய்தியில் உள்ளது. அந்தச் செய்தி செப்டம்பர் 8, 1957–ல் கொடுக்கப்பட்டது.

இலவச பிரதிகளுக்கு தொடர்பு கொள்க:
சகோ. A. டேவிட் லாரன்ஸ்: +91 9488089819
website: www.thefinish.in